946
உமா
ஆசிரியர்: ஜி. உமாபதி
30 NOV 1957
UMA
4

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES



M/s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T.G.N.** Grams: "ALANKAR"

நமது நேர்முக வகுப்பு

நமது கல்விஸ்தாபனத்தில் தபால்மூலம் 1957–58ம் வருட சர்க்கார் தேர்வுகளுக்கு **பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கும்– தனிப்பட்ட மாணவர்களுக்கும்** சென்னை மாகாணத்திலுள்ள கீழ்க் கண்ட **பத்து சென்டர்களில் 20–12–57 முதல் 10–2–58 வரை ஒவ்வொரு சென்டரிலும் 7 நாட்கள்வீதம்** 1. **மெட்ரூஸ் மெட்ரிகு லேஷன்**, 2. S. S. L. C., 3. **பனாரஸ் மெட்ரிகுலேஷன்**, 4. E. S. L. C., (எட்டாம் வகுப்பு), 5. **தமிழ்வித்துவான் வகுப்புகள்** ஆகிய வகுப்புகளுக்கு போதிய அனுபவமும்–முழுத்திறமையும் வாய்ந்த நமது கல்வி ஸ்தாபன M. A., B. A., L. T., வித்துவான் முதலிய **ஆசிரியர்களால் சிறந்த முறையில் நேர்முக வகுப்பு நடத்த விருக்கின்றோம்.**

வகுப்புகள் நடைபெறும் சென்டர்கள்.

1. காஞ்சிபுரம்,
2. விழுப்புரம்,
3. திருவண்ணாமலை,
4. தஞ்சாவூர்,
5. திருச்சி,
6. மதுரை,
7. குற்றாலம்,
8. ஈரோடு,
9. சேலம்,
10. தேவகோட்டை,

ஆகவே, தனிப்பட்ட மாணவர்களும், பள்ளி மாணவர்களும் நமது நேர்முக வகுப்பில் கலந்து கொண்டு வரும் சர்க்கார் தேர்வில் முழுவெற்றிபெற சலுகை அளித்துள்ளோம். நமது நேர்முக வகுப்புகளின் முழுவிவரங்களுக்கு உடன் 15 நயே பைசா ஸ்டாம்புடன் (தங்கள் முழு விலாசத்தையும் குறித்து) **விண்ணப்பிக்கவும்.**

ஸ்ரீமுருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்,

(Govt. Regd. No. 3072 :: A. No. 8)

ரிஷிவந்தியம் S. O., தென்னாற்காடு ஜில்லா.

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

பொருளடக்கம்

செடி 5 மலர் 8	டிசம்பர், 57	ஏவிளம்பி-ஹு மார்கழி-மீ

கள்ளத்தோணியாக மாறுவது ஏன்?	(தலையங்கம்)	 9
ஈ. வெ. ரா. இட்ட வகுப்புவாதத் தீ!		 10
கவர்னர் பதவிக்குத் தமிழரே வரவேண்டும்!		 12
கல்கத்தா மெயில் விபத்து		 13
உணவுப் பிரச்னையில் ஆட்சியின் கடமை		 13
உங்களுடன் ஒரு கணம்		 14
மயங்கிய தலைவி		 16
வாடா விளக்கு	(தொடர்கதை)	 19
ஆட வாரேன்!	(கவிதை)	 29
உறியடி		 31
புத்தகங்கள் வெளியிட்டேன்		 43
நான் படைத்த பாத்திரம்		 45
இரவல் இகழ்ச்சி		 47
மலரும் வண்டும்		 52
திருக் கார்த்திகையில்...!		 56
ஆலமரத்துப் பைங்கிளி!		 64
இலக்கியச் சுவை	(கட்டுரைத் தொடர்)	 69
பாரதப் பண்பு		 72
மதிப்புரை		 74
மகாதேவி	(பட உலகம்)	 77
பொறுப்பற்ற உலகம்		 78

...வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

197227

...ஆசிரியர்
...ஸ். ஆறுமுகம்

உமா

கள்ளத் தோணியாக மாறுவது ஏன்?

காங்கிரஸ் கட்சியில் கண்ணியத்தோடு இருக்கும் தமிழ் நாட்டு தியாகிகளே! நம் பாரத தேசம் விடுதலை அடைந்து சுய மரியாதை யோடு வாழ வேண்டும் என்ற ஆசை கொண்டவர்களே!

அடிமையாக இருந்தபோதே நாம் ஓரளவு சுயமரியாதையோடிருந் தோம்; ஆனால் நாடு விடுதலை அடைந்த பிறகு, அதையும் இப்போது இழந்து விட்டோம். அதற்கான காரணங்களை நீங்களே அறிவீர்கள். சொத்துக்கும் கற்புக்கும் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை என்பதை அண்மையில் பத்திரிகையில் அன்றாடம் வரும் செய்திகளிலிருந்து நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்குக் காரணம், மத்திய ஆட்சியில் அதிகாரங்கள் குவிந்து கிடப்பதனால்தான். அவைகளைப் பிரித்து, மாகாண சுய ஆட்சியிடம் தந்து, மத்திய ஆட்சி எப்போதும் பலங் கொண்டதாக இயங்கலாம்; மாறாக அதிகாரங்களைக் குவித்து வைத்திருந்தால், மத்தியாட்சியின்மீது மக்களின் நம்பிக்கை குறைந்து, இந்திய ஒற்றுமையில் பலஹீனம் ஏற்பட்டுவிடும் என்பதைத் தாழ்மை யோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

மத்திய ஆட்சியில் அங்கம் வகிக்கும் இந்நாட்டுப் பெரிய மனிதர்களே! பெருங்குடி மக்களாகிய தமிழ் மக்கள் உங்களைக் கெஞ்சுகின்றோம். வந்தோருக்கெல்லாம் வாழ்வு தந்த தமிழ் மக்கள் ஏராளமான பேர்கள் சொந்த நாட்டிலே வாழ வழியின்றிக் கள்ளத் தோணிகளாக மாறுகின்றார்கள். பிறந்த இப்பொன்னாட்டில் வாழ்வு இருந்தால், பெற்ற தாய் தந்தையரையும் தன்னையே நம்பி வாழும் அன்பு மனையாட்டியையும் மக்களையும் விட்டு ஏன் கள்ளத் தோணி ஏறிக் கடந்து செல்லுகிறார்கள்? வாழ வழியின்றித் தான்!

இதற்குக் காரணம் எம் தமிழகத்திலே தொழில் வளம் கிடை யாது. அப்படித் தொழில் வளத்தை உருவாக்க தமிழ்த் தனவந்தர் கள் முனைந்தால், அவர்களுக்கு வேண்டிய மத்திய ஆட்சியின் அனுமதியோ, மாகாண ஆட்சியின் ஒத்துழைப்போ சுலபத்தில் கிடைப் பதில்லை. இந்தச் சூழ்நிலையின் காரணமாக முதல் வைக்க முன் வந்தாலும் கூட, முக்கியமான இந்தப் பிரச்னைகளினால் முன்னுக்கு வர மறுக்கிறார்கள். ஆகவே, சின்னஞ் சிறிய நாடான இலங்கையை செழிப்புள்ளதாக ஆக்கிய பெருமையில் தமிழ் இனத்துக்கே பெரும் பங்கு உண்டு. அப்படியிருந்தும், அவர்கள் அங்கு வாழ உரிமையற் றிருக்கிறார்கள். இந்த அவல நிலை, இந்திய ஆட்சியும் இலங்கை ஆட்சியும் தமிழினம் வாழ சரியான ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வில்லை என்பதைத் தான் எடுத்துக் காட்டுகிறது. இவைகளை மாற்றி யமைக்க தமிழ் மாகாண ஆட்சியின் முயற்சியும் மத்திய ஆட்சியின் செயலும் சீக்கிரமே செயற்படாவிட்டால், 'மத்திய ஆட்சியின் உறவு ஏன்' என்ற குரல் எழுந்து கொண்டிருக்கும் இந்த மாகாணத்திலே அந்தக் குரலுக்குத் துணை செய்தவர்கள் ஆவார்கள் என்பதையும் சரியான நேரத்தில் ஞாபகப் படுத்துகின்றோம்.

ஈ. வே. ரா. இட்ட வகுப்புவாதத் தீ!

சரித்திரத்தில் இடம் பெறத் தக்க அளவுக்கு உயர்ந்த செயல்களைச் செய்பவர்களுக்கு பெரியார் என்று பெயர் கொடுக்கப்படுகிறது; பொது மக்களின் பாரபட்சமற்ற கண்ணோட்டத்திலே தனி இடம் பெறும் முறையில் உயர்ந்திருக்கும் உள்ளங்களுக்குப் பெரியார் என்று மதிப்பு கொடுக்கப் படுகிறது.

ஆனால், இன்றுள்ள நிலைமையில், பெரியார் என்றால் உடனே எல்லோருக்கும் நினைவு வருவது திரு ஈ. வே. ரா. அவர்களே யாவார்! தேசியப் போர்வையைக் களைத்தெறிந்து விட்டு, தம் பார்வையையும் மாற்றிக் கொண்டு, கழகம் அமைத்து, அதே சூழ்நிலையில் திராவிடத் தந்தையாக மாறியவர்-மாற்றப்பட்டவர் இவர். திராவிடப் பெரியாரின் நிழலினின்றும் ஒதுங்கிய தி. மு. கழகமே வெறுக்கும் வகையில் ஈ. வே. ரா. வின் செயல்கள் விபரீதமாகிக் கொண்டு வருகின்றன என்பதற்குப் பத்திரிகை அத்தாட்சியாகும்.

மக்கள் மன்றத்திற்குத் தூதனுப்பிய செய்திகள் ஒன்றா, இரண்டா?-பிராமணர்கள் நடத்தும் ஓட்டல்களுக்கு முன் நின்று மறியல் நடத்தினார்; தேசியக் கொடியை எரித்தார்; ஹிந்தி எதிர்ப்புப் போரில் முழு மூச்சோடு இறங்கினார்; பிள்ளையார் உடைப்புப் 'பணி' யிலும் ஈடுபட்டார். இவை எல்லாவற்றையும் மிஞ்சும் பாணியில், அண்மையில் இவர் அரசியல் சட்டப் புத்தகத்தை எரிக்கும் தீயில் குதித்தார்; திராவிடத் தந்தையைப் போன்று சட்டம் கண் மூடித் தூங்கவில்லை; விழித்துக் கொண்டது; திராவிடக் கழகத் தலைவரைக் கைது செய்தது; சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கும்படியும் பணித்தது.

நாம் ஜனநாயக நாட்டில் வாழ்ந்து வருகின்றோம்; இதே உண்மையை ஆள்வோரும் ஆளப் படுவோரும் விநாடிக்கு விநாடி உணருதல் அவசியம்; ஆனால் இப்படிப்பட்ட நிலை நம் நாட்டில் உருவாகிப் பண்பட்டிருக்கிறதா என்ற கேள்வி எழுமாயின், நல்ல பதில் கிடைப்பது துர்லபம்தான்! பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்ற உரிமை விதிகளைச் சாதகமாக்கிக் கொண்டு, வேண்டாத பேச்சுக்கள் பேசப்படுகின்றன; தமிழ்ப் பண்புக்கு ஒவ்வாத சம்பவங்கள் நடக்கின்றன.

இதற்கு பெரியாரின் போராட்ட வகைகளும் மேடைப் பேச்சுக்களுமே தகுந்த உதாரணங்கள்!

ஈ. வே. ரா. கூறுவது போன்று வகுப்பு வாதத்தை வளரவிட அரசியல் சட்டப் புத்தகத்திலே சட்டம் அனுமதிக்கவில்லை.

அரசியல் சட்டப் புத்தகத்தை எரிப்பதற்கு ஈ வே ரா கூறும் காரணம் இதுதான்: வகுப்பு வாதத்தை ஒழிக்க வேண்டுமாம்; சாதி பேதமற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமாம்.

பெரியாரின் இவ்விரண்டு லட்சியங்களும் எல்லோராலும் வரவேற்கத்தக்கனவேயாகும். ஆனால் கொண்ட லட்சியங்களையும் கொள்கைகளையும் செயற் படுத்தும் முறை இதுவா? அரசியல் சட்டப் புத்தகம் கொளுத்தப்பட்டவுடன், வகுப்புவாதம் சுடப்பட்டுப் பொசுங்கி விடுமா?

பாரதத்தின் எல்லைக் கோடு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது அரசியல் சட்டப் புத்தகம்; ஜனநாயக ஆட்சி அமைப்புக்கு அதுவே ஓர் அடையாளம்; உலக அரங்கில் அதற்குரியது தனி இடம்; அது அடைவது தனிப் புகழ்! இத்தகைய உயர்ந்த சட்ட நூலைக் கொளுத்துவதாக எச்சரிக்கை விடுத்தபோதே பெரியார் மீது தக்க நடவடிக்கைகளை உடனேயே எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், பெரியார்தான் தமிழ்நாட்டு அமைச்சரவையைத் தம் அரசியல்

சதுரங்கவிளையாட்டுக்கு உடந்தையாக்கிக் கொண்டிருப்பவர் ஆயிற்றே!

காலங்கடந்து ஈ.வே.ரா. கைது செய்யப்பட்டு மூன்று நாள் ஓய்வுக்குப் பிறகு விடுதலையடைந்திருக்கிறார்!

தேசிய கௌரவத்தைக் காக்கத் துடித்தும் காங்கிரஸ் ஆட்சியினருக்கு பெரியாரின் இந்த அற்பச் செயல் ஒரு சோதனையேயாகும். பத்திரிகைகள் அறிமுகப்படுத்தியுள்ள செய்தித் துணுக்குகள் நம் நெஞ்சங்களைத் துணுக்குறச் செய்துள்ளன. திருச்சி போன்ற இடங்களில் சில பிராமணர்களின குடுமிகள் அறுக்கப்பட்டு விட்டனவாம்; சிலரது பூநூல்கள் கத்தரிக்கப்பட்டனவாம்.

அறம் காக்கும் தமிழ்ப்பண்புக்கு இது ஒரு கறை!

முதுகுளத்தூர்ப் புயல் இன்னும் அடங்கவில்லை; ஆட்சியாளர்களின் நியாயமற்ற போக்கை எண்ணி மக்கள் தொடங்கிய முணுமுணுப்பு இன்னமும் ஓயவில்லை. இங்கிலையிலே மற்றுமொரு சூருவளியே வீசிவிட்டிருக்கிறது; இந்த வகுப்புவெறிச் சூருவளியை அடக்குவதில் தமிழக ஆட்சி அமைப்பு போதிய கவனம் எடுக்கவில்லையானால், பொது மக்களுக்கு தாங்கள் வாழ்வது ஜனநாயக ஆட்சி என்பது அடியோடு மறந்துவிடும்.

அவரை வெளியே விட்டு வைத்து சட்டப் புத்தகத்தைக் கொளுத்தியிருந்தால், தண்டனை பெரிதாகக் கொடுக்க வேண்டியிருக்குமே என்றுதான் மூன்று நாட்கள் காவல் தண்டனையுடன் வெளியே விட்டிருக்கிறார்கள். அந்த முதுபெரும் கிழவரைத் தண்டிக்கவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இல்லை. ஆனால்பொதுமக்கள்இதை புரிந்து கொள்ள மாட்டார்கள் என்பதாக அரசாங்கம் எண்ணியிருந்தால், பொதுமக்களை அரசாங்கம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

மாநில தமிழரசுக் கழக

பொதுக்குழுக் கூட்டம்

டிசம்பர் 8-ல் காஞ்சிபுரத்தில் நடைபெறும்

மாநில தமிழரசுக் கழக பொதுக்குழுக் கூட்டம் டிசம்பர் மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு காஞ்சிபுரத்தில் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு மாபெரும் ஊர்வலமும், மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டமும் நடைபெறும்.

தலைவர் ம. பொ. சிவஞானம், ஔவை டி. கே. ஷண்முகம், கவி கா. மு. ஷெரீப், கலைஞர் ஏ. பி. நாகராஜன், திருவாளர்கள் ஜி. உமாபதி எம். ஏ. வேணு (எம். ஏ. வி. பிக்சர்ஸ்), நாஞ்சில் பி. எஸ். மணி, சின்ன அண்ணாமலை, குடந்தை எஸ். டி. பாலு, வேலூர் வி. கே. குப்புசாமி, சரோஜினி, மதுரை விரலட்சுமி முதலிய மற்றும் பலர் கலந்து கொள்வார்கள்.

முன்னாள்—டிசம்பர் 7-ந் தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மாநில தமிழரசுக் கழக செயற்குழு காஞ்சியில் கூடி, பொதுக்குழுவின் முன்பு வைப்பதற்கான விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்யும்.

பொதுக் குழு உறுப்பினர்களுக்கு மட்டும், உணவுக்கும் தங்குவதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வரவேற்புக் குழு.

கவர்னர் பதவிக்குத் தமிழரே வரவேண்டும்!

தமிழ் நாட்டின் அரசியல் சரித்திரம் பல விதங்களிலே அதிசயம் கொண்டதாக விளங்கி வருவதைப் பொதுமக்கள் நன்கு அறிவார்கள். குறிப்பாக, ஆட்சியாளர்களின் அரசியல் விளையாட்டுக்கள் பத்திரிகைகளை நிரப்பும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்று வருகின்றன; அதே சமயத்தில் பொதுமக்களின் மனங்களை ஆட்டிப் படைக்கவும் மேற்படி செய்திகள் கை கொடுக்கின்றன என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

இப்படிப்பட்ட விசித்திரமான அரசியல் சித்து விளையாட்டுக்கள் தமிழகத்தில் எத்தனை எத்தனையோ நிகழ்ந்திருக்கின்றன; நிகழ்ந்து வருகின்றன.

ஆங்கிலேயர்கள் தங்களது ஆட்சிக்கு அனுகூலமான வகையிலே அமைத்துக்கொண்ட பதவிதான் இந்த கவர்னர் உத்தியோகம். வெள்ளையர்கள் வெளியேறியுங்கூட, இன்னமும் கவர்னர் பதவி வெளியேறவில்லை. கவர்னர் என்று ஒரு பொறுப்பை ஒதுக்கி, அதற்கென்று ஆண்டுதோறும் பல ஆயிரம் ரூபாய்களை விரயம் செய்வது அர்த்தமற்ற செயல்—தேவையற்ற அலுவல் என்று முன்னர் நாம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்திருந்தோம். பல தலைவர்களும் அவ்வப்போது இதே கருத்தை வெளியிட்டார்கள்.

நாம் நடத்தி வருவது ஜனநாயக ஆட்சி. ஆனால், மக்கள் மன்றம் எழுப்பும் பொதுக் குரலுக்கு இன்றைய ஆட்சிப் பொறுப்பினர் செவி சாய்ப்பது கிடையாது.

கவர்னர் அமைத்துதான் தீர வேண்டுமென்றாலும் தமிழகத்தின் மந்திரி சபையினருக்கு நல்ல கருத்துக்களை வெளியிட்டு அரசியல் பாதையைச் செப்பனிடும் ஓர் உயர்ந்த அலுவலாளர் இந்தக் கவர்னர். ஆகவே, தமிழ்நாட்டை எவ்வாறு தமிழ் மக்களின் தமிழ்ப் பிரதிநிதிகளே ஆளுகிறார்களோ, அவ்வாறே கவர்னராக நியமனம் பெறுபவரும் தமிழராகவே இருக்கவேண்டும்; இதுவே நியதியுங்கூட. ஏனைய மாகாணங்கள் சொல்லும் செய்திகளும் இதே அடித்தளத்தில் தான் எதிரொலிக்கின்றன.

ஆனால், நம் சென்னை மாநிலத்தின் சரித்திரம் விதிவிலக்காகவே முன்னரும் அமைந்தது; இப்போதும் அமையுமென்றும் கூறப்படுகிறது. திருவாளர்கள் பவநகர் மகாராஜா, ஸ்ரீ பிரகாசா, ஜான் போன்றோர்கள் தமிழ் மண் ஈன்றெடுத்த செல்வங்களா?—அல்ல! இப்போது தற்காலிகமாக கவர்னரின் பணியைச் செய்துவருபவரும் தமிழரல்ல!

அண்மையில் முதலமைச்சர் தலைநகர் சென்று திரும்பினரல்லவா? அப்போது அவர் புதிய கவர்னர் நியமனம் பற்றித் தெரிவித்த தகவல் பொதுமக்களிடையில் குழப்பத்தை உண்டாக்கியது. தமிழரல்லாத மூன்று பெயர்கள் கவர்னர் பீடத்தைச் சுற்றி வலம் வருகின்றனவாம்! விசித்திரமான போக்குத்தான்! தமிழகத்தின் ஆட்சிக்கு தமிழ் தெரியாதவர்களின் பெயர்கள் சொல்லப்படுகின்றன!

தேவையற்ற இந்தக் கவர்னர் பீடத்தை நீக்கிவிட வேண்டும்; இல்லையேல், தமிழ் நாட்டைச் சேர்ந்த திறமைசாலிகளிலே ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அப்போதுதான் தமிழகத்தின் அரசாட்சியில் களங்கம் படியாமல் இருக்க முடியும்! தமிழ் இன உணர்வு ஒவ்வொரு உள்ளத்திலும் நன்கு படிந்துள்ள தென்பதை இனியாவது ஆட்சியினர் உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதையும் நினைவூட்டுகின்றோம்.

கல்கத்தா மெயில் விபத்து!

ஹைதராபாத் ரயில் விபத்து, அதையடுத்து நிகழ்ந்த அரியலூர் ரயில் விபத்து இவை இரண்டும் வெவ்வேறு பகுதிகளில் நடந்தன வென்றாலும், 'அநியாயச் சேதம்' என்ற அளவிலே பாரதத்தின் கவனம் முழுவதையும் கவர்ந்தது என்பதில் சந்தேகம் கிடையாது.

சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட கல்கத்தா மெயில் விபத்து ஏந்தியிருக்கின்ற சேதி நம்மை ஆழ்ந்த துயர் அனுபவிக்கச் செய்வதுடன், அச்சப்படவும் செய்கிறது. உயிர் துறந்த மக்களுக்கு நம் அனுதாபங்கள் உரியவை.

அதே சமயத்தில் மேற்படி விபத்துக்குக் காரணமாக ஊகிக்கப்படுகின்ற நாசவேலையின் ரகசியங்களைப் பத்திரிகைகள் சொல்லக்கேட்கும்போது, நாம் அஞ்சவேண்டிய நிலைக்கும் ஆளாக்கப்படுகின்றோம்.

பின் தொடரயிருந்த 'கூட்ஸ்' வண்டியைக் கவிழ்க்கச் செய்த சதி வேலைக்கு ஆளானவர்கள் யார்? ஏன் இவ்வாறு செய்தார்கள்? அவர்களின் அரக்கச் செயலுக்குக் காரணம் வறுமையா? அல்லது பயமின்மையா?

அரசியலைச் சூதாட்டத்துக்கு உவமை காட்டிப் பேசுவது உண்டு. அதை நிரூபிக்கிறது இவ்விபத்தின் திரை மறைவுச் செய்தி. மனிதப் பண்பு இழந்தவர்களின் நாச வேலைக்கு பொதுமக்கள் பலியாவதென்றால், இந்நிலையை யாரும் அனுமதிக்கமாட்டார்கள்; விபத்திற்குக் காரணமானவர்கள் தக்க தண்டனை அனுபவிக்கும் வரை—இனியும் இம்மாதிரி அராஜகம் நிகழாதென்கின்ற உறுதிப் போக்கு உருவாகும் வரை—மக்கள் சும்மாயிருக்கவே மாட்டார்கள்.

உணவுச் சிக்கலில் ஆட்சியின் கடமை!

நாட்டு வளப்பம் பற்றிப் பாடாத புலவர் கிடையாது; படிக்காத மாணவர் இல்லை. வளம் கொழித்த நாடு நம்முடையது. தமிழகத்தில் மறுபடியும் உணவுப் பிரச்னை தலை காட்டத் தொடங்கியிருக்கின்றது.

முழு உணவுக்குக் கட்டுப்பாடு வேண்டுமென்றும், ஆண்டுதோறும் உணவு இறக்குமதி அவசியமெனவும், நியாயவிலைக் கடைகள் அதிகரிக்கப்பட்டு நன்கு கண்காணிக்கப்பட வேண்டுமென்றும், உணவு தானிய நிறுவனம் ஒன்றை அமைப்பது அவசியமெனவும் உணவுக் கமிஷன் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

உணவுப் பிரச்னை உச்ச நிலை அடையாமல் தடுக்க முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்; கோதுமையின் விநியோகத்தினாலோ, அல்லது மீன் சாப்பிடும்படி 'புத்தி மதி' கூறுவதனாலோ மேற்படி சிக்கலுக்கு விடிவு ஏற்பட முடியாது.

அரிசியை பற்றி மட்டும் மேலிடத்துக்குக் கவலையிருப்பது கிடையாது. ஏனெனில், இது தென்னிந்தியர் உணர்வுதானே என்ற அலட்சியம்!

அரசாங்கத்தின் கடமை இது:

உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும்; உழவர்களுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் ஒட்டிய உறவு ஏற்படுத்தப்பட வேண்டும். நம் நாட்டில் விளையும் உணவு தானியம் நம் நாட்டுக்கே பயன்பட ஆவன செய்ய வேண்டும்; பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற உணவுப் பொருள்கள் பொது ஜனங்களுக்கு உரிய முறையில் உதவ வேண்டும்.

அப்போது இயற்கை அன்னையின் கருணையும் கிடைக்கும் என்பது உறுதி. ★

உங்களுடன் ஒரு கணம்...

பொதுஜன விரோதிகள் என்ற பிரிவில் இடம்பெறும் ஓர் அதிசயப் பொருள்தான் இந்த வாழைப்பழத்தோல். இதன் எக்காளச் சிரிப்பிற்கு ஆளான அனுதாபத்துக்குரியவர்கள் பலர் உண்டு. அவர்களில் ஒருவரைத்தான் இம்மாதம் நாம் சந்திக்கிறோம். ஆனால், இம்மனிதரை வாழைப்பழத்தோல் மட்டும் கேலி செய்யவில்லை; பெண்கள் இருவரும் அல்லவா இவரது பரிதாப நிலை கண்டு சிரிக்கின்றார்கள்! வாழைப்பழத்தோல்—இந்த அப்பாவி—அந்த இரு பெண்கள்—ஓவிய மன்னர் திரு கே. மாதவன் அமைத்துக் கொடுத்திருக்கின்ற நாற்கோட்டு உருவத்தில் முடிந்தவர்கள் கதைமாளிகை ஒன்றை எழுப்புங்கள், பார்க்கலாம். முடிவு நாள் 31-1-58.

'வாடாவிளக்கு' வெகு விரைவாக ஓடுகிறது. 'இலக்கியச்சுவை'யின் இனிப்பு அதிகரித்து வருகிறது. சென்ற மாதம் ஆரம்பிக்கப்பட்ட 'ஆலமரத்துப் பைங்கிளி' இவ்விதழில் முடிகிறது.

சகோதரிகள் ஸ்ரீபரணி, மைதிலி, கனகவல்லி ஆகியோரின் வெவ்வேறு சிந்தனைகள் நயமாகக் காணப்படுகின்றன. திருவாளர்கள் சங்கு கணேசன், கோவி மணிசேகரன், சுப்பு ஆறுமுகம், நா. பா. வெங்கடேசன், நாக முத்தையா, ஸ்ரீ வத்ஸன் போன்றவர்களின் எழுத்துக்களும் தரம் உயர்ந்திருக்கின்றன.

'சந்தித்தோம் – சிந்தித்தோம்' பகுதிக்குப் பேராதரவு கிடைத்து வருகிறது. பொங்கல் மலரில் மேற்படி பகுதி இடம் பெறும். மலர் விளம்பரம் உங்கள் இலக்கிய நெஞ்சங்களைக் குளிர்விக்கும் என நம்புகிறோம்.

தைப் பொங்கலைப்பற்றி உங்கள் கருத்துக்களை இரண்டே இரண்டு வரிகளில் சுருக்கி பத்து நாட்களில் எழுதி அனுப்புவீர்களா!

மீண்டும் தைப்பொங்கலன்று சந்திப்போம். வணக்கம். ஆசிரியர்.

இசையமுது நாடக மன்றம் அளிக்கும் முதல் காணிக்கை

ஜாதி ரோஜா

கதை-வசனம்: **பூவை எஸ். ஆறுமுகம்**

இசையமைப்பு: புகழேந்தி   பயிற்சி: லிங்கபூஷணம்

இடம்: எழும்பூர் மியூசியம் தியேட்டர்   நாள்: 16—1—'58

உமா
பொங்கல் மலர்

1958

ம. பொ. சி, கொத்தமங்கலம் சுப்பு, கி. வா. ஜகந்நாதன், டாக்டர் மு. வ, டி. கே. சண்முகம், ரா. அ. பத்மநாபன், 'சோமு', சாண்டில்யன், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், ம. ரா. போ. குருசாமி, எம். எஸ். சுப்ரமணிய ஐயர், கவி கா. மு. ஷெரீப், கு. மா. பாலசுப்பிரமணியம், கு. சா. கிருஷ்ணமூர்த்தி, சகுந்தலா பாரதி, தமிழ் ஒளி, மாயாவி, அகிலன், குகப்பிரியை, ல. ச. ராமாமிர்தம், சுப்பு ஆறுமுகம், டி. வி. சுவாமிநாதன், வல்லிக் கண்ணன், ஆர். பி. மல்லாரி, ச. அய்யாப்பிள்ளை, ஸ்ரீதர், வேங்கடராமாநுஜம், அப்துல் ஸமாது, வள்ளியப்பா, கட்டபொம்மன் கணேசன், ஜி. உமாபதி, பூவை எஸ். ஆறுமுகம்.

ஜனவரி 10–ஆம் தேதி எங்கும் கிடைக்கும்

விலை அணா எட்டு

மயங்கிய தலைவி

வி. கே. வெங்கடேசன்

உதிரிப்பூ:

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இரண்டாம் இடைநிலை வகுப்பு மாணவர் இக்கட்டுரையின் ஆசிரியர்.

தலைவனொருவன் தன் தலைவியைப் பரத்தையின் பிரிந்து நெடு நாட்களாகிய பின்னரும், தலைவியின் இல்லத்துச் செல்லாது காலந் தாழ்த்தி வந்தான். பரத்தையரிடத்துப் பெறும் இன்பத்தையே பேரின்பமெனக் கருதி அவர் தம் காலடியிலே கிடந்து உழலும் அவனைத் திருத்தி இல்லத்துக்கு மீட்டு வருதல் எங்ஙனம்?

தலைவியின் தோழி சிந்திக்கின்ருள். அவளுக்கு இன்னது செய்வதென்றே தோன்றவில்லை. தலைவியின் நிலையோ பெரிதும் இரங்கத் தக்கதாக இருக்கின்றது. காதலர் பிரிவைத் தாங்காது பசலை நிறந் தோன்றி விட்டது. வளைகள் கைகளினின்றும் நழுவுகின்றன. மலர் போன்ற மேனி மெழுகாய்க் கரைகின்றது. ஓயாது தலைவனைப் பற்றியே எண்ணி உருகிக் கொண்டிருக்கின்ருள். அவளுடைய துன்பத்தைப் போக்குவது எவ்வாறு?

ஆழ்ந்து யோசிக்கிருள் தோழி. பின்னர், எப்படியும் தலைவனை இன்று மீட்டு வந்து விடுவது என்ற

உறுதியான நெஞ்சத்தோடு தலைவன் இருக்குமிடம் சார்ந்து, அவனைச் சந்தித்து, வெகு வினயமாக, திறமையாகத் தலைவி படும் துன்பங்களைக் கேட்போர் உள்ளங்கள் நெகிழ்ந்து, உறுதி குலைந்து மாறும் வண்ணம் வெகு அழகாக எடுத்துக் கூறித் தலைவனுடைய நெஞ்சத்தைக் கரைத்து விடுகிறாள். ஒரு தோழிக்கு இருக்க வேண்டிய எல்லாத் திறன்களும், இலக்கணங்களும் தனக்கும் உண்டு என்பதைப் பாட்டின் மூலம் மெய்ப்பித்து விடுகிறாள் அவள். இதோ, அவள் தலைவனை நோக்கிக் கூறுகிறாள்: "அழகான சிறகுகளையுடைய குருவிகள் இராக் காலத்தில் ஒலிக்குமிடத்து, அவ்வோசையை உம்முடைய தேரின் மணியோசை என்றெண்ணி மகிழ்வாள். ஆனால், மகிழ்ந்த அக்கணமே, பறவைகளின் ஒலியானது அடங்கிவிட அதனைத் தேரின் மணியொலி அல்ல என்றும், அது கானகத்துப் பறவையினொலியே என்றும் கண்டு பின்னர்த் தன் ஏமாற்றத்துக்காகத் தனிமையில் பெரிதும் வருந்துவாள். பின்னும், நீர்ப்பரப்பின்மேல் பூக்கள் அலர்ந்து, மணம் பரப்பும் பொழுது, அதை உம் பரந்த மார்பிற் கிடந்த மாலையின் நாற்றமென எண்ணிப் பேருவகை கொள்வாள். ஆனால் மறுவிநாடியே, காற்றானது அப்பூக்களின் நறுமணத்தைக்கொணர்ந்து அவள் மேனியிற் படுமாறு செய்ய, 'ஓ! இது நம் காதலரின் தாரின் மணமன்று. இது தடாகத்துப் பூவின் மணமே!' என ஓர்ந்து, மறுமுறையும் ஏற்பட்ட ஏமாற்றத்தால் ஏக்கமுற்று மயங்குவாள். இம்மட்டோ? இன்னுங்கேளும்: பகற் பொழுதெல்லாம் உம்மை நினைந்து நினைந்து வருந்தியதனால் ஏற்பட்ட களைப்பு நீங்க மஞ்சத்தில் சாய்ந்து துயில எண்ணிக் கண்களை மூடுவாள். ஆனால், அப்

பொழுதும் உம் எழிலுருவவே அவள் கண்ணெதிரே தோன்றும். தன்தோளின்மீது நீர் கிடந்தீரென எண்ணி மயங்கி, உம்மைத் தழுவு தற் பொருட்டு மிக்க ஆவலுடன் தன் கரங்களிரண்டினையும் கோர்த் துத் தழுவ முயல்வாள். ஆனல் உம் வடிவினை அங்குக் காணாத தால் பெரிதும் ஏமாற்ற முற்று, வருந்தி, கண்டது கனவென்று துணிந்து அன்றிரவு முழுதும் செய லற்றுக் கலங்கிக் கண்ணீர் வடிப் பாள். எனவே, உம்மையே எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கும் அவள் முகம் விளங்கும்படி செய்ய உம் தேர் குதிரையைப் பூணுவதாக....!''

காதலனைப் பிரிந்த காதலியின் நிலை எவ்வாறிருக்கும் என்பதை வெகு அழகாகச் சித்திரிக்கிறது கீழே கண்ட நல்லந்துவனாரின் பாட்டு. இது கலித்தொகை ஆரத்தின் ஒரு சிறிய முத்து.

“..............................
அணிச்சிறை யினக்குரு கொலிக்குங்கால் நின் திண்தேர்
மணிக்குர லெனஇவள் மதிக்குமன் மதித்தாங்கே
உள்ளான்ற ஒலியவாய் இருப்பக் கண்டவைகானல்
புள்ளென உணர்ந்துபின் புலம்புகொண்டினையுமே.

நீர்நீவிக் கஞன்றபூக் கமழுங்கால் நின்மார்பின்
தார்நாற்றம் எனஇவள் மதிக்குமன் மதித்தாங்கே
அலர்பதத் தசைவளி வந்தொல்கக் கழிப்பூத்த
மலரென உணர்ந்துபின் மம்மர்கொண்டினையுமே.

நீள்நகர் நிறையாற்றுள் நினையுநள் வதிந்தக்கால்
தோள்மேலாய் எனநின்னை மதிக்குமன் மதித்தாங்கே
நனவெனப் புல்லுங்கால் காணாளாய்க் கண்டது
கனவென உணர்ந்துபின் கையற்றுக் கலங்குமே.

....
மதிமருள் வாண்முகம் விளங்கப்
புதுநலம் ஏர்தரப் பூண்கநின் தேரே!'' ★

வாடா விளக்கு

"மாயாவி"

நெல்லையப்பன் மீண்டும் பேசத் தொடங்கினான்:

"...நாமதான் எத்தினி காலம் இதை இப்படியேவச்சுக்கிட்டிருக்க முடியும்? இப்பிடி இதுக்கு ஒரு வளி காட்டி விட்டுட்டா, அது போக்கிலே அது வயத்தைக் களுவிக்கிட்டு இருந்துக்கிடுமின்னு தான் கூட்டியாந்திருக்கேன்!"

உண்மையான காரணத்தைத் தம்பியிடம் கூற வெட்கிய விந்தை தம்பிக்குத் தெரியாது!

திருமலைக்கும் அப்போழுது அது நியாயமாகவே பட்டது. அவன் காந்திமதியைக்கூடக் கேட்டான்: "வாத்தியாரம்மாவாகிப் பொழைச்சுக்கிடுது ஒனக்குப் புடிச்சிருக்குதா, காந்தி?" என்று. அவளும் அப்பொழுது முற்றும் துறந்தவள் போலவே பதிலளித்தாள்: "இனிமே எனக்கு என்ன வச்சிருக்குது, திருமலை? எத்தினி நாளு தான் ஒங்களுக்குச் சொமையா நான் இருந்துக்கிட்டிருக்க முடியும்? எங்கேயாச்சும், எப்படியாச்சும், எனக்கு நானே ஒரு பொழைப்புத் தேடிக்கிட்டாத்தானே நல்லது?" இவ்வளவு விரக்தியுடன் பதிலளித்த அவளிடம் பருவக் கிளர்ச்சி ஏற்படும்; அது அவளை மதம் மாறியாவது தன் இல்வாழ்வுக்கு வழி வகுத்துக் கொள்ளத் துணியச் செய்யும் என்று அன்று திருமலையால் நினைக்க முடியவில்லை.

ஆனால் இன்று...?

திருமலைக்கு அன்று வகுப்பில் ஒரு பாடத்திலாவது கவனம் செல்லவில்லை. அவன் மனசை இந்தப் பிரச்னையே முழுவதும் ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. முன்பு விரக்தியுடன் பேசியபோதிலும், இப்பொழுது காந்திமதியின் மனசு கல்யாண ஆசை கொண்டது அவனுக்கு சகஜமாகவே பட்டது. பருவத்தின் கிளர்ச்சியை அடக்கிக் கொள்வது எல்லோருக்குமே சாத்தியமில்லை என்பதை அவன் அறியாதவன் அல்ல. ஆனால் அதற்காக அவள் மதம் மாறத் துணிந்து விட்டதுதான் அவன் உள்ளத்தை வேதனைப் படுத்திற்று. அதனால் தன் குடும்பத்திற்கு ஏற்படப் போகும் அவகேட்டை எப்படித் தவிர்ப்பது என்பதை அவன் தீவிரமாகச் சிந்திக்கலானான். ஆனைப் பட்ட தன் அண்ணாச்சியாலேயே அவளுடைய வாழ்வு மலர வகை செய்ய முடியாமற்போனபோது, தன்னால் என்ன செய்துவிட முடியப் போகிறது என்று அவன் முதலில் மிகவும் மனம் தளர்ந்துதான் போனான். ஆனால் பஸ்ஸில் வீட்

டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது சட்டென்று அவன் இதற்கு ஓர் வழி கண்டு பிடித்து விட்டான். அந்த வழி தோன்றிய பிறகு, 'சே! கையிலே வெண்ணெயை வச்சுக் கிட்டே நெய்க்கு அலேஞ்சுக்கிட்டிருந்தேனே! எத்தனி முட்டாள் நான்?' என்று அவன் தன் மடமையை எண்ணி வெட்கினுன். ஆம்; அவன் கண்டு பிடித்த வழி இதுதான். முறைப் பெண்ணுன காந்திமதியைத் தானே மணந்து கொண்டு விட்டால்........?

அது அவர்கள் சமூகத்தில் சகஜமானதுதான். அண்ணன் முறைப் பெண்ணை மணந்து கொள்ள முடியாத நிலேயில் இருந்தால் அடுத்த 'சான்ஸ்' தம்பிக்குத் தான். நெல்லேயப்பனே, காக்காய் வலிப்பு நோயின் காரணமாகக் காந்திமதிக்கு மாலேயிட முடியாதவனுகி விட்டான். ஆகையால் அடுத்த உரிமை தன்க்குத் தானே?

ஆனுல், இது ஏன் தன் அண்ணனுக்குத் தோன்றவில்லே என்பது தான் திருமலேக்கு வியப்பாக இருந்தது. ஒரு வேளே, தோன்றியிருந்து, எங்களிடையே அதிக வயசு வித்தியாசமில்லே என்பதனுல் ஒதுக்கி விட்டானே? இல்லாவிட்டால், நாங்கள் குழந்தைப் பிராயத்திலிருந்தே சகோதர—சகோதரியாகப் பழகி வந்ததால் எப்படி எங்களேத் தம்பதிகளாக்குவதென்று தயங்கியிருப்பானே?

அப்படியே இருந்தாலும் நாங்கள் ஒன்றும் சம வயசுக்காரர்கள் இல்லேயே! கணவனுக்கும் மனேவிக்கும் இடையே எட்டு வயசு வித்தியாசம் போதாதா? மூன்று நான்கு வயசு வித்தியாசத்தில் கூட எத்தனேயோ கல்யாணங்கள் நடந்திருக்கின்றனவே? நாங்கள் சகோதர பாவத்துடன் பழகி வந்ததென்னமோ உண்மை தான். ஆனுல் அதை முறித்து, எங்களிடையே தாம்பத்திய உறவை ஏற்படுத்திக் கொள்ளா விட்டால், குடும்பத்துக்கே அழியாக் கறையல்லவா வந்து விட இருக்கிறது?

கடைசியில் திருமலே துணிந்து விட்டான், எப்படியாவது காந்திமதியின் மனசை மாற்றி அவளேயே மணந்து கொள்வதென்று. அதை அவன் அவளிடம் நேரடியாகச் சொல்லிச் செய்ய விரும்பவில்லே. தனக்கு இயல்பாக அவள் மீது காதல் ஏற்பட்டு விட்டது போல் நடந்து கொண்டு, அதற்கு அவளிடமிருந்து எவ்வித எதிரொலி கிளம்புகிறது என்பதைப் பார்த்த பிறகு, தேவையாய் இருந்தால் மட்டும், 'நான் தீரா வினேயாக உன்னே மணக்க முன் வந்திருக்கிறேன்' என்று கூறினுல் போதும் என அவன் முடிவு செய்தான்.

ஆகையால் திருமலே, காந்திமதியைக் காதலிக்க ஆரம்பித்தான்!—காதல் தான் போதையளிக்கும் பொருளாயிற்றே! அதில் ஈடுபட்டு விட்டால் பிறகு அதுவே முழுவதும் ஆட்கொண்டு விடுமே! திருமலே கடமைக்காகச் செய்யப் புகுந்த காதல், விரைவில் காதலுக்காகவே காதலாகி விட்டது.

காந்திமதிக்கு, திருமலேயின் திரும்பிய போக்கு முதலில் பேரதிர்ச்சியாக இருந்தது. ஆனுல், பின்னர் எங்கேயாவது, எப்படியாவது வாழ்வு மலரக் காத்திருந்த அவளும், இப்படி முறையாகவே அது மலர ஓர் வழியிருப்பதை உணர்ந்து கொண்டு அவனேக் காதலிக்க ஆரம்பித்து விட்டாள்.

கடந்த இரண்டு—மூன்று மாதங்களாக அந்த இரு இளம் உள்ளங்களும் இன்ப வெள்ளத்தில் மிதந்து வந்தன. ஆயிற்று; அவர்களுடைய ரகசியக் காதல் அம்பலத்துக்கு வர வேண்டிய காலம் நெருங்கி விட்டது. திருமலேயின் படிப்பும், காந்திமதியின் பயிற்சியும் முடிந்து விட்டன. மறுநாள் அவ்விருவரும் தென்காசிக்குப் புறப்பட வேண்டும். நெல்லேயப்பன் சிறிதும் எதிர்பார்த்தே இராத இந்தப் புது விஷயத்தை எப்படி அவன் முன் உடைப்பது? உடைத்தால் அவன் அதனே வரவேற்பானு? அல்லது ஒருகால், மற்றவர்களேப் போல் அவனும், காந்திமதியின் முன் கல்யாண முயற்சி அசம்பாவிதமாக முடிந்ததைக் கருதி, தங்கள்

இணைப்புக்குத் தடை போடுவானா? போட்டால் என்ன செய்வது?— இவற்றையெல்லாம் பற்றி மிகத் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்ததால் தான் அவர்களுக்குப் பொழுது போய் விட்டதோ, சிந்து மந்துறை காலியாகி விட்டதோ, தெரியவில்லை.

மறுநாள் காலையில், காந்திமதியும், திருமலையும், தென்காசியை நோக்கிப் பயணமானபோது ஒரு திடமான முடிவுக்கு வந்திருந்தனர். 'யார் தடுத்தாலும் சரி; தாங்கள் தம்பதிகளாகியே தீருவது' என்பதுதான் அவர்கள் எட்டியிருந்த முடிவு.

பேதைகள்! அந்த 'யார்' என்ற சொல்லுக்குள் விதியும் அடங்கியிருக்கிறது என்பதை மாத்திரம் அவர்கள் அறிந்தவர்களானால்....?

அத்தியாயம் – 25

பாகப் பிரிவினை

மேலத் தெருச் செல்லம் பிள்ளை, சின்னையா எசக்கியா பிள்ளை, கிராம முனிசீப்பு பலவேசம் பிள்ளை ஆகிய மூன்று பிரமுகர்களும் கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த எட்டு–நாலு சமுக்காளத்தில் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் முன்னால், பத்திரங்கள், தஸ்தாவேஜுகள், புரோ நோட்டுகள், பேரேடு, நாள்வழி, சிட்டை முதலியவை இறைந்து கிடந்தன. கிராம முனிசிப்புப் பலவேசம் பிள்ளை ஓயாமல் வெற்றிலை போடக் கூடியவர். ஆதலால், ஒரு பித்தளைத் தட்டில் தளிரான ஆய்க்குடி வெற்றிலையும், வெட்டுப் பாக்கும், அங்கு விலாஸ் 'தடை' ஒன்றும், ஓர் வெற்றிலையில் சுண்ணாம்பும் வைக்கப்பட்டிருந்தன. நெல்லையப்பன், செல்லம் பிள்ளையின் அருகில், தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான். சமுக்காளத்தில் அமராமல், தாழ்வாரப் பக்கமாக இருந்த ஜன்னலில் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தான் திருமலை. அவனுக்குப் பின்னால், தாழ்வாரத்தில், ஜன்னலின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்றாள் காந்திமதி.

கிராம முனிசிப்பின் கையில் காகிதம் ஒன்று இருந்தது. அதைப் பார்ப்பதும், பிறகு மூக்குக் கண்ணாடியை நெற்றிக்கு உயர்த்திக் கொண்டு 'மோட்டு வளை'யைப் பார்த்தவாறு ஏதோ கணக்குப் போடுவதுமாக இருந்தார் அவர். அவருடைய வாயில் வெற்றிலை உமிழ்நீரோடு குழம்பிக் கொண்டிருந்தது. எனவே கன்னங்கள் இரண்டும் 'அம்மைக் கட்டு' வந்தவன் கன்னங்கள் போல் 'உப்பி' யிருந்தன.

"பார்த்துட்டியளா? சல்தியா, செத்தெ அங்கனே – இங்கனே இருந்துட்டாலும் ஒரு மாதிரிப் போட்டுச் சரி பண்ணிடுங்க. மூதி எங்கனே போயுடப் போகுது? ஒன்று அண்ணன் திங்கப் போறான்; இல்லேன்னா தம்பி திங்கப் போறான்" என்று 'துருசு' படுத்தினர் செல்லம் பிள்ளை.

பலவேசம் பிள்ளை மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கீழே வைத்து விட்டு, முற்றத்துக்குச் சென்று வாய் வெற்றிலையை உமிழ்ந்து விட்டு வந்தார். பிறகு மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு, முன்பு பார்த்துக் கொண்டிருந்த காகிதத்தைக் கையில் எடுத்தவாறு, "அந்த மேலகரம் புறவு, முக்குருணி நாலுபடி வெதப்பாடு குண்டுகளைச் சதியா, முக்கூடல் புறவிலே நாலு மரக்கா வெதப்பாடிலே ஒரு குண்டு இருக்குது பாருங்க–அதான் ஸர்வே நம்பர் 1415–அதெப் போட்டிருக்கேன்; சதிதானா?" என்று கேட்டார்.

"அதென்ன, அப்படிப் போட்டீக? முக்குருணி நாலுபடு வெதப்பாடு ஒத்தனுக்கு; நாலு மரக்கா வெதப்பாடு இன்னொருத்தனுக்குன்னா, எதை எவரு எடுத்துக்கிடுதுன்னு இன்னம் சண்டையில்லே போட்டுக்கிடப்போறானுக. வேறே சதிக்குச் சதியா குண்டு–கிண்டு

ஒண்ணும் இல்லியா? நல்லாப் பாருங்க,'' என்று விவாதித்தார் சின்னையா எசக்கியா பிள்ளை.

'' ஒரு எளவையும் காங்கலேயே. எல்லாம் பெரிய குண்டுகளா யில்லே இருக்குது,'' என்றார் பலவேசம் பிள்ளை.

'' அப்பிடீன்னு முக்கூடல் புறவு குண்டை எங்க பங்கிலே போட்டு டுங்க!'' என்றாள் ஜன்னலுக்கு அப்பால் நின்று கொண்டிருந்த காந்திமதி.

செல்லம் பிள்ளை அவளை வெட்டி விடுவதுபோல் விழித்துப் பார்த்தார். பிறகு முகத்தில் குரோதம் கொதிக்க, "ஏட்டி! ஒன் ஆசைக் குக் கணக்கு–வளக்கே இல்லே போலிருக்குதே? பங்கு வைக்கு திலே பெரிசா வரத்தையெல்லம் எங்களுக்குப் போட்டுடுங்க இங்கி யேட்டி, போட்டுட்டா அவன் என்ன மண்ணையா தின்னுக்கிட் டிருப்பான்?'' என்று கேட்டார்.

'' மண்ணை எதுக்காகத் திங்கப் போறாகளாம்? அவுகளுக்கென்ன கலியாணமா? கார்த்தியலா? புள்ளையா? குட்டியா? அதுதான் ஒரு எளவும் வேண்டாமின்னு வச் சுப் போடுதே சாமி. நாங்கதானே நாளைக்கு நாலு பெத்து நல்லா இருக்கணும்? சும்மா போடுங்க!'' என்று பதிலளித்த அவள், ஜன் னல் இடுக்கு வழியாகத் திருமலை யின் இடுப்பில் குத்தி, ''என்ன? சொல்லுங்களேன். வாயிலே என்ன கொளுக்கட்டையா போட் டுக்கிட்டிருக்கிக?'' என்று தூண்டி விட்டாள்.

'' ஆமா, ஆமா; அண்ணன் ஒத் தக் கட்டை தானே, பாட்டையா? ஒரு நாலு படி வெதப்பாடு குறைஞ்சு போயுட்டா குடியா முளுகிடப் போகுது?'' என்றான் திருமலை.

''ஏண்டே நெல்லையப்பா? நீ என்னடே சொல்லுதே? முக்கூடல் குண்டை திருமலை பங்கிலே போட் டுடட்டுமா?'' என்று வினவினர் பலவேசம் பிள்ளை.

குனிந்த தலையை நிமிர்த்தினன் நெல்லையப்பன். அவன் விழிக் கடையில் நீர் கோத்திருந்தது. ''நான்தான் பரதேசிப் பயலாப் போயிட்டேனே மாமா? எப்பிடி வேணுமின்னாலும் போட்டுக் கிடுங்க. ஒண்ணைப் பொறந்த தம் பியே இல்லேன்னு ஆயுட்டதும் இந்த நாலுபடி வெதப்பாடா வந்து எனக்கு நிறைஞ்சுடப் போகுது?'' அவன் தொண்டை கரகரத்தது. பொங்கி வந்த அழுகையை அடக்க, மேல்துண்டினுல் வாயைப் பொத்திக் கொண்டான்.

ஆம்; அங்கே பாகப் பிரிவினை நடந்து கொண்டிருந்தது, நெல்லை யப்பனுக்கும் திருமலைக்கும் இடையே. ஏழு தலைமுறைகளாகக் குத்தாலிங்கம் பிள்ளையின் குடும் பத்தில் நடந்திராத நிகழ்ச்சி அது. உலக வழக்கின்படி பார்க்கப் போனுல், அண்ணன்–தம்பி என்று இருந்து விட்டால் எந்தக் குடும் பத்திலும் பாகப் பிரிவினையும் அவசியம் ஏற்பட்டுத்தான் தீரும். அது ஒன்றும் அதிசயமில்லை. ஆனுல் இன்று நடக்கும் பிரிவினை, உலகெங்கும் அண்ணன்–தம்பிய ருள்ள குடும்பங்களில் நடப்பது போல் சொத்தை ஒட்டிய பிரிவினை யாக இருந்திருந்தால், நெல்லை யப்பன் இத்தனை சோகம் அடைந் திருக்க மாட்டான். ஆனுல், இது சொத்தால் மட்டுமல்ல; உறவால் மட்டுமல்ல; உயிராலும் அந்த அண்ணன்–தம்பியரைப் பிரிக்கும் பிரிவினையாக இருந்தது. அதுதான் அவனுக்கு ஆற்றுமல் வந்தது. அது தான் எத்தனை அடக்கியும் நில்லா மல் அவன் கண்கள் கண்ணீரைப் பெருக்கின. ஆம்; அவன் தம்பி, இப்படிச் சண்டை போட்டுச் சொத்தைப் பிரித்து வாங்கிப் போய், ஆண்டு அநுபவித்து ஆனந்தமாய் இருக்கப்போகிருனு? அந்தச் சமாதானம் இருந்திருந் தால் நெல்லையப்பன் ஏன் கண் ணீர் விடுகிருன்?

'தன் வினை தன்னைச் சுடும்' என் பதுபோல் அல்லவா ஆகிவிட்டது, அவன் காந்திமதியை டிரெயினிங் பள்ளியில் சேர்த்து, அவளுக்கு

வாழ வழி வகுத்துக் கொடுத்துக் கொடுத்து ஒதுக்கி விடலாம் என்றெண்ணிச் செய்த செயல்! இப்படி நடக்குமென்று அவன் துணிக்கூட எதிர்பார்க்கவில்லையே! கனவில்கூடக் கருதியிருக்கவில்லையே!

காலைக் கடிக்க வந்த பாம்பை வாலைப் பிடித்து வீசினான். அது மாலையாக அவன் தம்பியின் கழுத்தில் அல்லவா விழுந்து விட்டது! 'ஐயோ திருமலை! ஏண்டா உன் புத்தி இப்படிப் போயிற்று? காலன் உன்னைக் கண் ஜாடைகாட்டி அழைத்து விட்டானா? அல்லது காதல் உன் கண்களுக்குத் திரையிட்டு விட்டதா?'

* * *

அனுப்பு மண்டபத்துக்கு முன்னால், திருநெல்வேலி—சிவகிரி பஸ்ஸிலிருந்து இறங்கி, திருமலையும் காந்திமதியும் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது, ''என்ன சொல்லப் போறீக அத்தான்கிட்டே? பேசுதெ பதமாப் பாத்துப் பேசுங்க. அவுகளுக்கு எம்மேலே ரொம்பக் கடுப்பு ஏறிப் போயிருக்குது. அதெல்லாம் கூடாது; 'சச்சாப் பிச்சா'ன்னு டப் போகுதாக,'' என்றாள் காந்திமதி.

''அதெல்லாம் அண்ணாச்சியை வசமாப் புடிச்சு

மாட்டி வச்சுச்சதின்னு சொல்ல வச்சுடுதேன். நீ கவலைப் பட்டுக் கிடாதே'' என்ருன் திருமலை.

அவன் நெல்லையப்பனை 'வசமாப் புடிச்சி மாட்ட' வகை செய்து கொண்டுதான் வந்திருந்தான்.

அன்றிரவு சாப்பாட்டுக்குப் பிறகு அண்ணனும் தம்பியும் மச்சிலில் படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டனர். ''ஏன் திருமலை, காந்தி வாத்தியாரம்மாவாப் படிச்சுப் போட்டா. கையோடே இலஞ்சிக்குப் போயி, நம்ம ஐ. சி. பிள்ளைவாளைக் கண்டுக்கிட்டு வந்துட்டா அவ விசியம் ஒரு மாதிரியா முடிஞ்சுக்கிடும். நாளை பொளுது சாயப் போயுட்டு வந்திடலாமா? அவுகளைப் பாக்கணுமின்னு, சாயரட்சையிலே போனுத்தான் அகப்படுவாக'' என்று நெல்லையப்பனே பேச்சைத் தொடங்கினுன்.

ஐ. சி. பிள்ளைவாள் என்று கவுரமாக அழைக்கப்பட்டு வந்த ஐ. ஸி. ஈஸ்வரம் பிள்ளை அவர்கள் அத்தனை கவுரவத்துக்கும் அருகதையானவர்கள்தான். அவர்கள் இயற்கையாகவே செல்வந்தர். அதோடு தொடர்ந்து பல காலம் திருநெல்வேலி ஜில்லா போர்டுத் தலைவராக இருந்து அவர்கள் அந்த மாவட்டத்துக்கு ஆற்றிய தொண்டு மகத்தானது. பிள்ளையவர்களுக்குத் தாராள உள்ளம். அவரை ஒரு காரியத்துக்காக அணுகி, அதில் வெற்றி பெருமல் திரும்பியவர்கள் மிகக் குறைவு. மாவட்ட நிர்வாகக் குழுவின் கீழ் நூற்றுக் கணக்கான பள்ளிகள் இருந்தன. அவற்றுக்கான ஆசிரியர்களையும், ஆசிரியைகளையும் தேர்ந்தெடுத்து வேலைக்கு அமர்த்துவது மாவட்டக் குழுவின் பல்வேறு அலுவல்களில் ஒன்று. ஐ. சி. பிள்ளை அவர்களால் அப்பள்ளிகளில் ஆசிரியர் அல்லது ஆசிரியை பதவியேற்று ஆளாகி வந்தவர்கள் ஆயிரக் கணக்கில் உண்டு. காலஞ்சென்ற குத்தாலிங்கம் பிள்ளை, ஐ. சி. பிள்ளை அவர்களுக்கு நெருங்கிய நண்பர். பின்னவர் மாவட்ட நிர்வாகக் குழுத் தேர்தலுக்கு நிற்கும்போதெல்லாம், குத்தாலிங்கம் பிள்ளை உடலாலும் பொருளாலும் உதவிகள் புரிந்து வந்தவர். ஆகையால், ஐ. சி. பிள்ளை அவர்களிடம் ஒரு காரியம் நடக்க வேண்டுமென்ருல், குத்தாலிங்கம் பிள்ளை உயிரோடு இருந்தவரை, தென்காசிக்காரர்கள் அவரைத்தான் சிபாரிசுக்கு அழைத்துச் செல்லுவார்கள். குத்தாலிங்கம் பிள்ளை செல்லான பிறகு, நெல்லையப்பன், தந்தையின் இந்த உதவிப் பணியைத் தொடர்ந்து செய்து வந்தான். பிறர் காரியங்களுக்காக நெல்லையப்பன் அவரை நாடியபோதே இல்லையெனுது அவற்றை நிறைவேற்றிக் கொடுத்திருக்கும் ஐ. சி. பிள்ளை, அவனுடைய சொந்தக் காரியத்துக்கு உதவ மறுத்து விடுவாரா, என்ன? அப்பொழுது வருடாந்திர விடுமுறைக்காகப் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருந்தன. இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவை திறக்கும். இப்பொழுதே அவர் காதில் ஒரு வார்த்தை போட்டு வைத்திருந்தால்தானே, பள்ளிகள் திறந்ததும் காந்திமதியை ஏதாவது ஓர் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியையாகப் போட அவருக்கு வசதியாக இருக்கும்? ஆகையால்தான் நெல்லையப்பன் உடனடியாகப் பிள்ளைவாளைக் கண்டு வர விரும்பினுன்.

காந்திமதியின் பேச்சை அண்ணன் ஆரம்பித்தது திருமலைக்கு ஓர் அரிய வாய்ப்பாயிற்று. படுக்கையில் படுத்திருந்த அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். பிறகு, ''ஆமா அண்ணே; நானும் கொஞ்ச நாளாக ஒன்னைக் கேக்கணுமின்னுதான் இருக்கேன். காந்திமதியை வாத்தியாரம்மா வேலை பார்க்கச் சொல்லிடலாமிங்கியே; ஊர்ச் சனங்க நாலும் பேச மாட்டாக?'' என்று கேட்டான்.

''பேசத்தான் பேசுவாக. அதைப் பார்த்துக்கிட்டிருந்தா முடியுமா திருமலை? அது என்னமோ அவ தலையெளுத்து ஒருத்தனைக் கட்டிக்

கிட்டுச் சோகமா யிருக்க வளியில்லாம ஆக்கிப் போட்டுதே? வேறே வளி–கிளி இருந்தா, அவளை இப்பிடி வேலை பார்த்துப் பொளச்சுக்கிடுன்னு தள்ளி விட்டுடுவேனு?'' என்ருன் நெல்லையப்பன்.

''ஏண்ணே, நீதான் அவளைக் கட்டிக்கிடேன். ஒனக்கு ஒரே ஒரு வாட்டிதானே வலிப்பு வந்திச்சு. அப்பாலே இந்த நாலு வருசமா ஒண்ணும் காங்கலையே. முன்னையுமில்லாம, பின்னையுமில்லாம, எப்பொரமோ ஒரு தபா வந்திச்சுன்னு, அதுக்காக கல்யாணம் – கார்த்தியலு ஒண்ணுமில்லாமயா இருந்திடுவாக?'' என்று திருமலை அண்ணனை ஆழம் பார்த்தான்.

''அதெப்படி திருமலே, தெரிஞ்சுக்கிட்டே அவளைக் கட்டிக்கிடறது? அந்த எளவு வலிப்பு எப்பொம் வருமின்னு யாரு கண்டுக்கிட்டிருக்கா? நாளைக்கு அவளைக் கட்டிக்கிட்ட பெறகு அது வந்து என்னைக் கொண்டுக்கிட்டு போயிடிச்சுன்னு, பாவம் அதுன் கதி என்ன கதியாகறது? அத்தை வெள்ளைச் சிலைக்காரியாப் போனு; அம்மையும் அப்படித்தான் ஆயுட்டா; இது ஒண்ணுவது மஞ்சளும், குங்குமமுமா, நித்திய கன்னியா, வாடாத வெளக்கா இருந்துக்கிட்டிருக்கட்டுமின்னில்லா நான் இந்த வளியிலே புகுந்தேன்?''

''நீ சொல்லுத பேச்சுச் சதிதான் அண்ணே. ஆனு, அவளும் வயசுப் புள்ளை பாரு. வாத்தியாரம்மாவாப் போருன்னு வச்சுக்கிடு. அங்கே பல மனுசங்களோட பளகத்தான் வேண்டியிருக்கும். மனசு தடுமாறிப் போயி, தப்புத் தண்டாவா ஏதேனும் நடந்திரிச்சின்னு, நம்ம கொலத்துக்கே கெட்ட பேரில்லா வந்துடும்? ஏன் அண்ணே, நல்லா யோசிச்சுப் பார்த்தியா? அவளுக்கு வேறே ஒரு வளியும் இல்லியா?''

''இல்லையேடா ஐயா, திருமலே.''

''அண்ணே, எனக்கு ஒரு யோசனை தோணுது, அண்ணே.''

''சொல்லு திருமலே; நல்லா இருந்தா செய்து போடுவோம்.''

''காந்தியை நான் கட்டிக்கிடுதேனே!''

மலை பெயர்ந்து தலைமீது விழுந்துபோல் நிலை கலங்கி விட்டான் நெல்லையப்பன். ''தம்பீ! திருமலே! வேண்டாண்டா ஐயா; அந்தப் பேச்சை இன்னொருக்க பேசாதே!'' என்று அலறினன்.

''ஏன் அண்ணே?''

''நம்ம கொலம் வௌங்க நீ ஒருத்தன் தாண்டா தம்பி, மிஞ்சியிருக்குதே. நீ என்னைக்கும் நல்லாயிருக்கணுண்டா ஐயா. நீ நல்லா இருக்குதப் பாத்துத்தான், நாசமாப் போயிட்ட நான் சந்தோசப் பட வேணும்.''

''அப்பிடீன்னு, காந்தியைக் கட்டிக்கிட்டா நான் நல்லாயிருக்க மாட்டேன்னு சொல்லுதே. ஏன் அண்ணே?''

''பச்சைப் புள்ளைடா ஐயா, நீ. ஒலகம் தெரியாத புள்ளை. இப்பிடிப் பக்கத்திலே வா, சொல்லுதேன். அந்த மூதி இங்கனே எங்கேம் வந்து நின்னு ஒட்டுக் கேட்டுக்கிட்டு இருக்கப் போகுது.''

தணிய எரிந்து கொண்டிருந்த ஹரிக்கேன் விளக்கைப் பெரிதாக் கிவிட்டுத் திருமலை அண்ணனின் படுக்கையில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''இந்த வெளக்கை இப்போம் தூண்டினியே, இதுபோலத் தாண்டா ஐயா, ஒன் அறிவு வெளக்கையும் தூண்டிவிட வேண்டியிருக்குது. ஊரிலே ஒரு மனுசன் கூட அவளைக் கட்டிக்கிட வர மாட்டேன் என்கிருனே, அது எதினுலே தெரியுமாடா ஐயா ஒனக்கு? ஒரு பொண்ணுக்குக் கல்யாணமின்னு பந்தக்காலு நட்டிட்ட பெறகு, மாப்பிள்ளை எறந்துட்டாகன்னு, அது குடும்பத்துக்கே வௌங்காத பொண்ணு; அதுக்குத் தாலி போடற எவனையும் உருட்டிப் போடுமின்னு சொல்லுவாகடா. அதினுலேதான் ஒருத்தரும் வா

நம்மவர்களில் யாரேனும் முன்னேறிப் பெருமை அடையும் முன்னுல் அவரைக் கீழே தள்ளவே முயல்கின்றோம். ஆனுல் வெளி நாட்டான் ஒருவன் வந்து நம்மை உதைக்கும்போதும் பேசாமலிருக்கிறோம். —விவேகானந்தர்.

மாட்டேன் என்கிருக. ஊருக்கு உள்ள நியாயந்தானேடா தம்பி நமக்கும்? அது நம்ம பொண்ணு: மொறைப் பொண்ணுன்னு பாத்தோமின்னு, நம்ம உசிரில்லே போயிடும்?''

திருமலே இதைக் கேட்டு பெரிதாகச் சிரித்தான். ''இதெல்லாம் எந்தப் பய கட்டிவிட்ட கதை அண்ணே? பைத்தியக்காரத்தனமா, கண்டவுக பேச்சைக் கேட்டுக்கிட்டு காந்தியை நாதியத்தவளா ஆக்கிடாதே அண்ணே. ஒனக்கு விசயம் தெரியாது. நீ ஒரு வருசமா, அவளும் அவ மனசும் போயிக்கிட்டிருக்குத போக்கைக் கண்டுக்கிடலே. அண்ணே! இப்பொம் ஒரு மாசம் ரெண்டு மாசத்திலே அவளுக்கு நாம் கல்யாணம் முடிச்சு வைக்கலேன்னு என்ன நடக்கும் தெரியுமா?''

''என்ன நடக்கும்? மூதி, ஆத்திலே கொளத்திலே விளுந்து உசிரெ விட்டுடுமா? விட்டுட்டுப் போகட்டும். அதுக்காக நாமளே, நம்ம தலேயிலே மண்ணே அள்ளிப் போட்டுக்கிடறதாடா தம்பி?''

''காந்தி ஆத்திலே கொளத்திலே விள மாட்டா அண்ணே. அவ 'வேதக்காரி'யா ஆகிக் கல்யாணம் கட்டிக்கிடுவா.''

''தம்பி!''—மற்ருேர் இடி நெல்லேயப்பனின் தலேயில் விழுந்தது.

''நெசத்துக்குத்தான் சொல்லுதியா, தம்பீ?''

''ஆமா அண்ணே. எங்கிட்டே நேரடியாச் சொல்லலேன்னுலும், பிறத்தியார் சொல்லித் தெரிஞ்சுக்கிட்டேன் அண்ணே!'' என்று கூறிய திருமலே, கல்லூரியில்தான் கேட்ட வதந்தியை விளக்கினுன். இறுதியாகச் சொன்னுன்: ''நல்லா யோசிச்சுப் பாரு அண்ணே. அவ கன்னியா வேலேக்குப் போனுன்னு, தப்புத் தண்டாவாப் போயி, நம்ம கொலத்துக்குக் கெட்ட பேரு வந்துடப் போகுது....! எப்பிடிப் பார்த்தாலும், அவளுக்கு நாமளே ஒரு வளி செய்யலியின்னுத்தான் நம்ம தலேயிலே மண்ணே அள்ளிப் போட்டுக்கிட்டவுகளா ஆவோம். இதையெல்லாம் யோசிச்சுத்தான் நானே கட்டிக்கிடுதேன்னு அவளுக்கு நல்ல வார்த்தை சொல்லி இங்கே கூட்டிக்கிட்டு வந்திருக்கேன்.''

''ஆனு தம்பீ, என்னதான் இருந்தாலும் நீ அவளேக் கட்டிக்கிடக் கூடாதுடா.''

''ஏனும்? இல்லே, ஏன்னு கேக்கேன்? விசயம் இவ்வளவிலே வந்து நின்னுக்கிட்டிருக்குது. நீ என்னமோ, பிடிவாதமா இன்னங்கூட அவளுக்கு ஒரு வளி காட்ட மாட்டேன்கறியே? ஏன் அண்ணே, ஒன் மனசிலே என்னதான் வச்சிருக்கே அப்பிடி, அதும் மேலே இத்தினி வருமம் காட்ட?''

நெல்லேயப்பனின் பீதி கொண்ட மனசு காந்திமதி மதம்மாறி மணம் செய்து கொள்ளத் துணிந்து விட்டாள் என்பதை அறிந்த போது இதுவரை இல்லாத கலக்கம் அடைந்தது.

ஆனுல் திருமலே கல்யாணம் செய்து கொள்ளுவதாகக் கூறியதும் அவள் சமாதானம் அடைந்து விட்டாள் என்பதைக் கேட்ட போது, ஒருவேளே மதம் மாறி விடுவதாக அவனேப் பயமுறுத்தித் தன்னே மணந்துகொள்ளத் தூண்டியிருப்பாளோ என்று நினேக்க ஆரம்பித்தது. கடந்தகாலச் சம்பவங்களே நினேத்துப் பார்த்தபோது அவள் முன்பே திருமலேயின் மீது கண் வைத்து விட்டிருக்க வேண்டும்; அல்லது, திருநெல்வேலியில் அவர்கள் இருவரும் ஒன்ருக

வசித்தபோது அவளுடைய மனம் அவனிடம் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. பேதை அவள்! தன் தலைவிதி தெரிந்திருந்தால், இப்படிச் செய்யத் துணிந்திருப்பாளோ, என்னவோ? ஆனால் அதை அவளுக்கு அறிவிக்கக் கூடாத துர்ப்பாக்கிய நிலையில் நான் இருக்கிறேனே, என்ன செய்வது?

காந்திமதியின் தலைவிதியைப் பற்றிய விவரம் தன்னோடு மடிந்து விட வேண்டும் என்றுதான் அவன் இன்னும் உறுதி கொண்டிருந்தான். தன் சொந்தத் தம்பிக்குக் கூட அது தெரிய வேண்டியதில்லை என்ற கருத்துடன்தான், அவளை மணந்து கொள்ளப் போவதாக அவன் கூறியபோதுகூட, வேறொரு காரணத்தைக் காட்டி அதைத் தடை செய்ய முனைந்தான். ஆனால், அவளுடைய பசப்பலில், அவள் விரிந்த வலையில், அவன் நன்றாகச் சிக்கிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறதே! இப்பொழுது அவள் தலையெழுத்தை விளக்கினாலன்றி இவன் பிடிவாதம் தளராது போலிருக்கிறதே!

நெல்லையப்பனுக்குக் காந்திமதியிடம் வாஞ்சை இல்லாமல் இல்லை; அன்பு இல்லாமல் இல்லை; இரக்கம் இல்லாமல் இல்லை. ஆனால் அதற்குத் தன் தம்பியின் உயிரைப் பலியிட அவன் தயாராக இல்லை. தனக்கு இனி வாழ்வில்லை; தான் பட்ட மரம் என்று அவன் எப்பொழுதோ முடிவுறுத்தி விட்டான். ஆகையால், தங்கள் குலம் இனி தம்பி திருமலையின் மூலம் அல்லவா தழைக்க வேண்டும்? அப்படியிருக்க, அவனை இப்படி விஷயம் தெரிந்திருந்தும் பலி கொடுப்பதா? கூடாது; எந்த ரகசியம் தன் மனசினுள்ளே புதைந்து தன்னோடு மடிந்துவிட வேண்டுமென்று கருதினானோ, அதை வெளியிட்டாவது தம்பியைக் காத்துத்தான் ஆக வேண்டும். காந்திமதி கிணறு—குட்டைகளில் விழுந்து உயிர் விட்டு விடுவாள் என்றால், விட்டுக் கொள்ளட்டும்; அல்லது தப்புத் தண்டாவாகப் போய் விடுவாளா? போய்க் கொள்ளட்டும்; இல்லாவிட்டால் மதம் மாறி, மாறாத அவமானத்தைத் தங்களுக்குச் சூட்டி விடுவாளா? சூட்டட்டும். இதையெல்லாம் விடப் பெரிதல்லவா என் அருமைத் திருமலையின் உயிர்? இதற்கெல்லாம் காரண கர்த்தா என்ற முறையில், காந்திமதிக்கு வாழ வழி வகுத்துக் கொடுக்காமல் இழிந்து போகச் செய்தவன் என்ற முறையில், அவளால் ஏற்படும் அவமானங்களை நான் சுமந்து கொள்ளுகிறேன். அதற்காக எங்கள் குல விளக்கைப் பலியிட மாட்டேன்; மாட்டவே மாட்டேன்.

இந்த முடிவோடு அவன், காந்திமதியின் ஜாதகப்படி அவளுக்கு இல்வாழ்வு இல்லை; கழுத்தில் சரடு ஏறும் பேறுகூட அவளுக்கு இல்லை; அவளுக்குத் தாலியிட முயலுபவன், தாலியிடும் முன்பே உயிர் நீத்து விடுவான் என்ற செய்தியைத் தம்பிக்கு அறிவித்து, அதைப் பாலூர் மாப்பிள்ளை ருசுப்படுத்தி விட்டதையும் கூறி, அது காரணமாகவே தங்கள் அத்தைக்குப் பைத்தியம் பிடித்தது என்பதையும் விளக்கினான்.

ஆனால் திருமலை அதை நம்பவில்லை. "ஒனக்கு நல்லா பைத்தியம் புடிச்சுப் போச்சு. நீ காக்கா வலிப்புக்காரனாகப் போயிட்டதினாலே, மொறையா ஒனக்கு மாலையிட வேண்டியவ, இன்னொருத்தனுக்கு மாலையிடக் கூடாதுன்னு இப்பிடி என்னென்னவோ பேசிப்

> கூற்றுவன் பாசத்தால் கட்டுண்டும், விதிவசத்தால் மதியிழந்தும் இருந்தால், புத்திசாலிகளேயாயினும், அவர்கள் அறிவும் மழுங்கி வளைந்து போய்விடும்.
>
> —பஞ்சதந்திரம்.

பாக்கே. ஆனா, என்னதான் வந்துட்டாலும் சதி அண்ணே; நான் காந்திமதிக்குக் கையடிச்சுக் கொடுத்துப்போட்டேன். அவளைத்தான் கட்டிக்கிடப் போகுதேன்!'' என்று அவன் உறுதியுடன் கூறினான்.

''தம்பீ! வேண்டாண்டா ஐயா, நான் சொன்னதெல்லாம் சாமி சத்தியமா நெசந்தாண்டா தம்பீ'' என்று கெஞ்சினான் நெல்லையப்பன்; திருமலையின் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டுக் கதறினான்.

அவன் கைகளை உதறிக்கொண்டு எழுந்தான் திருமலை. ''மனுசனுக்குக் குரோதம் இத்தினி கூடாது அண்ணே. நீ நாசமாப் போயிட்டேன்னா, ஊரிலே உள்ளவங்களும் அப்பிடி நாசமாவே போயிடணுமின்னு நீ நினைச்சுக்கிட்டு இருக்கே. அது நடக்காது. நான் காந்தி மேலே ஆசை வச்சுட்டா, இனிமே எவரு தடுத்தாலும் நாங்க நிக்க மாட்டோம். ஒனக்குப் பிரியமிருந்தா விட்டுக்குப் பெரியவனா இருந்து எங்க கலியாணத்தை நடத்தி வை. பிரியமில்லேன்னா பேசாம இருந்து கிடு. அதுக்காக இப்படிப் பொய்யும் புளுகுணியும் சொல்லிக்கிட்டிராதே. ஊர்ச் சனங்க நீ பேசுத பேச்சைக் கேட்டாங்கன்னா, அத்தைக்குத் தொணையா ஒன்னையும் பைத்திக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிப் போடு என்பாங்க'' என்று வீராவேசத்தோடு மொழிந்துவிட்டுத் தன் படுக்கையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு கீழே போய் விட்டான்.

அன்றிரவு முழுவதும் அனலில் இட்ட மெழுகாக உருகிக் கொண்டிருந்தான் நெல்லையப்பன். அவன் ஒரு கணங்கூடக் கண்ணுறங்கவில்லை. 'எப்படி இதைத் தடுப்பது? எப்படி? எப்படி?' என்று எழுந்த கேள்வி அவனைப் புயலாக உலுக்கிற்று.

விடியற்காலம் ஆகிவிட்டது. சங்கரன் கோவிலில் சங்கொலி கேட்டது. சேவல்கள், காகங்கள் கரைந்தன. ஊர் விழித்தது. அதே சமயம் நெல்லையப்பனின் உள்ளமும் விழித்தது. வழி கண்டு விட்டான் அவன். தன் உயிரைத் தியாகம் செய்து, தம்பியின் உயிரை மீட்கத் துணிந்து விட்டான்.

அவன் மச்சிலிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தபோது திருமலை, வாயில் ஆலங்குச்சியுடன் பல் விளக்க ஆற்றுக்குப் போய்க் கொண்டிருந்தான். அண்ணன் இறங்கி வருவதைக் கண்ட அவன் முகத்தை வெறுப்புடன் ஓர் வெட்டு வெட்டித் திருப்பிக் கொண்டு வேகமாக வெளியே போய் விட்டான். ''பொறாமைக்காரன்! தானும் வாழாமல், பிறத்தியாரையும் வாழ விடாமல் கெடுத்துக் கொண்டிருக்கும்பாவி!'' என்று அவன் திட்டிக்கொண்டே சென்றானோ, என்னவோ?

தம்பி வெளியே சென்று விட்டது சவுகரியமாகப் போயிற்று நெல்லையப்பனுக்கு. அவன் 'மள மள' வென்று அடுக்களைக்கு நடந்தான். அங்கே அடுப்பு மெழுகிக் கோலமிட்டுக் கொண்டிருந்தாள் காந்திமதி. ''இங்கே வா காந்தி, ஒரு விசயம் பேசணும்,'' என்று அவளை அழைத்தான் அவன்.

அவள் 'சீலை'த் தலைப்பில் கையைத் துடைத்துக் கொண்டு அவன் அருகில் வந்து நின்றாள். நெல்லையப்பன் எதையும் ஒளிக்க விரும்பவில்லை. சொன்னான்: ''நேத்து ராவு, திருமலை எல்லா விசயமும் சொல்லிச்சு காந்தி. நானும் யோசனை பண்ணிப் பார்த்தேன். நீ அன்னைக்கு மொதலே என்மேலே ஆசை வச்சிருந்தவ. என்னதான் திருமலையைக் கட்டிக்கிடுன்னு இப்பொம் நினைச்சுட்டாலும், ஒன் மனசு அவனைக் கட்டிக்கிட்டு நிம்மதிப் பட்டுக் கிடாது. ஊர்ச் சனங்களும், 'அண்ணன் தடிப்பயலா நிக்குதான்; தம்பி கலியாணம் கட்டிக்கிட்டான் பாரு'ன்னு பேசுவாக. அதுனாலே....!''

(பிப்ரவரி இதழில் நிறைவுறும்)

ஆட வாரேன்!

நாக முத்தையா

ஆட வாரேன்–உன்னே டாட வாரேன்!
பாடுமெழில் மன்னவனே!–ஆட வாரேன்!
கூடுமுறை தானறிந்து கூடிடுவாய்
கோமகனே!
குன்றுயர்ந்த இன்றமிழே! கூடியபின்
பாடிடலாம்!
—ஆடவாரேன்!

இட்ட முடன் உன்னுடலைக் கைத்தலங்கள்
பற்ற
'அட்டி இலை' என்றுநீயும் என்னுடலைச்
சுற்ற
சுற்றியுள மாந்தரெலாம் 'சுந்தர'மென்
றுரப்ப
'சொந்தமடா இன்ப'மெனச் சிந்தைநலஞ்
சேர்ப்ப
—ஆடவாரேன்!

கொஞ்சுமெழில் முகத்தினிலே மிஞ்சுவளம்
காண
அஞ்சவெழும் காலினிலே அழகமுதைப்
பேண
பிஞ்சுமனப் பான்மையது பெருங்குணத்தால்
மாண
'குஞ்சரமே' என்றெண்ணிக் கோழையர்கள்
நாண
—ஆடவாரேன்!

துள்ளியெழும் வீரத்தைத் துணைக்கரங்கள்
காட்ட
அள்ளிவரும் ஆர்வத்தை நெஞ்சுரந்தான்
கூட்ட
கிள்ளிவரும் துன்பத்தைக் கேள்விநலம்
ஓட்ட
மெள்ளவரும் இன்பத்தை மிக்கநிலை நாட்ட
—ஆடவாரேன்!



உமா ஜனவரி இதழில்:
வெண்ணிலவு நீ எனக்கு!
தொடர்கதை ஆரம்பம்
பூவை எஸ். ஆறுமுகம்
ரமணி.

உறியடி

நா. பார்த்தசாரதி

உறியடித் திருநாள் காதற்கதைக்கு வழி அமைக்கவில்லை; சோகக் கதைக்குத்தான் முடிவு சொன்னது. கைதியின் கதையில் துயரம் இருந்தது. சுவை கதையில் உள்ளது!

வன்னிய நத்தம் ஆதிநாராயணப் பெருமாள் கோவில் வாசலில் எள் போட்டால் எள் விழ இடமில்லை. அவ்வளவு கூட்டம். வாண வேடிக்கைகள் என்ன, பொய்க் கால் குதிரை விளையாட்டென்ன, சதிர்க் கச்சேரிகளென்ன, சங்கீதக் கச்சேரிகளென்ன—ஊர் திருவிழாப் பட்டபாடு பட்டுக் கொண்டிருந்தது. ஆதிநாராயணப் பெருமாளின் உறியடித் திருவிழா என்றால் அக்கம் பக்கம் இருபது கல் சுற்றளவிலுள்ள எல்லாச் சிற்றூர்களுக்கும் பிரசித்தமான விஷயம் அது.

ஆவணி மாதம் கண்ணன் பிறப்புக்கு மறுநாள் ஆண்டுதோறும் உறியடித் திருநாள் நடப்பது வழக்கம். அன்று இரவு எட்டு எட்டரை மணிக்குப் பெருமாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளுவார். பெருமாள் கோயிலைச் சுற்றிப் பிராகாரவழியே புறப்பட்டு உறியடிக்காகத் தயிர்ச் சட்டிகளைக் கட்டித் தொங்கவிட்டிருக்கும் மரத்துக்கு எதிரே வந்ததும் உறியடி நடைபெறும். உறியடிக்காகவே பரம்பரையாகக் கோயில் மானியம் பெற்றுவரும் கரையாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சுவாமியை வணங்கிவிட்டு அர்ச்சகர்கள் செய்யும் வழக்கமான மாலை, பரிவட்ட மரியாதைகளுக்குப் பின் உறிச் சட்டிகளை அடிக்க ஆரம்பிப்பார்கள். சட்டிகளை அடிப்பதற்காக எட்டு ஒன்பதடி உயரமுள்ள கருங்காலி மரக் கழிகளை வைத்துக் கொள்வதுண்டு.

உறியடி நிகழ்ச்சி பார்ப்பதற்கு மிகவும் ரஸமான காட்சியாக விளங்கும். ஒன்பது சிறு மண் கலயங்களில் பசுவின் தயிரை நிரப்பி ஒரு மூங்கில் சட்டத்தில் வரிசையாகக் கட்டித் தரையில் ஊன்றிய இரண்டு மரங்களுக்கு நடுவே தொங்க விட்டுவிடுவார்கள். உறிக் கலயங்கள் தொங்கும் சட்டத்தின் நடுவே ஒரு கயிற்றைக் கட்டி அதன் நுனியைப் பிடித்துக் கொண்டு பின்புறம் ஒருவன் நிற்பான். மற்றோர் புறம் மஞ்சளும் சுண்ணாம்

பும் கரைத்த தண்ணீரைப் பீச்சாங் குழலில் அடைத்துக் கொண்டு மற்ருேர் ஆள் நிற்பான். உறியை அடிக்கும் கரையாளன் பத்துக் கெஜ தூரத்துக்கு முன்னுலிருந்தே ஓடிவந்து தரையிலிருந்து எழும்பிக் குதித்துக் கம்பை ஓங்கி அடிப்ப தற்கு முயல்வான். சரியாக அதே நேரத்தில் பின்புறம் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருப்பவன் உறிச் சட்டத்தை விறுவிறுவென்று மேலே தூக்கி விடுவான். பீச்சாங் குழல்காரன் சுண்ணும்பு நீரைச் 'சர்ர்'ரென்று கரையாளனின் முகத் தைக் குறி வைத்துப் பீச்சுவான். கயிறு இழுக்கப்பட்டதால், உறிச் சட்டம் ஓங்கிய கம்பியின் குறியை மீறிக் கொண்டு மேலே உயர்ந்து விடும். அதே சமயம் பாய்ச்சப் பட்ட சுண்ணும்பு நீர் முகத்திலும் கண்களிலும் வழிந்து கண் பார் வையை மறைக்கும். கரையாளன் ஏமாறுவான். அப்போதெல்லாம் கூட்டத்தில் அலையலையாகச் சிரிப் பொலிகள் கிளம்பும். இவ்வளவு இடையூறுகளையும் பொறுத்துக் கொண்டு எந்தக் கரையானன் சீக் கிரமாக ஒன்பது மண் கலயங்களை யும் அடித்துக் கீழே நொறுக்கித் தள்ளுகிருனே, அவனைக் கூட்டம் முழுவதும் கொண்டாடிப் போற் றும். இதுதான் உறியடித் திரு விழா என்பது.

கரையாளன் கம்பை ஓங்கி வேக மாக ஓடிவரும்போது திடீரென்று உறி எட்டாத உயரம் போவதும், அவன் அடிக்கமுடியாமல் சுண் ணும்புநீர் கண்ணைக் கரிக்கத் திண றிக்கொண் டிருக்கும்போது, உறி எட்டுகின்ற உயரத்திற்கு வருவ தும், வேடிக்கையாக இருக்கும்.

'நாயைக் கண்டால் கல்லைக் காணும், கல்லைக் கண்டால் நாயைக் காணும்' என்று பழ மொழி சொல்வார்களே—அந்த மாதிரி எட்டும்போது அடிக்க முடிவதில்லை. அடிக்க முடிகிற போது எட்டுவதில்லை. இதில் ஒரு பெரிய வாழ்க்கைத் தத்துவமே பொதிந்து கிடப்பதுபோல் எனக் குத் தோன்றியது. வருஷா வரு ஷம் உறியடித் திருவிழாவின் போது அந்தத் தத்துவம் என் சிந் தனையில் வியாபித்து விடும்.

"வாழ்வில் எட்டுவது போலத் தோன்றும் எதுவும் உண்மையில் எட்டுவது இல்லை. எட்டாதது போலத் தோன்றுவது எதுவும் உண்மையில் எட்டாதது இல்லை. இப்படி நடந்துவிடும் என்று உறுதி யாக நினைத்துக்கொண் டிருப்பது அப்படி நடக்காமல் போய்விடு கிறது. இப்படி நடக்காது என்று கணக்கிட்டு முடிவுகட்டிவைத் திருப் பது அப்படியே நடந்து விடுகி றது!"

இந்த உண்மையை உலகத்திற்கு விளக்குவதற்காகத் தான் ஆதி நாராயணப் பெருமாள் வருஷந் தவருமல் உறியடித் திருநாள் கொண்டாடுகிருரோ, என்னவோ? அன்றும் உறியடியாகையினுல் மனத்தில் மேற்கண்ட சிந்தனைகள் நிழலாட வேறு பொழுது போகா மல் வீட்டுத் திண்ணையில் உட் கார்ந்துகொண் டிருந்தேன். ஆரு வது ஆவர்த்தனமாக வெற்றிலைப் பெட்டியைத் திறந்து வெற்றிலை போடத் தொடங்கிய சமயத்தில் திருவடியாப்பிள்ளை வந்து சேர்ந் தார்.

"வாருங்கள், வாருங்கள்! உங் களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்...உறியடி அமர்க்களப் படுகிறதே!..."

"ஆமாம்! அமர்க்களத்துக் குக் கேட்பானேன்? அதுவும் இந்த வருஷம் பீஷ்மக் கரையாளன் உறி யடி. வெளுத்துக் கட்டிவிடுவான். பயல் குறிவைப்பதில் எம்டன்!"

"என்ன, பீஷ்மக் கரையாளஞ? கேள்விப்படாத பெயராயிருக் கிறதே? அப்படிக் கூடவா அந்தச் சாதியில் பெயர் வைக்கிருர்கள்?"

"அது அவன் சொந்தப் பெயர் இல்லை. சேது ராமலிங்கக்கரை யாளன் என்பது இயற்பெயர். இப்போது அவனுக்கு ஐம்பத்தி ரண்டு வயது. இன்னும் கலியாண மாகவில்லை. ஆள் ஒற்றைக்கட்டை தான். பிடிவாதமாக ஏகாங்கியா

யிருக்கிறான். அதனால்தான் 'பிஷ்மக் கரையாளன்' என்று அவனுக்குப் பேர் ஏற்பட்டுவிட்டது.''

''என்ன காரணம்? அவன் இத்தனை வயதுவரை கலியாணம் செய்துகொள்ளாதது ஏன்? உங்களுக்குத் தெரிந்திருக்குமே...?''

''எல்லாம் இந்த 'உறியடி' யாலே வந்த வினைதான். அன்றைக்குச் செய்த சத்தியம்தான் ஆள் இதுவரை வேறு பெண் முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்த்ததில்லை.''— திருவடியாபிள்ளை பெருமூச்சு விட்டார்.

மழைக்காற்று அடித்தால் அருகே எங்கோ மழைபெய்து கொண்டிருக்கிறதென்று அனுமானிக் முடிவதுபோல் திருவடியாபிள்ளை ஒரு விஷயத்தைப் பெருமூச்சு விட்டுக்கொண்டே கூறினார் என்றால் அதற்குள் ஒரு கதை பதுங்கிக்கிடக்கிறதென்று நான் கண்டு கொள்வேன்.

''விவரமாக எல்லாவற்றையும் சொல்லுங்கள்.'' — நான் பிள்ளையவர்களைத் தூண்டித் துருவிக் கேட்டேன். இடது கன்னத்தைப் பந்துபோல் உப்பச் செய்திருந்த புகையிலைச் சாற்றைக் கீழே இறங்கித் துப்பிவிட்டுத் திரும்பவும் பிள்ளை சொல்லத் தொடங்கினார்.

அந்தக் கதை:

சேது ராமலிங்கத்திற்கு அப்பொழுது இருபத்தைந்துவயது. வாலிபப் பருவத்திற் கேற்றாற் போல் 'நிகு நிகு' வென்று வளர்ந்திருந்தான். 'கரு கரு' வென்று வளர்ந்திருந்த கட்டுக் குடுமியை அள்ளி முடிந்துகொண்டு சிவந்த நெற்றியில் கால் துட்டு அகலத்துக்கு விளங்கும் குங்குமப் பொட்டோடு தெருவில் இறங்கி நடந்து வந்தானானால் காமன் பண்டிகையில் மன்மதவேடம் போடும் இளம்பருவத்து ராஜபார்ட்காரனைப் போல இருக்கும். பூசனிக் கொடியில் நுனிப்பகுதி சுருண்டு மினு மினுப்பதுபோல் காதோரங்களில் குடுமியிலிருந்து பிரிந்த கேசச் சுருள் வளைந்து வளைந்து காட்சியளிப்பது, அவனுடைய முகத்தின் அழகிற்குத் தனிக் களையைக் கொடுக்கும்.

அவன் நிறம் குங்குமச்சிவப்பு. அவனுடைய அழகிய புஜங்களைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமானால், 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்று கம்பர் சொல்லுவதைத்தான் சொல்லவேண்டும். அவ்வளவு கவர்ச்சிகரமான புஜங்கள் அவை. அளந்து அளந்து படைத்ததுபோல் வனப்புநிறைந்த அங்கங்களைக்கொண்ட கட்டுமஸ்தான சரீரம் அவனுக்கு. சதா சிரிப்பு கொஞ்சும் அவனுடைய மலர்முகத்தை இன்று முழுவதும் பார்த்துக்கொண்டிருக்கலாம். தாமரை இதழ்களைப்போல அகன்ற பிரகாசமான அவன் விழிகளில் தனிப்பட்ட ஒரு கவர்ச்சி துளும்பும்.

இப்படிப்பட்ட அழகான பிள்ளை தன்னுடைய கலியாண விஷயமாகத் தகப்பனுடன் முரட்டுத்தனமாகச் சண்டை போட்டுக்கொண்டான் என்று சொன்னால் யாராவது நம்புவார்களா?

சேதுராமலிங்கம் சிறு வயதிலேயே தாயை இழந்தவன். அவனுடைய தகப்பனார் சண்முகவடிவேலுக் கரையாளர் தான் அவனை வளர்த்துப் பெரியவனாக்கிவிட்டிருந்தார். தகப்பனாரிடம் அளவற்ற மரியாதையும் விசுவாசமும் உள்ளவனா யிருந்தும் கலியாண விஷயமாக அவர் பார்த்திருந்த பெண் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கு எந்தப் பெண்ணை மிகவும் பிடித்திருந்ததோ அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கும் சண்முகவடிவேலுக் கரையாளர் குடும்பத்திற்கும் ஜன்மப்பகை. இதனால் இருவருக்கும் பெருத்த மனஸ்தாபம் ஏற்பட்டது.

''அடே சேது, நீ என்னிடம் முரண்டு பிடிக்கிறது நியாயமில்லே. உன்னைப் பெற்ற அப்பனை உனக்கு மதிக்கத் தெரியணும். உனக்குப் பார்த்திருக்கிற பொண்ணு கருப்பு, அழகில்லே, என்கிறதற்காக நீ மறுக்கிறது சரி



யாகாது. வருகிற ஆவணி மாதம் உறியடித் திருநாளுக்கு மறுநாள் முகூர்த்தம் கூடப் பார்த்துட்டு வந்தாச்சு!''

''நல்லாப் பாருங்க! எனக்கென்ன? தாலி கட்டப்போறவன் நானா இருந்தாத் தானே?''

''அது முறைப் பொண்ணு. கண்டிப்பா நீதான் தாலி கட்டணும். உனக்கு என்றே பிறந்த பொண்ணை அல்லாட விடக் கூடாது.''

''சூர்ப்பனகை மாதிரி ஒரு அவ லட்சணத்தைக் கொண்டாந்து என் தலையிலே கட்டணும்னு சதிசெய்றீங்க நீங்க.... எனக்கும் வீம்பு முரண்டு எல்லாம் தெரியும்....''

''சீ! நிதானிச்சுப் பேசுடா கழுதை. உன்னை அந்தப் பொண்ணு கழுத்திலே தாலி கட்ட வைக்கலேன்னா நான் சண்முக வடிவேலுக் கரையாளன் இல்லை. பார்த்துக்கிட்டே இரு...''

சேதுராமலிங்கம் பதில் சொல்லவில்லை. தகப்பனாரோடு மேலும்



நீதிபதி: உன்னை நம்பினவரை ஏன் மோசம் செய்தாய்?

குற்றவாளி: என்னை நம்பாதவரை எப்படி சார் மோசம் செய்ய முடியும்?

எதிர்த்துப் பேசிக்கொண்டிருந்தால், அவருடைய கோபம் எல்லை மீறிக் கையிலகப்பட்டதைத் தூக்கி விடுவார் என்பது அவனுக்குத் தெரியும். பேசாமல், அவர் முன்னால் நிற்காமல், வேறெங்கோ சென்று விட்டான். ஆனால்தான் அவ்வாறு வெளியே சென்றதைத் தன்னுடைய சம்மதமாக அவர் எடுத்துக் கொள்ளுவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

பையனை எப்படியாவது வற்புறுத்தியோ, அரட்டி மிரட்டியோ தாம் பார்த்திருந்த சம்பந்தத்தை முடித்து விடுவது என்று பிடிவாதமாக இருந்தார் சண்முக வடிவேலுக் கரையாளர். கலியாணத்தை நிச்சயம் செய்து உறவின் முறையார்களைக் கூட்டி வெற்றிலை பாக்குக் கூடக் கொடுத்து விட்டார். ''என்னய்யா பெரிய கரையாளரே! உம்ம பையன் இந்தப் பெண் வேண்டாம்னு முரண்டு செய்யறானும். நீர் என்னடா என்றால் உம் பாட்டுக்கு வெற்றிலைபாக்கு மாற்றி முகூர்த்த நாளும் பார்த்து விட்டீரே?'' என்று சிலர் தம்முடைய சந்தேகத்தை அவரிடம் கேட்டனர்.

''விடலைப் பயல் தானே? இப்ப அப்படித்தான சொல்லிக்கிட்டிருப்பான். நான் சரிப்படுத்தி விடுவேன். எப்படியும் நம்ப ஆதி நாராயணப் பெருமாள் உறியடித் திருநாளுக்கு மறுநாள் இந்தக் கலியாணம் நடந்தாகணும்....'' என்றார் அவர்.

''என்னமோய்யா! உம்ம மகன் இணங்க மாட்டான் என்று ஊரெல்லாம் ஒரே 'கசமுசலா' இருக்கு. பார்த்துச் செய்யும். சின்னத்தனமாச் சமயத்திலே காலை வாரி விட்டுடப் போறான்,'' என்று எச்சரித்து விட்டுப் போனார்கள் அவர்கள்.

எப்படியானால் என்ன? பெரிய கரையாளருக்கும் அவர் மகன் சேது ராமலிங்கத்திற்கும் கலியாண விஷயமாக மனஸ்தாபம் ஏற்பட்டுப் பெரிய வாய்ச் சத்தம் வரை முற்றி விட்டதென்று ஊராருக்குப் பராபரியாகத் தெரிந்திருந்தது. பெரிய கரையாளர் பார்த்திருந்த பெண் 'அழகில்லை' என்பதற்காகச் சேதுராமலிங்கம் அந்தப் பெண்ணை வெறுத்துக் கொண்டிருக்கும் விஷயமும் பரவியிருந்தது.

சேதுராமலிங்கத்தின் ஆசையை எல்லாம் கொள்ளை கொண்டிருந்தவள் நாராயணக் கரையாளர் மகள் பூங்காவனம். ஆனால் நாராயணக் கரையாளருக்கும் சண்முக வடிவேலுக் கரையாளருக்கும் குடும்பப் பகை முற்றியிருந்தது. பூங்காவனமும் சேது ராமலிங்கமும் தனிமையில் குளக்கரை மாந்தோப்பில் அடிக்கடி சந்தித்துக் கொண்டிருக்கும் விவரம் கூட இரண்டு கரையாளர்களுக்கும் தெரியாது. தெரிந்திருந்தால் நாராயணக் கரையாளர் தம் மகளை மென்னியைத் திருகிப் போடக் கூடத் தயங்க மாட்டார். அதேபோல் பகையாளி மகளோடு உறவாடும் குற்றத்துக்காகச் சண்முக வடிவேலுக் கரையாளரும் தம் மகனை அடித்து நொறுக்கி யிருப்பார். ஆனால் இந்தப் பரம்பரை வைரிகளுக்குக் கொஞ்சமும் தெரியாமல் இவர்களுடைய காதல் வளர்ந்து அருகே நெருங்கிப் பழக ஆரம்பித்

திருந்தனர். அன்பு செய்கின்ற விந்தையை மனிதன் எப்படி அளவிட முடியும்? பூங்காவனமும், சேது ராமலிங்கமும் பிரிக்க முடியாதபடி மனமொருமித்து நெருங்கிப் பழகி விட்டார்கள். அதனுல் தான் தகப்பனுர் பார்த்த முறைப் பெண்ணை மணந்து கொள்ள முடியாதென்று மறுத்து முரண்டு பிடித்துக் கொண்டிருந்தான் சேது ராமலிங்கம். இதைப் புரிந்து கொள்ளாமல் தாம் பார்த்து வைத்திருக்கும் பெண் கறுப்பாக இருப்பதனுல் தான் அவன் மறுக்கிருன் என்றும் கடைசியில் எப்படியும் அவனைச் சரிக்கட்டி விடலாமென்றும் பகற் கனவு கண்டவாறே கலியாண ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து செய்து கொண்டிருந்தார் சண்முக வடிவேலுக் கரையாளர்.

ஆனுல் சேது ராமலிங்கமோ வேறு விதமாகத் திட்டம் போட்டிருந்தான். கடைசி வரை தகப்பனுருடைய ஏற்பாட்டிற்கு சம்மதிப்பவன் போல் பேசாமல் இருக்க வேண்டியது, முகூர்த்தத்துக்கு முதல் நாள் உறியடி விழா முடிந்ததும் இரவோடு இரவாகப் பூங்காவனத்தையும் அழைத்துக் கொண்டு எங்காவது அக்கரைச் சீமைக்கு ஓடி விடுவதென்று தீர்மானித்திருந்தான். அவனைத் தன் உயிரினுமினியவனுகக் கருதியிருந்த பூங்காவனமும் அதற்கு இணங்கி யிருந்தாள். நாட்கள் கழிந்து கொண்டிருந்தன.

வன்னிய நத்தத்தில் நாளை விடிந்தால் உறியடித் திருநாள். அதற்கு மறுநாள் தான் தம் மகனுக்கும் பார்த்து வைத்திருந்த பெண்ணுக்கும் கலியாணம். ஆகையால் அதில் முழு நேரத்தையும் ஈடுபடுத்தியிருந்தார் பெரிய கரையாளர்.

போதாத குறைக்கு அந்த வருஷம் உறியடிமுறையும் அவருடையதாக இருந்தது. ஆனுல் அதற்காக அவர் ஒன்றும் கஷ்டப்படவில்லை.

"இந்தா சேது! இந்தவருஷ உறியடி முறை நமக்குத்தான். நாளைக்குக் கலியாண காரியமா எனக்கு அங்கே இங்கே நாலு இடத்துக்கு அலையணும். நீயே உறியை அடிச்சுட்டுக் கோவில் மரியாதையை வாங்கிட்டு வந்துடு. கலியாணத்துக்கு முதல் நாள் பெருமாளுக்குப் பணி செய்து ஆசி பெற்றது போலவும் ஆகும்" என்று மகனிடம் கூறியிருந்தார்.

"சரி அப்பா! நானே உறியடிக்குப்போய்விட்டுவருகிறேன்," என்று அவனும் சம்மதித்திருந்தான். 'கடைசி நாள், ஊரை விட்டே கண்காணுத சீமைக்கு ஓடப்போகின்றோம், போவதற்கு முன் பெற்ற தகப்பனை ஏமாற்றினுலும் பெருமாளையாவது திருப்திப் படுத்திவிட்டுப் போவோம்' என்றுதான் அவன் அதற்குச் சம்மதித்திருந்தான். உறியடித்து முடிந்ததும் நேரே குளக்கரை மாந்தோப்புக்குப் போனுல், அங்கே பூங்காவனம் ஓடுவதற்குத் தயாராகக் காத்திருப்பாள்; அவளோடு இரவோடு இரவாகவே பேய்விட்டால் நாளைக் காலை தூத்துக்குடி

டைரக்டர்: தீபாவளிதான் அமர்க்களமாகப் போய்விட்டதே! இன்னும் முகத்தை சோகமா வச்சிக்கிட்டுருக்கியே? சிரிச்ச முகத்தையே பார்க்க முடியலியே?

மனைவி: நான் ஒண்ணும் நடிகையல்ல. நீங்க சொல்ற மாதிரி அடிக்கடி முக பாவத்தை மாத்திக் காண்பிக்க!

சென்று கொழும்புக்குக் கப்ப லேறி விடலாம்.

எல்லாவற்றையும் ஒழுங்காகத் திட்டமாக நடைபெறத்தக்க விதத் தில்தான் நினைத்திருந்தான் அவன். 'எண்ணங்களை எண்ணுவதுதான் மனிதர்களால் ஆகமுடிவது. எண் ணங்கள் நிறைவேறுவது தெய்வ சித்தத்தால் ஆவது' என்று அவன் கண்டானா, என்ன?

உறியடி விழாவின் கோலா கலம் ஊரில் உற்சாகமாகப் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. அந்திநேரம் ஆயிற்று. சண்முக வடிவேலுக் கரையாளர் மகனை அழைத்து உறியடிக் கழியைக் கையில் கொடுத்துக் கோவிலுக்கு அனுப்பினார்.

"ஏ அப்பா! விடிஞ்சாக் கலியா ணம். உறியடியை முடிச்சிட்டுப் பெருமாளை நல்லபடியா வேண்டிக் கிட்டுவா. பாய்ஞ்சு பாய்ஞ்சு அடிக்கிறேன் என்று வீணு உடம் பை அலட்டிக்கிடாதே. நான் போய் மேளகாரனுக்குச் சொல்லி விட்டு ரங்கநாத உடையாரு கடையிலே நாலுகட்டு வெத்திலை எடுத்தாரணும். அப்புறம் பந்த லுக்கு வாழைமரம் தோரணம் கட் டணும்" என்று அவனுக்கு விடைகொடுக்கிற சாக்கில் கலி யாண ஏற்பாடுகளின் பெரு மையை அளந்தார்.

"செய்யுங்கள்; செய்யுங்கள்! நாளைக் காலைவரை என்ன வேண்டு மானாலும் செய்யுங்கள். நாளை இந்நேரம் உங்கள் மகனும் நாரா யணக் கரையாளர் மகளும் கொழும்புக் கப்பலிலே போய்க் கொண டிருப்பார்கள்" என்று மனத்தில் கறுவிக்கொண்டே கிளம்பினான் அவன்.

"அடே அப்பா சேது! வாசல் லே நல்ல சகுனம் ஆகுதான்னு பார்த்துக்கிட்டுப் புறப்படு!"

"ஊம்! ஊம்! எல்லாம் நல்ல சகுனந்தான் ஆகுது. நான் வரேன்!"—வேண்டா வெறுப்பா கக் கூறிவிட்டுச் சென்றான் சேது ராமலிங்கம். கிழவர் உட்புறம் சென்றார். இன்று போலவே அன் றும் கோவில் வாசலில் உறியடி யைக் காண்பதற்காக ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். மரங் களுக்கு இடையே மூங்கிற் சட்டத் தில் உறிக் கலயங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. உறிக் கலயங் களுக்குக் கீழே ஒருபுறம் பெண் களும் மற்றொருபுறம் ஆண்களுமா கப் பார்ப்பதற்குக் காத்திருந்தார் கள்.

ஆதிநாராயணப் பெருமாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி னார். வீதிப் புறப்பாடு முடிந்தபின் உறிமரத்துக்கு முன்னால் குதிரை வாகனம் வந்து நின்றது. சேது ராமலிங்கம் கம்பும் கையுமாகப் பயபக்தியுடன் வாகனத்தடியில் போய் அடக்க ஒடுக்கமாக நின் றான். அர்ச்சகர் அவன் கழுத்தில் மாலை போட்டுவிட்டுத் தலையில் பரிவட்டம் கட்டினார். அவன் மரி யாதைகளை ஏற்றுக்கொண்டு சாஷ் டாங்கமாகக் கீழே விழுந்து பெரு மாளை வணங்கினான். பின், அடிக் கும் கழியை வலது கையில் மாற் றிப் பிடித்துக்கொண்டு உறி மரத்தை நெருங்கினான். கூட்டம் இருபுறமும் ஒதுங்கி அவனுக்கு வழிவிட்டது. உறியடிக்கப்போகி றான் என்ற ஆவலால் கூட்டத்தில் சப்தம் குறைந்து அமைதி நிலவி யது.

மஞ்சளையும் சுண்ணம்பையும் கரைத்துப் பீச்சாங் குழாயில் அடைத்துக்கொண்டு ஒருவன் வந்து நின்றான். இன்னொர் பக்கம் உறிச் சட்டத்தை இழுத்து உயரே தூக்கும் கயிற்று நுனியைப் பிடித் துக்கொண்டு இன்னொருவன் நின் றான். பெண்கள் கூட்டத்தில் முண் டியடித்துக்கொண்டு முன்புறம் நின்றவளைப் பார்த்தபோது சேது ராமலிங்கம் முகத்தைச் சுளித் தான்.

மறுநாள் எந்த 'அவலட்சணத் திற்கு' அவன் மாலையிடவேண்டு மென்று ஏற்பாடாகி யிருந்ததோ அந்த 'அவலட்சணம்' கையில் ஒரு சிறுமியைப் பிடித்துக் கொண்டு முன்புறம் நின்றுகொண் டிருந்தது. தன் கணவனாக வரப்

போகிறவனின் தீரத்தைக் கண்டு மகிழ்வதற்காக வெட்கத்தையும் மறந்து வந்திருந்தாள் அவள். தீவட்டிகளின் வெளிச்சத்தில் அவளுடைய அட்டைக்கரி நிறத்தைப் பார்த்தபோது அருவருப்பாக இருந்தது. அந்த வெறுப்பில்தான் முகத்தைச் சுளித்தான் அவன்.

''உன் லட்சணத்துக்கு இதைப் பார்க்க வேறு வந்திட்டியா பெண்ணே?'' என்று எண்ணிக் கொண்டே உறியை எப்படிப் பாய்ந்து அடிக்கலாமென்று குறி பார்த்தான் சேது ராமலிங்கம்.

கம்பை இரண்டு கைகளிலுமாகத் தாங்கிக்கொண்டு துள்ளி ஓடி வந்து மேலெழும்பி அடித்தான். முதல்தடவை அடிபடவில்லை. கயிற்றுக்காரன் உறிச்சட்டத்தை மேலே இழுத்துவிட்டான். பீச்சாங்குழல் காரன் முகம் நிறையச் சுண்ணும்புத் தண்ணீரைப் பீச்சி விட்டான். சுண்ணும்பு கண்ணைக் கரித்தது. எரிச்சலாக இருந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டான். கூட்டம் உறிக்காரன் அடிக்க முடியாமல் ஏமாந்துவிட்ட காட்சியை ரஸித்துக் குலுங்கக் குலுங்கச் சிரித்துக்கொண்டிருந்தது.

இரண்டாம் முறையாக அவன் குறிவைத்துப் பாய்ந்து கம்பை ஓங்கிக்கொண்டு ஓடிவந்தான். இந்தத் தடவை சேதுராமலிங்கத்திற்குத்தான் வெற்றி. கயிற்றைப் பிடித்தவனும், பீச்சாங்குழல் காரனும் ஏமாந்து விட்டனர். ஒன்பது கலயங்களில் மூன்று கலயங்களை அடித்துக் கீழே தள்ளிவிட்டான் சேது ராமலிங்கம். கூட்டத்தில் 'சபாஷ்' 'பிரமாதம்' 'அப்படியடிடா ஆம்பிளைச் சிங்கம்'— என்று பலவேறு தினுசான பாராட்டுக் குரல்கள் எழுந்தன.

மூன்ரும் தடவை அவன் அடிக்க ஓடிவரும்போது தான் அந்த விபரீதமான சம்பவம் நடந்துவிட்டது. 'சற்றுமுன் அவனுக்கு ஏமாந்து போய் விட்டோமே' என்ற ரோஷத்திஞல் கயிறு, பீச்சாங்குழலை, வைத்துக்கொண்டிருந்த ஆட்கள் உஷாராக இருந்தனர். அவன் தூரத்திலிருந்து ஓங்கிய கம்புடன் துள்ளிப் பாய்ந்து ஓடி வந்தான்.

அப்போது அவனுக்காக அவன் தகப்பன் பார்த்துவைத்திருந்த அந்தப் பெண்ணின கைப்பிடியிலிருந்த சிறுமி மெல்ல நடந்து உறிக்குநேரே குறுக்கே ஓடி நின்று விட்டாள். சேது ராமலிங்கம் புலிப்பாய்ச்சலில் கனவேகமாக ஓடி வந்து கொண்டிருந்தான். குழந்தை அவன் வழியின் குறுக்கே நின்றது.

''ஐயோ! குழந்தை...நடுவிலே ஓடிப்போய் நிக்கிதே!''—அந்தப் பெண்— அவனுடைய எதிர்கால மனைவி— அலறிக் கொண்டே குழந்தையை எடுப்பதற்காகக் குறுக்கே பாய்ந்தாள். கூட்டத்தில் பலவிதமான குரல்களும், பரபரப்பும், குழப்பமும், உண்டாயிற்று. அப்போது அந்தப் பாழய்ப்போன பீச்சாங் குழற்காரன் சும்மா இருந்து தொலைக்கக்கூடாதா?... ஓடி வந்துகொண்டிருந்த சேது ராமலிங்கத்தின் கண்களில் சுண்ணும்பு நீரைப் பீச்சிவிட்டான். கண் பார்வை மறையவே எதிரே இருப்பது தெரியாமல் உறியைத்தான் அடிக்கிருேம் என்று நினைத்துக் கொண்டு பலங்கொண்டமட்டும் கம்பை ஓங்கி ஒரு போடு போட்டான் அவன்.

அடுத்த விநாடி 'ஐயோ!' என்று வீரிட்டு அலறிக்கொண்டு கீழே சாய்ந்தாள் அந்தப் பெண். உறியின்மேலே விழவேண்டிய அடி குழந்தையின் உயிரைக் காப்பாற்ற ஓடிவந்த பெண்ணின் மண்டையில் விழுந்துவிட்டது. குழந்தை எப்படியோ தப்பிவிட்டது. அதற்கு ஒரு விபத்தும் இல்லை. ஆனல் அந்தப் பெண்....?

அலறலைக்கேட்டுச் சுண்ணும்பு நீரின் எரிச்சலையும் பொறுத்துக் கொண்டு திடுக்கிட்டுப் போய்க் கண்களைத் திறந்தான் அவன். அவன் மணக்க இருந்த 'அவலட்சணம்' மண்டை நட்ட நடுவில் இரண்டாகப் பிளந்து இரத்தம்

ஒழுகக் கீழேவிழுந்து கிடந்தாள். கூட்டத்தி லிருந்தவர்களுக்கு விஷயம் புரியக் கொஞ்சநேரம் பிடித்தது.

ஒரே கலவரம். உறியடித் திருநாள் அலங்கோலமாக — அரைகுறையாக முடிந்தது. சேது ராமலிங்கத்தின் கண்முன் உலகமே சுழல்வது போலிருந்தது. யாரோ ஓடிப்போய் வண்டி கொண்டு வந்தார்கள். அந்தப் பெண்ணைத் தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டு வைத்தியர் வீட்டுக்குப் போனார்கள். வைத்தியர் பார்த்தார். தேங்காயை உடைக்கிற மாதிரி நட்டநடு மண்டையை இரண்டாக உடைத்துப்பிளந்திருந்தது. அந்தப் பெண் அதற்குமேல் எந்த சிகிச்சையாலும் பிழைக்கும் என்று அவரால் நம்பமுடியவில்லை. ஆனாலும் வந்தவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக மண்டையில் ஏதோ மருந்துவைத்துக் கட்டினார். விதி பெரியதாக இருந்தால் மருந்தும் மாயமும் என்ன செய்யும்? நோய்க்குத்தான் மருந்துண்டு. விதிக்குக்கூடவா மருந்து உண்டு? அந்தப்பெண் அன்றிரவே இறந்து விட்டாள்.

அவளுடைய தகப்பனை யாரோ கிளப்பிவிட்டு விட்டார்கள்.

''உன் மகளைக் கட்டிக்கொள்ள அந்தப் பயல் சேது ராமலிங்கத்திற்கு இஷ்டமே இல்லை. 'அவலட்சணம்' 'அவலட்சணம்'னு கரித்துக் கொட்டிக் கொண்டிருந்தான். அதுனாலே இது தற்செயலா நடந்தது இல்லை. அந்த அயோக்கிய ராஸ்கல் வேணும்னே மண்டையைப் பிளந்திருக்கிறான். தற்செயலா விழுந்த அடியானால் இப்படி உயிர்போகிறவரை ஆகுமா?''

காய்ந்த வைக்கோற் போரில் எங்காவது ஒரு மூலையில் நெருப்பை அள்ளிவைத்தால் பற்றாமலாபோகும்? 'தன் மகளைக் கட்டிக்கொள்ளப் பிடிக்காததனால் அவன் வேண்டுமென்றே உறியடிக்கிற பாவனையில் மண்டையைப் பிளந்து கொன்று விட்டான்' என்றே அவர் நம்பினார்.

> பணம் உள்ளவனுக்கு நண்பர்கள் உண்டு. பணம் உள்ளனுக்குப் பந்துக்கள் உண்டு. பணம் உள்ளவனே உலகத்திலே ஆண்மகன். பணம் உள்ளவனே பண்டிதன்.
>
> பஞ்சதந்திரம்

''எங்கே அந்த நாய்ப் பயல்? பிடி சொல்றேன். கழுத்தைச் சீவிக் கையிலே கொடுத்திடலாம். பெண்ணைப் பிடிக்கலேன்னாக் கட்டிக்க இஷ்டமில்லைன்னிட்டுப் போகட்டுமே? அதுக்காகப் படுகொலை செஞ்சிருக்கானே?''—பெண்ணின் தகப்பனும் அவனைச் சேர்ந்தவர்களும் அரிவாளும் கம்புமாகக் கைக்கு வந்ததை எடுத்துக் கொண்டு சண்முகவடிவேலுக் கரையாளர் வீட்டின்மேல் படையெடுத்துவிட்டார்கள்.

பாவம்! பெரிய கரையாளருக்கு அதுவரை சமாசாரம் எட்டவில்லை. அவர் மறுநாள் நடக்க இருந்த கலியாணத்துக்காகப் பந்தற்கால்களில் வாழைமரம் கட்டிக்கொண்டிருந்தார். சம்பந்தியாகப் போகிற மனிதன் கத்தியும் கம்புமாக யுத்தத்துக்கு வருகிறமாதிரி வந்தபோது அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

''வாங்க அண்ணாச்சி! வாழைமரம் நானே வெட்டியாந்து கட்டிட்டேனே? நீங்க வேறே அரிவாளை எடுத்துக்கிட்டுக் கிளம்பிட்டிங்களே? அப்படித் திண்ணையிலே குந்துக்க,'' என்று சம்பந்தியைச் சிரித்துக் கொண்டே வரவேற்றார்.

''வே! பெரிய கரையாளரே! வாழைமரத்தை வெட்ட அரிவாள் கொண்டாரல்லே. உம் மவன் சத்தையே வெட்டக் கொண்டுவந்திருக்கேன்! எங்கே உம்ம மகன்?''

''ஏன்? என்ன நடந்திச்சு? அவன் இன்னும் உறியடியிலேருந்து திரும்பியே வரலியே!''

"ஓகோ, அப்படியா சேதி? கொலேபண்ணிட்டு ஓடித் தப்பிச்சுடலாம்னு நினேச்சானே?"— மீசை துடி துடிக்க நெருப்புப் பழமெனச் சிவந்த கண்களே உருட்டி விழித்துக் கொண்டே கத்தினர் பெண்ணேப் பறிகொடுத்தவர்.

அதற்குள் ஒருவன் நடந்ததைச் சுருக்கமாகக் கிழவருக்குக் கூறினன்.

"அண்ணே! சேது குளத்தங்கரைப் பக்கமா ஓடிக்கொண்டிருந்தது கொஞ்சநேரத்துக்கு முன்னே நான் பார்த்தேன்!" என்றுன் ஒருவன். உடனே அத்தனே பேரும் திமு திமுவென்று குளத்தங்கரைப் பக்கம் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர்கள்.

அங்கே குளக்கரை மாந்தோப்பில் ஓடுவதற்குத் தயாராயிருந்த பூங்காவனமும் சேதுவும் அவர்கள் கையில் சிக்கிக் கொண்டனர்.

"ஏண்டாலே! இந்தப் பூங்காவனத்து மேலே இருக்கிற ஆசையாலே என் மகளே அடிச்சுக் கொன்னிட்டு இவளோடே ஓடலாமின்னு பாத்தியா?"—அவர் இரைந்து கூப்பாடு போட்டார்.

"நான் வேணுமின்னு ஒண்ணுஞ் செய்யலே. அவ குறுகே வந்திருக்கா. அது எனக்குத் தெரியாது. அந்த நேரம் பார்த்து மஞ்சள் தண்ணிக்காரன் கண்ணிலே பீச்சுப்பிட்டான். உறி மேலே அடிக்கிறதாக நினேச்சுக்கிட்டு அடிச்சிட்டேன். அது இப்படி ஆகும்னு எனக்குத் தெரியுமா? சத்தியமா சாமி சாட்சியா நான் வேணுமின்னு செய்யலிங்க...."— அவன் கெஞ்சினன்.

"கொலேகாரப் பயலே நாடகமா ஆடுறே?"—அரிவாளே ஓங்கி வெட்டப் போனர் அவர்.

"வேண்டாங்க அண்ணுச்சி! இவனேக் கொன்னிட்டு நீங்க செயிலுக்குப் போகணுமா? இப்படியா இவனேப் போலீசுலே பிடச்சுக் கொடுத்திடுவோம்?" என்று சொல்லி அவர் கையைப் பிடித்துத் தடுத்தார் விவரம் தெரிந்த ஒருவர். இதற்குள் நாராயணக் கரையாளர் வீட்டில் தம் மகளேக் காணுமல் தேடிக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தார்.

பெண்ணேப் 'பறி கொடுத்தவரும்', பெண்ணேப் 'பறி கொடுக்க' இருந்தவருமாகச் சேர்ந்து சேதுராமலிங்கத்தைப் போலீஸில் பிடித்து ஒப்படைத்தார்கள். தம் மகளே ஏமாற்றி அக்கரைச் சிமைக்குக் கடத்திக் கொண்டு போக முயன்றதாக நாராயணக் கரையாளரும், உறியடித் திருநாளின் போது தன் பெண்ணே வேண்டுமென்றே மண்டையைப் பிளந்து கொன்றதாக மற்றவரும், சேதுராமலிங்கத்தின் மேல் 'கிரிமினல்' வழக்குத் தொடர்ந்தார்கள்.

வழக்கு முடிவில் சேதுவுக்கு ஆயுள் தண்டனே விதிக்கப்பட்டது. அந்தமான் தீவுக்குக் கொண்டு போகப் பட்டான் அவன். மகனுல் ஏற்பட்ட அவமானம் தாங்காது சில நாட்களில் சண்முக வடிவேலுக் கரையாளர் உயிர் துறந்தார். நாராயணக் கரையாளர் பூங்காவனத்தை யார் யாருக்கோ கட்டிக் கொடுத்துவிட முயன்றுர். சேதுவுக்கும் அவளுக்கும் முன்பிருந்த தொடர்பைப் பற்றி ஊரில் செய்தி தெரிந்திருந்ததனுல் கௌரவமானவர்கள் யாரும் அவளேக் கட்டிக் கொள்ள முன்வரவில்லே. கடைசியில் பணததின் மேலும் சொத்துச் சுகங்களின் மேலும் ஆசைக்காட்டி ஒரு ஏழைப் பையனே அவளுக்குக் கணவனுக்க ஏற்பாடு செய்தார். மணந்தால் சேதுராமலிங்கத்தைத் தவிர இந்த ஜன்மத்தில் வேறெவரையும் மணப்பதில்லே என்ற திட மனத்தோடு இருந்த பூங்காவனம் கலியாணத்திற்கு முதல் நளிரவு மயில்துத்தத்தைச் சாப்பிட்டு இறந்தாள்.

காலப் பெருந்தருவிலிருந்து வருஷ இலேகள் பழுப்பேறி பழுப்பேறி உதிர்ந்து கொண்டிருந்தன. பல வருஷ காலத்துக்குப் பின் இந்தியக் குடியரசு தினத்தன்று பாரத



சுதந்திர சர்க்கார் கைதிகளுக்கெல்லாம் பரிபூரண விடுதலை அளித்தனர். அப்போது சேது ராமலிங்கமும் விடுதலையாகி வந்தான்.

ஊருக்கு வந்ததும் தகப்பனுர் காலமானதும், பூங்காவனம் தற்கொலை செய்து கொண்டதும் அவனுக்குத் தெரிய வந்தன. கோவிலில் அவனுக்கு உறியடி பாத்தியதை கிடையாது என்ருர்கள். நாலைந்து வருஷமாகக் கோவிலாரோடு கோர்ட்டில் வழக்குத் தொடுத்துப்போராடிய இறுதியில் மீண்டும் உறியடிப் பாத்தியதை உண்டு என்று செய்து கொண்டான்.

பழையவற்றை மறந்து ஊரில் வேறு சிலர் அவனுக்கு அத்தனை வயதிற்கு மேலும் தங்கள் பெண்ணைக் கொடுக்க முன் வந்தனர். அவனே. "பூங்காவனத்திற்குப் பின் நான் வேறு யாரையும் மணக்க விரும்பவில்லை" என்று சத்தியம் செய்திருப்பதைக் கூறி மறுத்து விட்டான்.

கோர்ட்டில் தீர்ப்பான பின்பு இதுதான் அவன் அடிக்கிற மூன்ருவது உறியடி முறை. இன்னும் கலியாணமே செய்து கொள்ளாமல் 'பீஷ்மக் கரையாளன்' என்ற பெயருக்கு இலக்கியமாகவே இருக்கிறன். காலம்கூட அவனை மாற்ற முடியவில்லை.

திருவடியா பிள்ளை கூறி முடித்தார். ஒரு நீண்ட பெருமூச்சோடு கதைக்கு முத்தாய்ப்பு வைத்தார்.

பல நாட்களாக நான் சிந்தித்துக் கொண்டிருந்த தத்துவம் அன்றைய தினம் எனக்கு நன்ருக விளங்கி விட்டது.

எட்டுவது போல் தோன்றி எட்டாமல் போவதும், எட்டாதது போல்தோன்றி எட்டுவதும், நடப்பதுபோல், தோன்றி நடக்காமல் போவதும், நடக்காதது, போல் தோன்றி நிச்சயமாக நடப்பதும் உறியடி விழாவில் மட்டும் அல்ல; வாழ்க்கையிலும் அப்படி உண்டு போலிருக்கிறது! ★

புத்தகங்கள் வெளியிட்டேன்

சங்கு கணேசன்

,அரசியல் பெயர் நினைவுக்குள் ஓடி வருகிறதா?—இக் கட்டுரையின் ஆசிரியர் 'ஸ்ரீமகள் புத்தக நிலைய'த்தின் உரிமையாளர். 'கலைமன்றம்', 'கலை அரங்கம்' பத்திரிகைகளை நடத்தி வருகிறார்.

நாட்டில் எத்தனையோ புத்தகங்கள் நடமாடுகின்றன; எத்தனையோ புத்தகங்கள் நலிந்து போகின்றன.

புத்தம் புதியதாக வெளிவரும் புத்தகங்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் புத்தீசல் போன்று அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன; அவைகள் மக்களால் வரவேற்கப் படாவிட்டால், முதற் பதிப்புடன் ஆயுளை முறித்துக் கொள்கின்றன. இன்றையப் புத்தகங்களின் ஆயுள் பெரும்பாலும் இப்படியாகததான் இருக்கின்றன வென்றால் வருந்துவதற்குக் காரணமே கிடையாது.

எங்கோ ஒரு சில புத்தகங்கள் தாம் இறவாப் புகழ் பெருகின்றன; ஒரு சில ஆசிரியர்கள் தாம் இறவாப்புகழுடம்பைப் பெறுகின்றனர். நம நாட்டில் இத்தகைய நிலை இன்னும் மாறுபடாததற்குக் காரணம், எழுத்தாளர்கள் இன்னும் சிந்தனையில் பணக்காரர்களாகவில்லை; எனவேதான் அவர்கள் வாழ்க்கையிலும் ஏழ்மைத் தனம் தாண்டவமாடுகிறது.

எழுத்தாளர்கள் எழுதும் புத்தகங்கள் மக்களைக் கவரும் நிலையிலிருந்தால் தானே, பதிப்புகள் அதிகமாகும்? பணமும் அவர்கள் கையில் அடிக்கடிச் சேர்ந்து கொண்டேயிருக்கும்? அடுத்து எழுதிக் கொடுக்கும் புத்தகத்தையும் பதிப்பாளர் மனமுவந்து—மகிழ்ச்சிப் புன்னகையுடன் வெளியிடத் துணிவார்? அப்படியில்லாமல், போட்ட முதல் வெற்றுக் காகிதத்துடன் தூங்குமேயானால், அடுத்து வெளியிட மனம் எப்படித் துணியும்? அந்த ஆசிரியரைக் கண்டதும், வெறும் காப்பி வாங்கிக் கொடுத்துப் போய் வரச் சொல்லலாமா என்றல்லவோ தோன்றும்? முதலுக்கு மோசமாகும் அளவிற்கு யாரே வியாபாரம் செய்வர்?

எழுத்தாளர்களுள் பல ரகங்களைபார்வையிட்டிருக்கிறேன். சில புத்தகங்கள் 'போணி' யாவதும் கிடையாது என்றால், அதனுடைய மகத்துவத்தை இப்போது தான் புரிந்து கொண்டேன்.

சுயமாகச் சிந்தித்து எழுதும் எழுத்தாளர்கள் மிகக்குறைவாகத் தான் காணப்படுகின்றனர். இவர்கள் நிறையப் புத்தகங்களைப் படித்துத் தேவைக்கு மீறிய அறிவையும் பெற்றுத் திகழ்வார்கள். இவர்

கள் படைப்புகளில் பாத்திரத்தை நடத்திச் செல்லும் கவனம் மட்டு மல்லாமல், கதைப் பின்னலையும், கருத்தையும் காணமுடியும். எந்த நுழைவையும் சிந்தித்து, அறுதியிட்டு நுழைப்பர். இவர்கள் படைப்புகள் அமரத்துவம் அடைகின்றன.

ஒரு சில எழுத்தாளர் 'காப்பி' யடிப்பதைக் கையாண்டு, பதிப்பாளர்களிடம் வருவர். அவர்கள் தலைவிதி முதல் புத்தகத்துடனேயே முற்றுப் பெற்று விடும்.

இன்னும் சில எழுத்தாளர்கள் உண்டு. இவர்கள் பிறரைக் கொண்டு எழுதி, அதைத் தன்னுடைய பெயரால் வெளியிட்டு, அதனுல் மகிழ்ச்சியும் கொள்ளுவர். பாவம், வெறும் இவருடைய பெயரைத் தவிர்த்து வேறென்ன காண்கிருேம், நாமறியோம்.

இப்படியாகப் பல எழுத்தாளர்களை நான் சந்திக்கிறேன். இவர்கள் பட்டியலை விரித்தால் கட்டுரை நீளும். இவர்களுள் சிந்தனையற்ற—படிப்பற்ற—எழுத்தாளர்களின் புத்தகத்தை வெளியிடுவதைக் காட்டிலும், அறிவான புத்தகங்களை வெளியிடுவதில்தான் 'நன்மை' என்ற சொல்லுக்கே 'கற்பை'த் தோற்றுவிக்கிருேம். அந்தக் கற்பு எழுத்தாளருக்கும் இருக்க வேண்டும்; பதிப்பாளருக்கும் இருக்கவேண்டும்.

நிற்க,

வியாபாரங்களில், புத்தகம் வெளியிட்டு வியாபாரம் செய்வது புனிதத் தன்மையைப் பெற்றதாகும். மக்களுக்கு அறிவுச் செல்வங்களை வழங்குகிருேம் என்று பெருமைப்படக் கூடிய வியாபாரம் புத்தகம் வெளியிடுவது என்ருல், மறுப்பவர் இருக்க முடியாது என்றே எண்ணுகிறேன்.

இந்த வியாபாரம் நல்ல ஆசிரியர்களின் சிந்தனையைப் பொறுத்திருக்கிறதே யொழிய, மூலதனத்திலல்ல.

இதை என்னுல் உணர முடிந்ததற்குக் காரணம், நான் புத்தகங்களை மட்டும் வெளியிடாமல், பத்திரிகைகளையும் நடத்தி வருகிறேன். எனவேதான், பதிப்புத்தொழிலுக்கு முக்கியமானது நல்ல ஆசிரியர்களின் வரவேற்கத்தக்க சிந்தனை என்பதைக் குறிப்பிட முடிகிறது.

புத்தகம் வெளியிடும் புனிதமான தொழிலை நடத்தி வரும் நான், மற்ருென்றையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்றையத் தமிழுலகம் விழிப்படைந்திருக்கிறது. தமிழ் வாசகர்களின் கண்ணேட்டம் எழுத்தாளர்களின் பேனுமுனையின் கூர்மையை எடைபோடும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. ஏமாற்றும் செயல், இனி எழுத்தாளர்களிடமும் தலைநீட்ட முடியாது; பதிப்பாளர்களிடமும் வாலைக்காட்ட முடியாது. மக்களின் அறிவுப் பசிக்கு இனி தக்க உணவைப் படைத்தாலன்றி, உருப்படமுடியாது.

எனவேதான் நல்ல புத்தகங்கள் இனி நாட்டில் நடமாடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது; அவைகள் வாழக்கூடியனவா; வாசகர்களால் வரவேற்கக் கூடியனவா என்று துருவித்துருவிப்பார்க்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அதனுல் தான் நானும், பாரதியாரின் புத்தகங்களை வெளியிடும் பொறுப்பில் தீவிரமாக இறங்கினேன். இம் மாதிரியான செயலுக்காகப் பலரும் பாராட்டவும் செய்தனர்.

அண்ணல் காந்தியாரின் படைப்புக்களையும், இந்திய முடிசூடா மன்னர் நேரு அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் வெளியிட்டதில் கண்ட பெருமையை, இதற்குமுன் வெளியிட்ட புத்தகங்களில் நான் காணவே இல்லை. இவையும், இம் மாதிரியான நல்ல படைப்புகளையும், மக்கள் விரும்பும் நாவல்களையும் வெளியிடுவதில் தீவிரமாக முனைந்து வருகிறேன். ஏனென்ருல், தமிழ் புத்தக நெடுங்கணக்கில், நான் வெளியிட்டவைகளும் இடம் பெற்றிருக்கின்றன என்று தெரியவந்தால் தானே 'புத்தகம் வெளியிடும் தொழில் புனிதமான தொழில்' என்று கூறுவதில் பொருள் இருக்கிறது? ★

நான் படைத்த பாத்திரங்களில் எனக்குப் பிடித்தது!

ஸ்ரீவத்ஸன்

புதிய பகுதி இது. கதாசிரியர்கள் படைத்த பாத்திரங்களில் அவரவர்களுக்குப் பிடித்தவர்களைப் பற்றி எழுதுகிறார்கள். தொடரும் பகுதி இது.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். தாய் சொல் மிக்க மந்திரமில்லை.

தாய்க்குச் சமானமாக உலகில் வேறு எதுவுமே கிடையாது. பாரத நாடு பல ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்தும் கூட இன்று மகோன்னத நிலையில் இருந்து வரக் காரணம் தாய் குலத்தின் தொண்டுதான்.

தாய்குலம் சேவை செய்யாதிருந்தால் காந்தி மகான் கிடைத்திருப்பாரா? மனிதர்குல மாணிக்கம் நேரு கிடைத்திருப்பாரா? தமிழ் நாட்டின் தவப் புதல்வர் ராஜாஜி கிடைத்திருப்பாரா?

தாய்க் குலத்தின் சேவையைப் புகழ்வது கொல்லன் தெருவில் ஊசி விற்பது போல் ஆகும்.

ஒரு தாய்; அவள் வயற்றில் பிறந்தான் ஒரு கிராதகன். மனைவி பேச்சைக் கேட்டு ஒரு நாள் அவன் தன் தாயையே தடிகொண்டு அடிக்கிறான்—மனிதப் பண்பை இழந்து.

தாய் அழுகிறாள்; தன் பேரில் விழும் அடியின் வேதனையால் அல்ல. பின்பு அழுவானேன்?—அடிக்கும் தன் மகனின் கை நோகுமே என்று!...அவனுக்கும் கையில் பலம் உண்டாகிறது. அவளையும் அறியாமல் 'அம்மாடி' என்கிறாள்.

உலகத்திற்கே சேவை செய்யும் தாய்க் குலம் தமிழ் நாட்டுச் சிறுகதைக்குத்தானா சேவை செய்ய மறுத்துவிடும்!

சிறுகதை உலகில் மகத்தான சேவை செய்திருக்கிறது தாய்க் குலம்.

ஒரு தாயின் பாசம், கடமையுணர்ச்சி, மன எழுச்சி இவைகளுக்கு ஒரு உருவம் கொடுத்து சிறுகதை எழுத நீண்ட நாட்களாக மனத்தில் ஒரு ஆவல். தாயைச் சிருஷ்டிக்க முடியுமா? உருவம் கொடுக்க முயன்றேன்.

'கல்கி' காரியாலயத்தாரின் சிறுகதைத் தொண்டு என்னுடைய ஆவலுக்கு உரமிட்டது. ஓரளவு அதில் வெற்றியும் பெற்றேன் என்பது எனக்கு வந்த கடிதங்கள் (இலங்கையிலிருந்துகூட மூன்று கடிதங்கள்) மூலமாகத் தெரிந்து மகிழ்ச்சி அடைந்தேன். மாதப் போட்டி பரிசுக் கதையாக 'பிரார்த்தனை' வெளியாகியது.

ஒரு தாய் சிறுவயதிலேயே கணவனை இழந்து மகனைப் படிக்க வைத்து முன்னுக்கு கொண்டு வருகிறாள். அவனுக்கு ஜுரம் காண்கிறது. திருப்பதிப் பெருமாளுக்கு

வேண்டிக் கொள்கிறாள். மகன் வேலைப் பயிற்சி நிமித்தம் மலேயா செல்கிறான். ஒரே வருடப் பயிற்சி. திரும்பி வருவதற்குள் யுத்தம் வந்து விடுகிறது. அவன் திரும்ப வில்லை. திரும்பி வராததுடன் ஒரு மலாய்க்காரியை சந்தர்ப்ப வசத்தால் மணக்கிறான். தாய்க்குத் தெரிவிக்காக்காமல் திரும்பி வந்து விடுவதாக எழுதுகிறான். கடைசியில் இறந்து விடுகிறான். தாய் துடிக்கிறாள். மகனை மன்னிக்கிறாள். பிரார்த்தனையை முடிக்க முடியவில்லையே என ஏங்குகிறாள். அதிர்ச்சி தாங்காது இறந்தும் விடுகிறாள். இதுதான் கதைச் சுருக்கம்.

கணவனை இழந்து விட்டு மகனை ஆளாக்கி அவன் வேலைக்கு போக முயலும் போது டைபாயிட் ஜுரம் வந்து விடுகிறது மகனுக்கு.

அவள் திருப்பதி வெங்கடாசலபதியிடம் 'என் கண் முன்னேயே என் மகனைப் பறி கொடுக்கவா இவ்வளவு சிரமப்பட்டு வளர்த்தேன்' என்று சொல்லும் போது பெருகி வரும் புத்திர சோக வெள்ளத்துக்கு அணைபோட முடியவே இல்லை. கணவனை இழந்தபோது கலங்கியவள்தான், மகனை வளர்க்கும் கடமையில் துக்கத்தை சிறிது மறந்தாள். ஆனால் மகன் நிலை ஆபத்தானபோது பெற்ற வயிறு பற்றி எரிகிறது—கண்ணகி எரித்த மதுரையைப் போல.

தன் மகன் மலேயா போவதாக சொன்ன போது அவனைப் பிரிய மனவேதனை உண்டானாலும்கூட மகனின் எதிர்காலம் மலேயா போய் வருவதால் வளம் பெறும் என்று தெரிந்த பிறகு தன் மன வேதனையை அடக்கிக் கொண்டு மகனின் எதிர்காலம் ஒன்றையே கொண்டு அவனை மலேயா போக அனுமதிக்கிறாள்.

மகன் வரவில்லை. பணம் அனுப்பியதில்தான் செட்டாக குடும்பம் நடத்தி வரப்போகும் மருமகளுக்கு நகை வாங்கி சேர்க்கிறாள். மகனின் மனைவியை அவள் விரோதியாக எண்ணவில்லை. மகளாகவே எண்ணுகிறாள்.

சதா அவள் நினைவெல்லாம் மகனைப் பற்றித்தான். மகன் வரவை எதிர்பார்த்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறாள். உடல் பலமில்லை; மனபலம் அதிகமாக இருந்தது.

கடைசியில் இரகசியம் வெளிப் படுகிறது.

'பாங்கரா, வெங்கடாஜலபதிக்கு அபராதம் செய்து விட்டேன். ஒரு வருடமாகப் பிரார்த்தனை செய்தேன். அது நிறைவேற வில்லை. தெய்வக் குற்றம் ஏற்பட்டு விட்டதே' என கலங்குகிறாள்.

ஆஸ்தீகத்தின் உருவம் அவள். தெய்வ நம்பிக்கையில் ஊறித் திளைத்தவள். தான் செய்து கொண்ட பிரார்த்தனை நிறைவேறாதது அவள் மனத்தை எப்படிப் பாதிக்கிறது தெரியுமா?

அப்போதுகூட மகனை வெறுக்கிறாளா? அதுதான் இல்லை. மகன் அவள் உடலில் ஓடிய ரத்தத்தின் ஒரு உருவம். அதை அவள் எப்படி வெறுக்க முடியும்? மகனின் பேரில்ஞாபகப்படவில்லை. பிரார்த்தனை நிறைவேற முடியவில்லையே என்ற ஏக்கமே அதிகம்.

விடியற்காலை. "பாங்கரா, உன் உன் பேரில் ஞாபமில்லை. உன்னை நான் மன்னித்து விடலாம்; வெங்கடாஜலபதி என்னை மன்னிக்க மாட்டாரே. இதோ உன்னிடம் வருகிறேன்," என்கிறாள்.

மகன்போன இடத்துக்கு போகிறாள். இறக்கும் போது மகனைக் காண்கிறாள். இகம், பரம் எங்கிலுமே மகனைப் பிரிய மனமில்லை.

தாயின் சேவைக்கு ஈடு இணை கிடையாது.

பூமிமாதா எவ்வளவோ அக்கிரமக்காரர்களைக்கூட தாங்கி சுமக்க வில்லையா?

அவள் சாந்தத்தை இழந்திருந்தால், விஞ்ஞானிகளின் அணு குண்டுகளுக்கு வேலையே இல்லாமல் உலகத்தையே என்றோ அழித்திருப்பாளே....? ★

இரவல் இகழ்ச்சி!

எழுதியவர் : **கோவி. மணிசேகரன்**

சிவராஜன் பேயறைந்தவன் போல், சென்னை குளோப் தியேட்டரிலிருந்து ஓடி வந்து கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் வியர்வைத் துளிகள் விகாரமாய் அரும்பி யிருந்தன. மழுக்க மழுக்க சீவியிருந்த கிராப்புத் தலையும் கலைந்து அவனுடைய நெற்றியை அலங்கோலப் படுத்தியிருந்தது. புதுச்சலவையிலிருந்து எடுத்துப் போட்டு வந்த சட்டையும், வேட்டியும்கூட மடிப்பு கலைந்திருந்தன. நடுக்கத்தோடு கூடிய அவனுடைய பதட்டத்தைப்பார்வையிடும்போது, குடும்பப் போரில் மனைவியால் மட்டம் தட்டப்பட்டு வெறுப் புணர்ச்சியுடன் விரைந்து வரும் 'பிரிவினை வீரர்'களை ஞாபகப் படுத்தியது.

குளோப் தியேட்டர் வாசற் படியைக் கடந்து வெளியே வரும் போது அவனுடைய வாய் பல வாறாக முணு முணுத்தது :

''சே, சே! இந்த உலகமே இரவலில்தான் பிழைக்கிறது போலிருக்கிறது! ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுத்து சினிமா டிக்கட்டைப் பிளாக் மார்க்கெட்டில் வாங்கத் துணியும் இந்த மனிதர்கள், உருப்படியாக நாலணா கொடுத்து பத்திரிகை வாங்க அஞ்சுகிறார்களே !....''

ஏழெட்டுப் பத்திரிகைகளை அலங்கோலமாக சுமந்துகொண்டு பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்தான் சிவராஜன். அவனுடைய வாய்மட்டும் முணு முணுப்பிலிருந்து விடுபட்டதாகக் காணோம். அச்சமயம் அவனுக்கு எதிரே 'சரேல்' என்ற சத்தத்துடன் ஒரு கார் வந்து நின்றது.

''ஹலோ, சிவராஜன்!''

சிவராஜன் திரும்பிப் பார்த்தான். அவனுடைய நண்பன் ராஜேந்திரன் காருள் அமர்ந்து சிரித்துக் கொண்டிருந்தான்.

''என்னடா, சிவராஜ்! முகத்தில் அசடு வழிய எங்கே சென்று கொண்டிருக்கிறாய் ?''

சிவராஜனுக்கு முதலில் கோபம் வந்தது; பிறகு அதை ஒருவாறு அடக்கிக் கொண்டான்.

''என்னடா சிவராஜ்! நான் கேட்பதற்குப் பதில் சொல்லாமல் இஞ்சி தின்ற....''—ராஜேந்திரன் பேச்சை முடிக்கவில்லை.

சிவராஜன் வெடுக்கென்றுகுறுக்கிட்டு, ''முதலில் இந்த ஓசி கிராக்கிப் பசங்க ஒழியணுமடா! அப்பத்தான் இந்த நாடு உருப்படும்!'' என்று எரிந்து கூறினான்.

ஏதடா வம்பென்றெண்ணிய ராஜேந்திரன், அவனைச் சமாதானப் படுத்த காரில் ஏற்றிக் கொண்டான். தன்னுடைய நண்பன், இப்படித் திடீர் என்று சம்பந்தா சம்பந்தமில்லாக் காரியங்களுக்கு வெட்டிக் கோபத்தை வரவழைத்துக் கொள்வான் என்பதை ராஜேந்திரன் அறிந்திருந்தான்.

கார் புறப்பட்டது.

''நேரே வீட்டுக்குத்தானே போகிறாய் ?''—ராஜேந்திரன் கேட்டான்.

''ஆமாம்.''

''போகட்டும். நடந்ததென்ன! ஏன் இப்படி எரிந்து காணப்படுகிறாய்? ஓசி கிராக்கியைப் பற்றி

'ஓசி மனிதர்கள்' எங்கணும் நீக்கமற நிறைந்திருக்கிறார்களல்லவா? அவர்கட்கு இக்கதை சமர்ப்பணம்.

உளற ஆரம்பித்தாயே, அப்படி என்ன நடந்தது?''

''சொல்லாவிட்டால் என்மனம் எப்படி ஆறும்? சொல்லித் தொலைகிறேன்!....''

2

அன்று சென்னைக் குளோப் தியேட்டரில் 'கிங் அண்ட் ஐ' என்னும் ஆங்கிலப் படம் ஓடிக் கொண்டிருந்தது.

யூல் பிரியனர் என்ற மொட்டை நடிகர் அப்படத்தில் பரிசு வாங்கியதால், 'க்யூ' வரிசையில் நின்று கொண்டிருந்தான் நமது சிவராஜன். அப்போது அவனுடைய கையில் ஏழெட்டுப் புதிய பத்திரிகைகள் இடம் பெற்றிருந்தன.

எப்போதுமே சிவராஜன் சினிமா கொட்டகைக்குச் சென்ருனல் கையில் இரண்டு மூன்று பத்திரிகைகளாவது எடுத்துச் செல்வான். ஏனென்ருல் 'க்யூ' வில் நிற்கும் அந்தத் தலைவலி நேரத்தைப் பத்திரிகைகளைப் புரட்டுவதன் மூலம் போக்கிக் கொள்வான் சிவராஜன்.

அன்று சனிக்கிழமையாதலால், வரும் வழியில் கடையில் தொங்கிக் கொண்டிருந்த ஏனைய புதிய பத்திரிகைகளையும் முன்கூட்டியே வாங்கி அடுக்கிக் கொண்டான். அப்படி அடுக்கிக் கொண்டவைகள்தாம் அவனுக்கு ஆபத்தை உண்டு பண்ணி, ஆத்திரத்தைக் கிண்டி விட்டன.

''சார்! கொஞ்சம் பத்திரிகை தருகிறீர்களா?''

முதலாவதாகப் பக்கத்தில் நின்றிருந்தவர் இப்படியாகக் கேட்டார். கையிலிருப்பதும் சுமைதானே என்று எண்ணி ஒரு பத்திரிகையை எடுத்துக் கொடுத்தான் சிவராஜன்.

''என்னங்க, அதென்ன பத்திரிகை? கொஞ்சம்தருநீர்களா?'' என்ருர் மற்ருெருவர்.

சிவராஜன் கொடுத்தான்.

இப்படியாகப் பக்கத்திலும், எதிரிலும் இருந்தவர்கள் மற்றப் பத்திரிகைகளைக் குத்தகை எடுத்துக் கொண்டனர். சிவராஜனும் பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தனக்கு மட்



டும் ஒரே பத்திரிகையை வைத்துக்கொண்டு மற்றவைகளை 'ஓசி தானம்' செய்து விட்டான்.

இரவல் பத்திரிகையைப் பெற்றவர்கள்சிலர்உருக்கமுடன் படித்தனர்; சிலர் படித்துப் பக்கத்திலிருந்த நண்பர்களுடன் விமர்சித்துச் சிரித்தனர். மற்றும் சில புத்திசாலிகள் சூரிய வெப்பத்தைத் தடுத்துக் கொள்ள குடையாகவும் பயன்படுத்திக் கொண்டனர்.

நேரம் சென்று கொண்டே இருந்தது.

டிரிங்ங்.......

டிக்கட் கொடுக்கப்படுவதாக சுவரில் மாட்டியிருந்த மணி அலறியது. 'க்யூ'வும் நகரத் தொடங்கியது.

சிவராஜன், தான் வைத்திருந்த பத்திரிகையில் வெளியாகியிருந்த

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கறுத்து, எப்பொழுதுமே கறுமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1-94. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Jullundur City.

ஒரு கதை மிக விறுவிறுப்பாக இருந்ததால், மூடிவைக்க மனமில்லாமல் வேகமாகப் படித்து முடித்தான். அவனுடைய கால்கள் பதினைந்தடி நகர்ந்திருந்தன.

ஆகா! பக்கத்திலிருந்தவர்களிடமும், எதிரிலிருந்தவர்களிடமும் தரப்பட்டிருந்த பத்திரிகைகள் ஒரு கோடிக்கும், மறுகோடிக்குமாகப் பரிமாறப்பட்டிருந்தன. அவைகளைத் திருப்பிப் பெற அவ்வளவு சுலபமாக அவனுக்குப் புலப்பட வில்லை.

சிவராஜன் ஆத்திரத்தில் முதலில் கேட்டு வாங்கியவர்களை ஏதேதோ பேசி விட்டான். அவர்களும் "நாங்கள் என்ன செய்வோம் சார்! பக்கத்தில் கேட்டார்கள். கொடுத்தோம். அது அப்படியே கைமாறி விட்டது." என்று லாகவமாகப் பதிலளித்தனர்.

இவர்களிடம் பேசிக் கொண்டிருப்பதில் புண்ணியமில்லை; பத்திரிகைகளை முதலில் சேகரிக்க வேண்டும் என்றெண்ணிய சிவராஜன், அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிதறியிருந்த பத்திரிகைகளைத் தேடிச் சென்றான். ஒரு சிலர் கொடுக்க மனமில்லாமல், முக்கால் கதையில் உச்சநிலையோட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தனர். பாவம்! சிவராஜனுடைய உச்ச நிலையோட்டத்தை யாரே ரசிப்பர்?

இரண்டொரு பத்திரிகைகள் கேட்ட மாத்திரத்திலேயே கொடுக்கப்பட்டு விட்டன. சிலர், "கொஞ்சம் பொறுங்கள்" என்று கடுமையாகக் கூறிக் கதையைப் படித்து முடித்துக் கொடுக்க மனமில்லாமல் கொடுத்தனர். மற்றும் சிலரை அதட்டிக் கேட்டதற்கு "ஓய்! உம்மிடம் இருந்து பத்திரிகையை வாங்கலைங்கனே! வெறும்மே உடம்பை அலட்டிக்கா தீரும்!" என்று பக்கடா தமிழில் தெற்கத்திப் பாணியில் பதிலளித்தார்.

கார சாரமான இந்த மாதிரிப் பதிலைச் சமாளிக்கப் பட்டபாடு, அடடா! பத்திரிகை எத்தனை கை மாறினவோ, அத்தனை பேர்களும் அல்லவா சாட்சி சொல்ல நேர்ந்து விட்டது!

இதற்குள் 'க்யூ' வெகு தூரம் நகர்ந்து விட்டது. சிவராஜனும் எல்லாப் பத்திரிகைகளையும் சேகரித்துக் கொண்டு, நின்ற இடத்தை நாடி ஓடினான். அப்போதுதான் அவனுக்கு முன்னால் நின்றிருந்த பேர்வழி டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்றார்.

சிவராஜனுக்குப் பின்னால் நின்றிருந்த பேர்வழி டிக்கட்டைப் பெற்றுக் கொண்டிருந்தார். அச்சமயம் விரைந்து வந்த சிவராஜன் அவருக்கு முன்னால் நின்று டிக்கட் வாங்க முயன்றான். இதற்குள் பின்புறத்திலிருந்து 'ஆய்' – 'ஊய்' என்ற நாகரிகக் கூச்சலெழுந்தது. சிவராஜனுக்குப் பின்னால் நின்றிருந்தவர் டிக்கட்டை வாங்கிக் கொண்டு பேசாமல் போய் விட்டார். அதற்குப் பின் ஒருவர், இருவர், மூவரென டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்று கொண்டிருந்தனர். ஒருவர் கூட

சிவராஜனுக்கு இரக்கம் காட்டியதாகக் காணோம்.

அப்போது ஒருவர் டிக்கட் வாங்கிக் கொண்டிருந்தார்.

"சார், நடந்த சமாச்சாரம் உங்களுக்குத் தெரியும். நான் முதலிலிருந்தே 'க்யூ' வரிசையில் நின்று கொண்டிருந்தவன். எனக்கும் ஒரு டிக்கட்டைச் சேர்த்து வாங்கிக் கொள்ளுங்களேன்!"

சிவராஜன் அழமாட்டாக் குறையில் இப்படிக் கூறும்போது, தெற்கத்திப் பேர்வழி "ஓய்! எதுக்குங்கனே வெறுமனே உயிரை விடதீர்?" என்று கூறிய வண்ணம் டிக்கட் அறையை நாடினர். பாவம்! அவருக்கே டிக்கட் கிடைக்காமல் 'நிரம்பி விட்டது' என்ற பலகை முன்னல் போடப்பட்டது!

சிவராஜனின் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடித்தன. அசடு வழிய கொட்டகையைவிட்டு வெளியேறினன்.

3

கார் சிவராஜன் வீட்டில் நின்றது.

"சுவாரஸ்யமான நிகழ்ச்சியடா சிவராஜ்!" என்ருன் ராஜேந்திரன்.

சிவராஜன் முகம் மீண்டும் சிவந்தது.

அவனுடைய கண்கள் ராஜேந்திரனுடைய பக்கத்திலிருந்த புதுப் பத்திரிகையைக் கவனித்தன. கோபம் ஒரு கணம் மறைந்தது.

சிவராஜன் அப்பத்திரிகையைக் கையிலெடுத்தான். புதுப் பத்திரிகை. இன்னும் ராஜேந்திரன் பிரித்துக்கூடப் பார்க்கவில்லை என்பது தெரிய வந்தது.

"ராஜேந்திரா, இதை எடுத்துக் கொள்கிறேன். நாளை படித்து முடிந்ததும் உன்னிடம் கொடுத்தனுப்புகிறேன்," என்று கூறிவிட்டு வேகமாக வீட்டினுள் நுழைந்தான்.

ராஜேந்திரன் புன்னகை பூத்த வண்ணம் காரைச் செலுத்தினன். அந்தப் புன்னகையில்தான் என்ன அர்த்தம் புதைந்து கிடந்ததோ! ★

HEWLETT'S
MIXTURE



ஹியூலெட்ஸ்
மிக்ஸர்

80 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வ்ருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.,
MADRAS-3.

ஜூன் மாத அட்டைப்படப் போட்டிக்கு வந்த கதைகளில் தேர்வு பெற்ற கதை இது. ★★

"ரீங்....ரீங்....!"

"..................."

"ரீங்...."

"யார் அது?" என்றது பூவிற்குள் இருந்த வண்டு.

"நான்தான், தேனரசி" என்றது, அப்பொழுதுதான் இதழைப் பிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்த மற்றொன்று.

"ஓ, நீயா? எங்கே வந்தாய்?" என்றது முதல் வண்டு.

"ஏன், நான் வந்ததால் உனக்கு என்ன இடைஞ்சல்?" என்ற தேனரசி மலரின் இதழ் மீது வந்தமர்ந்தது. பலவித வண்ணங்களின் காரணமாக அதன் உடல் பளபளத்தது. வெள்ளைத் தாமரைப் பூவின் மெல்லிதழ்மேல் அவ்வண்டு அமர்ந்திருந்த பேரழகு, வெண்பட்டில் சரிகைப் பூ வேலை செய்ததுபோல் தோற்றமளித்தது. அதன் பார்வையிலே நெஞ்சம் பறிகொடுத்த அந்தத் தேனரசன்—ஆம், அந்த வண்டின் பெயர் தேனரசன்தான்! —"நீ இப்பொழுது எவ்வளவு அழகாய் இருக்கிறாய், தெரியுமா?" என்றவாறே அதனருகில் நெருங்கியது.

'களுக்' கென்ற சிரிப்பொலி கேட்டது!

இரு வண்டுகளும் 'சட்' டென்று பிரிந்து மேலே பறந்தன. தடாகத்தின் கரையில் ஒரு பாறையின் மீது அமர்ந்திருந்தாள் ஓர் அழகி. தங்களையே கவனிப்பதை அறிந்த அந்தத் தேனரசி மலரினுள் புகுந்து கொண்டது. அதைத் தேடி, பூவைச் சுற்றிச் சுற்றி வந்தது, தேனரசன்.

"தேனரசி...."

"உம்...!"

"எங்கே இருக்கிறாய்?..."

"ஏன், நான் இந்த மலருக்குள்தான் இருக்கிறேன்," என்றவாறு மெள்ள மேலே வந்து எட்டிப் பார்த்தது, பெண் வண்டு.

"ஆமாம், அந்தப் பெண் என்ன, நம்மையே உற்றுப் பார்க்கிறாள்? எனக்குப் பயமாக இருக்கிறது!" என்றது தேனரசி.

திடுக்கிட்டுத் திரும்பிய தேனரசன் "பார்க்கட்டும்" என்று பூவைச் சுற்றிச் சுற்றி வந்தது.

கரையில் அமர்ந்திருந்த இளநங்கை புன்முறுவல் பூத்தாள். ஒரு கால் அவளுக்கு வண்டுகளின் பாஷை தெரிந்திருக்குமோ, என்

னவோ! அவைகளைப் பார்த்துத் தலையசைத்தாள். ஆம், அவள் ஒரு கதாசிரியை அல்லவா?

பெண் வண்டு மலருக்குள் மறைந்துகொண்டு மகரந்தத்தைச் சுவைத்தது. ஆண் வண்டு ரீங்கா ரத்துடன் மேலே எழும்பி கதாசி ரியையின் அருகில் பறந்து வந் தது.

''இளம் காதலர்களோ?'' என்று கூறிய அந்தப் பெண் 'கல, கல' வென நகைத்தாள். அவள் சிரிப்பிற்குச் சுருதி கூட்டுவது போல் ரீங்காரமிசைத்தது அவ் வண்டு.

''வணக்கம், அம்மணி'' என்றன வண்டுகள், தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொள்ளுபவர் களைப் போல.

புன்னகை பூத்த மங்கை, ''என் னைத் தெரியுமா?'' என்றாள்.

''தாங்கள் ஒரு கதாசிரியை,'' என்றது 'பளிச்' சென்று – அந்த வண்டு.

''ஆமாம், உனக்கெப்படித் தெரியும்?''

''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? கதாசிரியர்களைத் தவிர, எங்களைப் பார்த்து இவ்வளவு நேரம் ரசிப்ப வர்கள் வேறுயார் இருப்பார்கள்? இந்த இடமும், சூழ்நிலையும் கற் பனையாளர்களுக்குத்தான் ஏக போக உரிமை.''

"அடேயப்பா! எவ்வளவு அழகாகப் பேசுகிருய்?"

"ஏன், மனிதர்களுக்குத்தான் பேசத் தெரியுமா?"

அம் மங்கையின் வதனத்தில் வியப்பின் சாயல் தோன்றியது. இதற்குள் மலரினுள் இருந்த வண்டு மேலே வந்து மெள்ள எட்டிப் பார்த்தது.

"உன் காதலி ஏன் இப்படிப் பயப்படுகிருள்?" என்ருள் கதாசிரியை.

"அது ஒரு கதை அம்மணி," என்று கூறிப் பெருமூச்சு விட்டது அவ்வண்டு. "கேட்டீர்களானுல் கூறுகிறேன்"

கதாசிரியை யோசித்தாள். கதிரவன் மறைய இன்னும் வேண்டிய பொழுது இருக்கின்றது...!தீபாவளி மலருக்கும் கதை எழுதி அனுப்ப வேண்டும். எவ்வளவு முயன்றும் கற்பனையேதும் தோன்றக்காணும். வீட்டிலேயே இருந்தால் இப்படித்தான் இருக்கும். எங்காகிலும், சற்று நல்ல சூழ்நிலையில் சென்றமர்ந்தால் மனம் தெளிவு பெறும் என்று நினைத்துத் தான் குளக்கரைக்கு வந்தாள் உமா மகேஸ்வரி. தாமரைக்குளம் இயற்கையாகவே அழகு மிகுந்து காணப்பட்டது. பூத்திருந்த வெண் தாமரை மலர்கள் காற்றினிலே அசையும்போது தேவமங்கை நாட்டியமாடுவதுபோல் தோன்றியது.

ஒருமுறை மலரைச் சுற்றி வட்டமிட்ட தேனரசன், கரையில் வளர்ந்திருந்த ஒரு செடியில் மலர்ந்திருந்த ஒரு பூவின் இதழ் மீது வந்தமர்ந்தது. தேனரசி வண்டிற்குள்ளிருந்து வெளியே வரவே இல்லை.

"தேனரசி ஏன் வரவில்லை வெளியே?" என்று கேட்டாள் கதாசிரியை.

"அதுதான் நான் கூறப்போகும் விஷயம்," என்றது வண்டு. அம்மலரை ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டுத் தன் கதையைக் கூறத் தொடங்கியது.

"முதன் முதலில் நான் தேனரசியைச் சந்தித்தது இந்தத் தாமரைக் குளத்தில்தான். அது நடந்து மூன்று ஆண்டுகள் ஆகப் போகின்றன. ஆனுல் ஒவ்வொரு முறையும், இந்த மனிதர்களின் கண் பார்வையில் நாங்கள் பட்ட துன்பம் அளவு கடந்தது. ஒவ்வொரு முறையும் அதனுல் நாங்கள் இருவரும் பிரிய நேர்ந்தது.

"முதலில் நான் தேனரசியைக் கண்டேன். எங்கள் இனத்தவர்க்கும் அழகுணர்ச்சி உண்டு. அவளது பேரழகு என் சிந்தையைக் கவர்ந்தது. நான் எண்ணியதைப் போல் அவளும் என்னை மனமார நேசித்தாள். காதற் பெருக்கில் உல்லாசமுடன் மலருக்கு மலர் தாவி இன்பகீதம் பாடினேம். அந்த நேரத்திற்குச் சரியாக எங்கிருந்தோ வந்து சேர்ந்தான் ஓவியன் ஒருவன். இப்பொழுது தாங்கள் அமர்ந்திருக்கும் இதே இடத்தில்தான் அவனும் வந்தமர்ந்தான். அவனது பார்வை எங்கள் மீது லயித்து விட்டது.

"தேனரசியின் எழிலுருவம் அவனையே மயக்கிவிட்டது. அவன் கைகள் வண்ணக் குழம்புகளை நோக்கி விரைந்தன. சற்று நேரத்தில் நாங்கள் அவனது கைத்திறனுல் ஓவியத்தில் பதிந்தோம்.

"இதற்குள் மாலை மங்கி, எங்கும் இருள் சூழ்ந்தது. ஓவியன் தீட்டும் சித்திரத்தையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த நான் திடீரெனத் திரும்பினேன். என்ன ஆச்சரியம்! தேனரசியைக் காணவில்லை. எனக்காக காத்திருந்த தேனரசி அதனுள்ளே சிறையானுள். ஆம், சிறையானுள். மாலைச் சூரியனின் மறைவுக்குப் பின், கூப்பிய வெண்தாமரை மலரில் அகப்பட்டுக் கொண்டாள். இனி மறுநாள் கதிரவனின் ஒளி கண்டபோதுதானே அத்தாமரை மலரும்?

"மறுநாட்காலை, ஆவல் மிகுந்து, நான் தேனரசியைக் காண வந்த போது, தாமரை இலைகளையும்,

மலர்களையும் யாரோ பறித்துச் சென்றுவிட்டிருந்தார்கள்! ஏமாற்றத்துடனும், வேதனையுடனும் திரும்பினேன். பலநாள்வரை நான் தேனரசியைப் பார்க்கவில்லை.

"அடுத்த ஆண்டில் நான் மறுபடியும் இந்தக் குளக்கரைக்கு வந்தேன். வசந்தம் வந்தது. வெண்தாமரை மலர்கள் பூத்தன. என் தேனரசியின் வருகைக்காகக் காத்திருந்தேன். வெகுநாள் காத்திருந்த பின் என் எண்ணம் நிறைவு பெற்றது. எவ்வளவோ இன்னல்களுக்குப் பிறகு முன்னைவிடப் பேரழகியாக வந்தாள் என் தேனரசி. அவள் அழகு என்னைக் குளிர்வித்தது. ஆனால், இந்தப் பாழும் மனிதவர்க்கம் எங்களை மகிழ்ச்சியாக வாழ விட்டால்தானே!

"அன்று மாலை. தென்றல் வீசியது. பறவையினங்கள் பண்ணிசைத்தவாறே வானவீதியில் பவனி வந்தன. வானத்தில் வெண்பஞ்சையொத்த மேகக் கூட்டம் மிதந்தது. காற்றில் தடாகநீர் அலை அலையாகப் பரவி, தாமரை மலர்கள் தலையசைத்து ஆடின.

"அன்று கவிஞன் ஒருவன் வந்தான். பழையபடி இதே மேடைதான். என் அன்புக்குரியவள் இன்பகீதம் பாடிக்கொண்டிருந்தாள். நான் அவளை வட்டமிட்டவாறு இசையின்பத்தை நுகர்ந்து கொண்டிருந்தேன். இதற்குள் தேனினும் இனிய பாடல் குளக்கரையெங்கும் பரவியது. என்ன இனிமை! என்ன அழகு! அந்தக் கவிஞன்தான் அப்படிப் பாடிக்கொண்டிருந்தான்.

"பாட்டு காற்றிலே கலந்து இனிமையாக ஒலித்தது. என்ன துணிவு! எங்கள் எதிரிலேயே, எங்களை வைத்துப்பாட்டிசைத்துப் பாடிவிட்டான் கவிஞன்!

"பாட்டிலே மயங்கினேன். அது என் அறிவீனம். அவன் இசைத்து நின்ற பின்தான் நான் உணர்வு பெற்றேன். பூரண நிலவு தங்கத் தகடென வானிலே மிதந்து வந்தது. தேனரசி....?

"நான் ஏமாந்துவிட்டேன். என் காதலியை அணைத்தவாறே தாமரைமலர் கூம்பிவிட்டது. அன்றிலிருந்து ஓராண்டுகாலம் நான் அவளுக்காகத் தவமிருந்தேன். இன்றுதான் மறுபடியும் தேனரசியைக் கண்டேன்.

"கதையிலே நாங்கள், கற்பனையிலே நாங்கள், கவிதையிலே நாங்கள், கவிஞனின் கற்பனையில் காதலியின் கண்களுக்கு நாங்கள்தான் உவமை — மனிதர்கள் இப்படியாக எவ்வளவோ வகைகளில் எங்களால் பயன்பெறுகிறார்கள். ஆனால் நாங்கள்....?"

பேசிக்கொண்டே வந்த தேனரசி, திடுக்கிட்டுத் திரும்பியது.

அன்று பௌர்ணமி. பகலை மிஞ்சும் அளவில் பால்நிலவு தோற்றமளித்தது. பேச்சின் பயனால், தேனரசன் பொழுதை உணரவில்லை. மலர்கள் அனைத்தும் கூம்பித் தோன்றின.

உமாவுக்கு அருமையான ஒரு கதை கிடைத்தது!

ஆனால் பாவம், தேனரசி....! ★

உமா

சந்தா விவரம்

இந்தியா, சிலோன்

ஓர் ஆண்டிற்கு	ரூ. 3–00
ஆறு மாதத்திற்கு	ரூ. 1–50

வெளிநாடுகளுக்கு

ஓர் ஆண்டிற்கு	ரூ. 4–00
ஆறு மாதத்திற்கு	ரூ. 2–00

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் இதழ்கள் அனுப்பப்படமாட்டா.

தனிப்பிரதி 25 நயாபைசா

'உமா' :: சென்னை-1.

கதை :

சி. பி. மைதிலி

திருக் கார்த்திகையில்

அன்று திருக் கார்த்திகை. உமாவும் சுந்தரும் கோலாகலமாகக் காட்சியளித்தார்கள். அப்போது உமாவின் உள்ளம் ஓடிச் சென்ற தீபாவளியை எண்ணியது.

தீபாவளி வருவதற்கு இன்னும் பத்து நாட்கள் இருந்தன. ஆனால் உமாவின் உள்ளம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்குவதற்குப் பதில் வேதனையால் அமிழ்ந்திருந்தது. அவளுடைய தங்கைகள் லதா, ருக்மணி இருவரும் தம் கணவர்களோடு பிறந்தகத்திற்கு வந்திருந்திருந்தனர். உமா இரு தங்கைகளையும் பார்ப்பதற்குக் கூட வெட்கப்பட்டுத் தனியாக ஒரு அறையில் இருந்தாள். அந்த அறையின் நான்கு சுவர்களுக்கு அப்பாற்பட்ட உலகத்தை அவள் பார்க்க விரும்பவில்லை. துன்பத்தைத் தன் நிழலாகக் கொண்ட உமாவிடம் இன்பம் நெருங்குவதற்கு பயப்பட்டது.

அவளுக்குத் தகுந்த காலத்தில் தான் கல்யாணம் நடந்தது. கண் நிறைந்த கணவன், கல்வி நிறைந்த உள்ளம். அவளுக்கேற்றபடி தகுந்த வரனாகத் தான் கிடைத்தது. கிடைத்து என்ன பயன்? உலகத்தில் பிறந்த உன்னதமான பலனை அவள் அடைய முடியவில்லையே! உமா மணம் செய்து கொண்டும் கன்னிகை போல் பெற்றோர் வீட்டில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

உமாவின் கணவன் சுந்தர் அவள் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தான். ஆனால் அவளோடு கொஞ்சிக் குலாவிப் பேசுவதற்கு அவனுடைய வேலை முட்டுக்கட்டை போட்டிருந்தது.

அவர்களுக்குக் கல்யாணமாகி இந்தத் தீபாவளியோடு ஆறு வருடங்கள் பூர்த்தியாகப் போகின்றன. தலை தீபாவளிக்குக் கூட அவன் மாமியார் வீட்டுக்கு வந்து தீபாவளி கொண்டாடினதும் இல்லை. உமாவோடு ஒரு மாதமாவது சேர்ந்து இருந்ததும் இல்லை. தாமரை இலையிலுள்ள தண்ணீர் போல் அவள் வாழ்க்கை அமைந்திருந்தது.

உமாவின் உறவினர்களெல்லாம் அவள் கணவனுடைய நல்ல வேலையைக் கண்டு பொறாமைப் பட்டார்கள். "கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு செல்வத்தைக் கொட்டுமாம். அதுபோல உமாவிற்குக் குருட்டு அதிர்ஷ்டம் அடித்துள்ளது. உயிரைப் பயணம் வைத்துச் செய்யும் வேலை. என்றைக்கோ ஒரு நாள் அவன் செய்யும் வேலை அவனுக்கு முடிவைத் தேடித் தரப் போகிறது" என்றெல்லாம் உமாவின் உறவினர்கள் அளக்கும் வம்பு அவள் காதில் விழாமல் இல்லை.

மாதம் பிறந்தால் இரண்டாயிரம் ரூபாவிற்குக் குறையாமல் கைநிறையச் சம்பளம் வாங்குகிறான் சுந்தர்.

அவன் எந்த நாட்டில் இருந்தாலும் மாதம் தவறாமல் பணமும், விதவிதமான பொருள்களும் அனுப்புகிறான். உமா அவனுடைய பணத்தை எதிர்பார்க்கவில்லை. கரும்பைப்போன்ற இனிய சொற்கள் பேசி அவளை இன்பப்போதையில் ஆழ்த்துவதற்குக் கணவன் பக்கத்தில் இல்லையே என்ற கவலை மிகவும் துன்புறுத்தியது.



பையே கடமையாகக் கொண்ட அவன் மனைவியுடன் எப்படி இன்பமாகக் காலம் கழிக்க முடியும்?

அவன் அனுப்பிய அதிசயமான பொருள்களை உமாவின் ஊரார்கள் ஒரு கண்காட்சியைப் பார்க்க வருவது போல் திரள் திரளாக வந்து பார்ப்பார்கள். "உமா, நீ ரொம்ப அதிர்ஷ்டகாரி. பூர்வ ஜன்மத்தில் கடவுளுக்கு நல்ல பூக்களினால் அர்ச்சனை செய்திருக்கிறாய். அதனால் இந்த ஜன்மத்தில் நல்ல கணவனை அடைந்திருக்கிறாய்," என்று சொல்லிவிட்டுப் போவார்கள்.

"குழந்தையின் கையில் கனிந்த பழத்தைக் கொடுத்து

தீபாவளித் திருநாள்!

சுந்தருக்குக் கப்பலோட்டும் வேலை; இந்தியாவிலிருந்து மற்ற அயல் நாடுகளுக்குக் கப்பலோட்டுவதற்கே நேரம் சரியாக இருந்தது. அலைபுரண்டோடும் கடலில் பிரயாணம் செய்யும் அவன், மனைவியின் உள்ளத்தில் துன்ப அலையை அடக்குவதற்கு முடியவில்லை. உழைப்

விட்டு, உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது என்று பிடுங்கிக் கொள்வதைப் போலல்லவா அவள் நிலைமை இருக்கிறது!

உமா எத்தனையோ முறைகள் அவனை அந்த வேலையை விட்டு விடும்படி கடிதங்கள் எழுதுவாள். அத்தி பூத்தாற் போல் என்றைக்

காவது வீட்டிற்கு வந்து விட்டால், சிநேகிதர்களோடு அரட்டை அடிப்பதற்கே நேரம் சரியாக இருக்கும். இரவு நேரத்திலாவது கணவனேடு பேச வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்வாள். ஆனல் சுந்தரோ சிநேகிதர்களோடு அரட்டை அடித்த களைப்பில் நன்ருகக் குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்து விடுவான். அவன் தூங்கும் போது யானை அவன் மீது ஏறி மிதித்தால் கூட எழுந்திருக்க மாட்டான். தூக்கத்தில் அவ்வளவு கவனம் செலுத்துவான்!

வீட்டில் இருக்கும் போது தூக்கத்திலும், அரட்டையிலும் இருந்த அக்கறையை மனைவியின் மீது செலுத்தி யிருந்தால் வாழ்க்கையின் உன்னதமான பரிசுகளைப் பெற்றிருக்கலாம். இயந்திரத்தோடு இயந்திரமாக வேலை செய்து அவன் மனமும் உணர்ச்சியில்லாத இயந்திரமாகி விட்டது; உமாவிற்கும் சுந்தர் வீட்டிற்கு வந்த போது நல்ல பொழுதாக வளரும்.

அவளும் பல முறைகள் மனதை விட்டுச் சொல்லியிருக்கிருள். சுந்தர், உமா செய்யும் உபதேசங்களைக் காது கொடுத்துக் கேட்டால் தானே அவளுடைய ஆசைகள் ஈடேறும்?

"உமா, எதற்காக அவசரப் படுகிருய்? ஒரு பழம் தானகவே கனிந்தால் தான் ருசி அதிகம். ஆனல் அதைச் செயற்கை முறையில் கனிய வைத்தால் பழத்தின் ருசி குன்றி விடும்," என்று அவளிடம் அடிக்கடி சொல்லுவான்.

நாகரிகமான அவன் பதிலைக் கேட்டு உமாவின் முகத்தில் வெட்கம் நிழலாடும். ஆனல் அவள் மனம் காற்றினல் பறக்கும் இலை போலத் துடிக்கும்.

உமாவிற்குக் கல்யாணம் ஆகி இரண்டு வருஷங்கள் கழித்துத் தான் லதாவுக்கும் ருக்மணிக்கும் கல்யாணம் நடந்தது. இருவருக்கும் தராசின் எடையைப் போல் இரண்டிரண்டு குழந்தைகள் சரியாக இருந்தன.

இருவருக்கும் முன் கல்யாணமான உமா ஒரு குழந்தைக்குக் கூட வழியில்லாமல் இருப்பது, அவளுக்கு வெட்கத்தையும், அவமானத்தையும் உண்டு பண்ணியதே தவிர, மனத்திற்கு அமைதியைத் தரவில்லை. அவள் பொருமை படுவது இயற்கை தானே? அலை பாயும் கடலுக்கு என்றைக்கு அமைதி கிட்டுமோ, அன்றைக்குத் தான் தனக்கும் அமைதி கிடைக்கும் என்று தன் வாழ்க்கைக்கு ஒரு முடிவை வகுத்தாள் உமா.

லதாவின் கணவன் சுந்தரம் அவளை விட்டு ஒரு நிமிஷம் கூடப் பிரியமாட்டான். அவள் பிறந்தகத்திற்கு வந்தால் ஆபீசிற்கு லீவு எழுதிப் போட்டு விட்டு அவளுடன் வந்து விடுவான். எந்நேரமும் எப்படித்தான் அவர்கள் சிரிப்பும் விளையாட்டுமாகக் காலம் கழிப்பார்களோ, அது கடவுளுக்குத் தான் வெளிச்சம்!

லதாவின் கணவன் சுந்தரத்தைப் போல பெண்டாட்டி தாஸனுக உமா தன் கணவன் இல்லாமல் இருப்பதைக் கண்டு தன் உள்ளத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். சுந்தரம் லதாவை விட்டு எப்பொழுதும் பிரியாமல் இருப்பதால் அவனுடைய உள்ளம் பெண்மை மெருகிட்டது. நான்கு ஆண்கள் கூடியிருக்கும் இடத்திற்கு வந்து பேசுவதற்கு வெட்கப் படுவான்.

உமாவின் அம்மா பார்வதியும்' மற்ற பெண்களும் தீபாவளிக்காக வந்த போழுது, உமாவைச் சரிவர கவனிக்கவில்லை.

ஒரு நாள் உமா சாப்பிடாமல் படுத்துக் கொண்டாள். பெண்கள் வந்திருந்த சந்தோஷத்தில் உமா சாப்பிடாமல் படுத்துக் கொண்டதை பார்வதி மறந்து விட்டாள். லதாவின் கணவன் சுந்தரம் பார்வதியை நாள் தவருமல் சினிமாவிற்கு அழைத்துச் செல்வான். "உமா, எத்தனை நாழி தன் வீட்டிலே அடைஞ்சு கிடப்பாய்? உன் மனதைத் தேற்றிக் கொள்ள

சினிமாவுக்கு வாயேன்,'' என்று கூப்பிடுவதற்குக் கூட லதாவின் நா இடம் தராது. பெற்ற தாயே தன்னை இவ்வாறு புறக்கணிக்கும் போது வேறு யார்தான் விரும்புவார்கள் என்று எண்ணி மனம் புழுங்கினாள் உமா.

"அக்கா, தீபாவளிக்கு அத்திம்பேர் வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறாரா? அவரை எனக்குப் பார்க்க வேண்டும் போல் இருக்குது. அவரைக் கல்யாணம் செய்து கொண்ட நீ பெரிய பாக்கியசாலிதான். ஹ்ம்! என் கணவர் என்னை ஒரு நிமிஷம் கூட விட்டுப் பிரியமாட்டேங்கிறார். அவர் இப்படி இருப்பதினால் எனக்கு வாழ்க்கை வெறுத்துப் போச்சு,'' என்று லதா மனம் சலித்துக் கொண்டு சொன்னாள். அவள் மனப்பூர்வமாகச் சொன்ன போதிலும், உமாவிற்குத் தன் கணவன் எப்பொழுதும் அவளைத் தனியாக விட்டு வைத்திருப்பதற்காகத் தான் இவ்வாறு புகழ்வது போல் இகழ்கிறாள் என்றே தோன்றியது.

"தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். நீ என் வாழ்க்கையைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறாய்!'' —மேலே உமா சொல்வதற்குள் துக்கம் தொண்டையை அடைத்தது.



அதற்குள் சுந்தரம் அவளைக் கூப்பிடவே லதா அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

தீபாவளி கழித்துத் தன் பிறந்தகத்தை விட்டு தனியாக ஒரு அறை எடுத்துக் கொண்டு நிம்மதியாக இருக்க வேண்டும் போல் தோன்றியது உமாவிற்கு.

"அக்கா, இந்தக் குழந்தையைக் கொஞ்சம் வைத்துக்கொள். அவருக்குக் காப்பி கலந்து கொடுத்து விட்டு வருகிறேன். ஹீம்! குழந்தை வேண்டாம் என்று சொல்லுகிறவர்களுக் கெல்லாம், இம்மாதிரி குழந்தையைக்கொடுத்துக் கடவுள் கஷ்டப் படுத்துகிறான். உனக்குக் கை நிறையப் பணமும் இருக்கிறது. குணம் நிறைந்த கணவரும் இருக்கிறார். தெய்வம் உங்கள் பங்கில் இல்லை." என்று ருக்மணி சொல்லி விட்டுக் குழந்தையை உமாவின் கையில் கொடுத்தாள்.

தங்கை சொன்ன வார்த்தைகள் அம்பு போல் சுருக்கென்று உமாவின் உள்ளத்தில் தைத்தன. குழந்தை அவளைக் கண்டவுடன் அழ ஆரம்பித்துவிட்டது. உமா அதைச் சமாதானப் படுத்திப் பார்த்தாள். குழந்தயின் குரல் உச்சஸ்தாயை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்ததே தவிர மந்திர ஸ்தாயிக்கு இறங்கவில்லை.

"அக்கா, குழந்தை வளர்ப்பது ஒரு டெக்னிக். பாவம்! உனக்கென்ன தெரியும்? குழந்தையை இப்படிக் கொண்டா. நான் அதனுடைய அழுகையை நிறுத்தி விடுகிறேன்"–இறுமாப்புடன் பதில் சொல்லி விட்டு குழந்தையின் அழுகையை நிறுத்தினாள் ருக்மணி. அவளுடைய கண்கள் உமாவை அலட்சியமாகப் பார்த்தன.

உமா மௌனமாகத் தன் அறைக்குப் போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். கடல் நீரை உட்கொண்ட மேகம், திடீரென்று மழையைப் பெய்விப்பது போல், உமாவின் உள்ளத்திலிருந்த வேதனை முகில், அவள் கண்களின் மூலம் தன் துயரத்தைத் தெரிவித்துக் கொண்டது. சொந்த நாட்டிலே அவள் கணவன் பிச்சைக்காரத் தொழில் செய்து வந்தால் கூடப் போதும் என்று தோன்றி விட்டது.

மனத்தில் இருக்கும் துக்கங்களையெல்லாம் சேர்த்து சுந்தருக்கு ஒரு கடிதம் எழுதினாள். அவள் எழுதித்தான் என்ன பயன்? அவனிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. ஆனால் வழக்கமாக அனுப்பும் பணத்தைக் காட்டிலும் அதிகப்படியாக தீபாவளிக்கு பணம் அனுப்பியிருந்தான்.

உமா பணத்தையும், பொருளையும் எதிர்பார்க்க வில்லை. கணவன், மற்ற ஆண்களைப் போல உள் நாட்டிலேயே தொழில் செய்ய வேண்டும் என்ற அளவில்லா விருப்பம் அவளுக்கு. கொடிய பசியால் வாடுபவனிடம் பாதாம் அல்வாவைக் கொடுத்தால் பசி அடங்குமா? அவனுக்கு வேண்டிய உணவை வயிராற அளித்தால் தானே பசி அது அடங்கும்? இது போல கணவன் முகத்தைப் பார்த்துத் தன் அன்புப் பசியை ஆற்றிக் கொள்ள நினைத்த உமாவிற்கு, சுந்தர் பணம் அனுப்பியிருந்தது பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

பணத்தை அப்படியே அவனுக்குத் திருப்பி அனுப்பி விடலாமா என்று ஒரு கணம் நினைத்தாள். கணவன் மேல் கொண்ட உண்மையான அன்பு அவள் நினைவிற்கு ஒரு திரையிட்டது.

மனம் அலையாதிருக்கவும், மெய்ப்பொருளின்மீது சிந்தை நிலைத்து நிற்கவும், சுவாசத்தை ஒழுங்காக்கி அமர்; அவாவை ஒடுக்கு; புலன்களைக் கா; ஜபமும் தியானமும் செய்.

—சங்கரர்.

மணியார்டர் பாரத்தில் கையெழுத்துப் போட்டு ரூபாயைப் பெற்றுக் கொண்டு, சைனுபஜாருக்குப் போனுள். ஒரு கடையில் தீபாவளிக்காகப் பிரத்யோகமாக வைக்கப்பட்ட புடவைகளின் நிறம் உமாவின் கண்களைப் பறித்தன.

தங்கைகள் இருவருக்கும், அம்மாவுக்கும் நல்ல நிறங்களில் புடவை கூட வாங்கிக் கொள்ளவில்லை. கணவன் கடலுக்கு அக்கரையிலிருக்கும் போது புடவைகளை உடுத்திக் கொண்டு, மற்றவர்களுடைய சந்தோஷத்திற்காகத் தீபாவளியைக் கொண்டாட அவளுக்கு விருப்பம் இல்லை.

புடவைகளை எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள். அப்பொழுது லதாவும், பார்வதியும்

உன் மனத்திலே உருவாகி உயிர் பெற்றுத் துடிக்கும் புதிய இதயத்தை உணராமல் உன் மூஞ்சியிலே, ஓங்கி அறைவதற்காக, உன் மீது காட்டு மிருகம் மாதிரிச் சாடியோடி வரும் மனிதனை நீ எப்படி மன்னிக்க முடியும்?

—கார்க்கி.

எதோ உமாவின் கணவனைப் பற்றி மெதுவாகப் பேசி கொண்டிருந்தனர். அவர்கள் பேசுவதை மெதுவாக உற்றுக் கேட்டாள் உமா.

"பெரிய மாப்பிள்ளை மறுமணம் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப் பட்டேன். அவருக்கு ஒரு குழந்தையும் இருக்கிறதாம்," என்ருள் லதா.

லதாவின் கன்னத்தில் 'பளீர்' என்று இரண்டு அறை கொடுக்கலாமென்னும் ஆத்திரம் வந்தது. நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தாள் உமா.

பெண்ணும், அம்மாவும் ஒருவாறு அர்த்த புஷ்டியோடு பார்த்துக் கொண்டார்கள். 'நாம் பேசிக் கொண்டிருந்ததை உமா கேட்டுக் கொண்டு வந்திருக்ருள்,' என்ற பொருள் அந்தப் பார்வைகளில் நிறைந்திருந்தது.

"அக்கா! இத்தனை நேரம் எங்கே போய் விட்டு வந்தாய்? மேஜை மீது என்ன பொட்டலம் வைத்திருக்கிருய்?"—சொல்லிக் கொண்டு அவள் அருகில் வந்து உட்கார்ந்தாள் லதா.

உமா, அவளை எரித்து விடுபவளைப் போலப் பார்த்து விட்டு, "தீபாவளிக்கு உங்கள் அக்கா வாங்கித் தரும் பரிசு" என்று சொல்லி பொட்டலத்தைப் பிரித்துக் காட்டினுள்.

"அக்கா! உனக்குப் புடவை வாங்கிக்கொள்ள வில்லையா?"

"யார் என் அழகைப் பார்ப்பதற்காகப் புதுப் புடவை உடுத்திக் கொள்ள வேண்டும்? கணவனும் மனைவியும் இன்பமாகக் கொண்டாடுவதற்குத் தான் பண்டிகைகள் வருகின்றன. நான் தென் துருவத்தில் இருந்தால், என் கணவர் வட துருவத்தில் இருக்கிருர். எங்கள் இருவருக்கும் இவ்வளவு 'ஒற்றுமை' இருக்கும் போது நான் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்? இந்த வருஷம் நான் நிச்சயமாகத் தீபாவளி கொண்டாட முடியாது!" என்று உறுதியாகச் சொன்னுள் உமா.

"அக்கா, நான் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டாயா? அந்த கோடியாத்து அலமேலு எனக்கு அத்திம்பேர் விஷயத்தைப் பற்றிச் சொன்னுள். எனக்கு விஷயத்தை மூடி வைப்பதற்கு மனம் இல்லை. அம்மாவிடம் சொன்னேன். என் வார்த்தையில் எதாவது தவறு இருந்தால் மன்னித்து விடு," என்ருள் லதா.

"லதா, உங்க அத்திம்பேர் எந்தப் பெண்ணை மணந்துகொண்டிருந்தாலும் எனக்கு மகிழ்ச்சி தான். என்னுல் முடியாத காரியத்தில்

விரும்பியதை அடையுங்கள்

மாய மோதிரம்

நீங்கள் காதலித்தவர்கள், இந்த மாய மோதிரத்தை அணிந்தால், உங்கள் காலடியில் அவர்கள் விழுவார்கள். எவ்வளவு கல் மனத்தினர்களானாலும், தூரத்தில் இருந்தாலும், அவர்களது மனம் இளகி, உங்கள் கட்டளைப்படி நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவையைப் பெறலாம். நீங்கள் விரும்பியவர்களை மணந்து, பெரும் பொருளுடன், மக்கட் பேறையும் அடையலாம். வியாபாரத் துறையிலும், பரீட்சையிலும் வெற்றியை காணலாம். உங்கள் ராசி நல்ல திருப்பத்தை அடைந்து, அதிர்ஷ்டமுள்ளவர்களாக இருக்கலாம். திருப்திகரமான சுக வாழ்வையும் பெறலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1-94 பைசா. ஒரு பிரத்தியோகமானது 3-94 பைசா.

இது நல்ல தருணத்தில் தயாரித்தது. அற்புத பலனை தரும். திருப்தியடையவில்லையெனில், பணம் வாபஸ் பெறலாம். ஒரு முறை பரீட்சை செய்தால் பலனை அடையலாம்.

Principal:

THE BENGAL MESMERISM HOUSE

(U. M.) NAKODAR, (P. B)

அந்தப் பெண் வெற்றி பெற்றாள், எங்கள் குலத்தில் பிறந்த குழந்தை நன்றாக இருக்க வேண்டும்,'' என்றாள் பரந்த மனப்பான்மையுடன்.

உமாவின் பதிலைக் கேட்டு கற்சிலையாக நின்றாள் லதா.

"லதா, புடவைகளை எடுத்துக் கொண்டு போய் அம்மாவிடம் காட்டு!'' என்று சொல்லி விட்டு, ஏதோ புத்தகம் படிப்பவளைப் போல பாவனை செய்தாள் உமா. அவள் மனம் எதைப் பற்றியும் சிந்திக்க முடியாமல் சூன்யமாக இருந்தது.

தீபாவளிக்கு முதல் நாள் பட்டாசு வெடிகளும், வாண வேடிக்கைகளும் விண்ணைப் பிளக்கும்படி பையன்கள் சுட்டுக் கொண்டிருந்தனர். ருக்மணியும், அவள் கணவனும், சினிமாவுக்குப் போயிருந்தார்கள். பார்வதி விதவிதமான பட்சணங்கள் செய்வதில் சமையறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். லதாவும் ராகவனும் 'கேரம் போர்ட்' விளையாடிக் கொண்டிருந்தனர்.

தனியாக உட்கார்ந்திருந்த உமாவிற்குப் பொழுது போகவில்லை. பெட்டியில் பத்திரமாக வைத்திருந்த கணவன் எழுதிய கடிதங்களையெல்லாம் படிக்க ஆரம்பித்தாள். களங்கமில்லா அன்புடன் எழுதியிருந்த கடிதங்கள், அவளுக்குச் சற்று ஆறுதலைத் தேடித் தந்தன.

எப்படியோ அன்றிரவு ஒருவாறு கழிந்தது.

பகலவன் அடிவானத்தில் உதிக்கும் நேரத்திற்கு முன் லதாவுக்கும் ருக்மணிக்கும் மங்கள ஸ்நானம் செய்வித்தாள் உமா. ராகவனும் ருக்குவின் கணவனும் பட்டாசு சத்தம் காது செவிள் பிய்ந்து போகும்படி சுட்டுக் கொண்டிருந்தனர்.

உமா கோலம் போடுவதற்காக வாசலில் தண்ணீர் தெளித்து, கோலம் போட ஆரம்பித்தாள். அவள் வீட்டு வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. உமா நிமிர்ந்து

பார்த்தாள். அவள் கணவன் சுந்தர் புன்முறுவலுடன் குறும்புப் பார்வை பார்த்துக் கொண்டு டாக்ஸியிலிருந்த ஒரு பெரிய மூட்டையை கீழே இறக்கி வைத்தான்.

"நீங்களா?"—சந்தோஷத்தில் அவள் குரல் கணீரென்று ஒலித்தது.

"உமா, உன்னைப் பிரிந்திருக்க என்னால் முடியாது!...." என்று அவளது கரத்தை அன்புடன் இழுத்தான்.

"இது தெரு என்பதை மறந்து விடாதீர்கள். உள்ளே போங்கள். ஒரு நிமிஷத்தில் இந்தக் கோலத்தை முடித்து விட்டு வருகிறேன்," என்றாள் உமா.

சங்க காலத் தமிழ்ப் பெண்ணின் கணவன், மனைவியை விட்டுப் பிரிந்து வெகு காலமாகி விட்டல், மனைவி மணற் பரப்பான இடத்திற்குச் சென்று, கண்களை மூடிக் கொண்டு விரலால் கோலத்தை இட்டு, அந்தக் கோலத்தின் ஆரம்பித்த இடமும், முடியும் இடமும் ஒன்றாக சேர்ந்தால் அயல் நாட்டிற்குச் சென்றிருந்த கணவன் சந்தேகமின்றி திரும்பி வந்து விடுவானாம்...!

அதுபோல அவள் போட்ட கோலம் பூர்த்தியாகும் சமயத்தில் சுந்தர் வந்து விட்டான் என்ற மகிழ்ச்சியில் அவள் இட்ட கோலத்தை மேலும் பல வளைவுகள் வளைத்துப் பெரிதாக்கி விட்டு உள்ளே நுழைந்தாள் உமா.

தேனை, ஈக்கள் மொய்ப்பது போல் சுந்தரைச் சுற்றி எல்லோரும் நின்று கொண்டிருந்தனர்.

"அத்திம்பேருக்குக் கல்யாணமாகி இந்த வருஷம் தான் தீபாவளிக்கு மாமியார் வீட்டிற்கு வந்திருக்கிறார். இந்தத் தீபாவளி அதிர்ஷ்டத்தோடு நம் வீட்டிற்குள் நுழைந்திருக்கிறது!" என்று உமாவின் கன்னத்தை லேசாகக் கிள்ளினாள் ருக்மணி.

"எத்தனை நாட்களுக்கு எனக்கு இந்தச் சந்தோஷ வாழ்வு? அடுத்த வாரம் நான் பழைய குருடி கதவைத் திறடி என்றாகி விடுவேன்," சலித்துக் கொண்டு பதில் சொன்னாள் உமா.

"உமா, இங்கு வாயேன்!" கூப்பிட்டான் சுந்தர்.

"..................."

"உமா! நான் சொல்வதைக் கேளேன்!"

"கேட்க மாட்டேன்."

"இனிமேல் எனக்குக் கப்பலோட்டும் வேலை இல்லை. இந்த மதராஸ் கஸ்டம்ஸ் ஹௌஸில் உயர்ந்த உத்தியோகம் கிடைச்சிருக்கு; என் கண்மணி உமாவை விட்டு நான் என்றைக்கும் பிரிய மாட்டேன்; இது நிச்சயம்," என்றான், அவள் தலைமயிரை வருடிய படி.

"உண்மையாகத் தானே சொல்லுகிறீர்கள்? உங்கள் இரண்டாம் மனைவியும் குழந்தையும் எங்கே?" என்று ஒன்றுக்கொன்று முரண்பாடான கேள்விகளைக் கேட்டாள் உமா.

"நீ சொல்வதொன்றும் எனக்குப் புரிய வில்லையே! உணர்ச்சியற்ற மனிதனாக இருந்த என்னை எந்தப் பெண் தான் காதலிப்பாள்? அசடே! பரந்த உள்ளம் படைத்த நீ இவ்வாறெல்லாம் பேசுவது நன்றாக இல்லை. உலகத்திலேயே கிடைத்தற்கரிய செல்வம் நீ. உள்ளத்தில் மாசற்ற அன்புடனும், உதட்டில் புன்முறுவலுடன் கணவனை உபசரிக்கும் உண்மையான மனைவி நீயே தான். அந்தப் பரிசு நீ எனக்குக் கிடைத்திருக்கும் போது நான் ஏன் மறுமணம் செய்து கொள்ள வேண்டும்?"

அவளை அன்புடன் கடிந்து கொண்டான்.

கணவனின் அன்பான வார்த்தையைக் கேட்டதும், நாணித் தலை குனிந்து கொண்டாள். பூந்தொட்டியிலிருந்த பட்டு ரோஜாக்கள், தங்களுடைய நிறத்தை உமாவின் முகத்திற்குச் சிறிது நேரம் இரவல் தந்தன. ★

ஆலமரத்துப் பைங்கிளி

'பூவை'

பேசாத தெய்வம் பேசுகிறது :

புனிதம் குழப்பிக் கிடக்கும் என் உள்ளத்தின் உள்ளம் குழப்பம் காட்டி விட்டதே!.... பேசும் என் வாயைக் கூட அடைத்து விட்டதே!......எத்துணை பயங்கர மான சிரிப்பு அது!....

அந்தச் சிரிப்பின் அலைகள் பயங் கரமாக ஆர்ப்பரித்தன ; சிரிப்பில் அழுகை குரல் கொடுத்தது : விரக்தியின் வேதனை பரவியது ; வெந்த நெஞ்சங்களின் தாபம் படர்ந்தது.

சிரிப்பு அழுகையாக மாறியது ; அழுகை சிரிப்பாக மாறியது.

அழுகையும் சிரிப்பும் கலந்தது வாழ்க்கை!

ஆவிகள் இரண்டும் மறுபடி சிரிக்கத் தொடங்கி விட்டன ; ஆவிகளின் நிழல் வடிவிலே நின்ற பூவிழியும் புவனநாதனும் திரும்பத் திரும்பச் சிரிப்பைக் கக்க ஆரம் பித்து விட்டார்கள்.

முப்புரம் எரித்த சடாமுனியின் சிரிப்பை இவர்கள் கண்ட தில்லையோ? கேட்டதில்லையோ?...

இவர்கள்—ஆம் ; பொன்னனும் பொன்னியும் மெய் விதிர்த்துப் போயினர் ; அவர்களது உடல் முழுவதிலும் வேர்வைத் துளிகள் பெய்திருந்தன—ஊசி குத்த இடம் வைக்காமல். அச்சம் ராஜாங்கம் நடத்திற்று — அராஜக நீதியின் விளைவு போன்று. தாம் நிற்பது சாந்தி பூமியா என்ற சந்தேகம் முளைத்தெழுந்தது. தாங்கள் மண் ணில் முளைத்து விட்டமாதிரி புதிய தொரு அனுபவம் கிளர்ச்சி புரிந் தது. காதலையும் கனவையும் ஒரே மூச்சாக-ஒரே உயிரா கப் பிணைத்து இணைத்த மங் கல நாண் பொன்னியையும் பொன்னனையும் கண்டு கண் ணீர் சொரிந்தது.

அவள் நிலை கலங்கினாள் : "ஐயோ, அத்தான்!...."

அவன் விம்மிப் பொருமி னான் : "ஆ! பொன்னி!"

பைங்கிளி: "நானேதான் !

ஆவியுலகத்தில் உங்க ளுக்கு நம்பிக்கை உண்டென் பதை நான் அறிந்து கொண் டேன்.

பேசாத தெய்வத்திற்குப் பேச முடிந்தது ; ஆனால் பேசும் எனக்குப் பேச முடிய வில்லை. ஆத்திரமும் அழுகையும் என் சிவப்பு உதடுகளுக்குக் கட் டுப்பாடு விதித்து விட்டன. குறளி மோடி கிறுக்கி விட்டதா, என்ன?

பொன்னனும் பொன்னியும் கனவுகளைத் தாங்கிக் கொண்டு காதலர்கள் என்ற உறவை இனி னும் பலமாக்கத் தம்பதியாயினர். ஆனால், அவர்களுக்கு இவ்வளவு சீக்கிரத்திலேயே சோதனை விளையு

மென்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் என்ன, சற்று முன் குரல் கொடுத்த அந்தத் தெய்வம் கூட நினைக்கவில்லை போலிருக்கிறது!

பொன்னி என் பேரில் பரிவு காட்டினாள். என் துணைக்குப் பொன்னன் என்றால் நிரம்பப் பிடித்தம். இந்த இணையின் துயரம் கண்டு எங்கள் இதயங்கள் வெடித்து விட்டன.

மறுபடியும் அழுகைச் சத்தம் கேட்டது. பரிதாபம்! புதுமணக் காதலர்கள் பரிதபித்துக்கொண்டிருந்தனர். ஈருடலை ஒருயிராக்கிக் கொண்டவர்கள் ஒருயிர் இரண்டாக வெட்டப்பட்ட மாதிரி துடிதுடித்தனர். பொன்னனும் பொன்னியும் ஒருவரை யொருவர் இறுகத் தழுவிய வண்ணம் அலறினர். அவர்களது ஓலத்தினை மிஞ்சி விட்டது, இடையீடு விட்டு எதிரொலித்த நையாண்டிச் சிரிப்பு.

கண்ணோட்டத்தை ஒருவழிப் படுத்தக் கண்ணீரை விலக்கினேன் நான். என் இறகுகள் பட படத்தன; உயிர்க்கூடு தத்தளித்தது.

"ஆசை அத்தான்!' துருப்புச் சீட்டுகள் இடம் மாறி விழுந்திருக்கின்றன. நான் தான் உங்களை அடைய வேண்டிய ஆடுதன் ராணி!......ஓடி வாருங்கள், தேடி வந்தவளிடம்!......ம்...... சீக்கிரம் அவளை விட்டு விலகி வாருங்கள். என் குரலுடன் சேர்ந்து கத்தும் அந்த ஆண் குரல் அவளுடைய குரல் வளையைக் கௌவிப் பிடிக்க எத்தனிக்கிறது...அதற்குள் ஓட்டமாக என்னிடம் வந்து விடுங்கள். அவனும் அவளும் தான் ஜோடிக்குப் பொருத்தம். நாகரீகத்தின் உச்சாணிக் கிளையில் இருந்த நீங்கள் எப்படி மாறிவிட்டீர்கள்?.... வாருங்கள், நான் உம்மை மறுபடியும் அழகு இளைஞனாக மாற்றுகிறேன்....என் அந்தமும் அன்பும் உங்களைக் காப்பாற்றும்! நீங்கள் வரமாட்டீர்களா? அத்தான், உங்களுக்குச் சிரமம் ஏன்?.... இதோ, நானே உங்களை அண்டி அழைத்துக் கொள்ளுகிறேன்!.... அத்தான்....! இன்றுதான் என் கனவு பலிக்கப் போகிறது!"

ஏன் இந்தச் சத்தம்?

ஊழித்தாண்டவம் தொடங்கி விட்டது போலும்?

நான் இந்தக் கண்ணறுவிக் காட்சியைக் காண என்ன பாவம் செய்திருக்க வேண்டும்!

பொன்னன்—பொன்னியின் வெறுங்கூடுகள் தாம் தரையில் கிடக்கின்றன. உயிர்கள் இரண்டும் வெவ்வேறு திசை நோக்கிப் புறப் பட்டுவிட்டன.

வந்த ஆவிகள் இரண்டும் வெவ்வேறு முனையிலிருந்து சிரித்தன!

வானவீதியில் குரல்:

மனிதன் உண்டாக்கிய செயற்கைச் சந்திரனைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்க மாட்டீர்கள்; மேலை நாட்டு விஞ்ஞானியின் சிந்தனைக்குப் புகழ் மாலை புனைந்து நிம்மதியுடன் வீற்றிருக்கும் உங்களுக்கு ஒற்றைத் தனி விண் மீனான என்னுடைய குரல் கேட்குமோ, என்னவோ?

அதோ, பொன்னன் சிலையென மலைத்து நிற்கிறான். அவனுடைய உடம்போடு உரசியவண்ணம் அவள் நிற்கிறாள். காற்றைச் சாடி வந்த களைப்பு, பூலோகத்தைக் கடந்து வந்த அயர்வு அவ்விரு ஆவிகளின் முகத் திரையில் நிழலாடுகின்றன.

பொன்னன் இளமுறுவலை உதட்டுக் கரையில் உலவ விட்டவாறு நின்றான். அவனுக்கு எப்படி இத்துணை ஆனந்தமும் அமைதியும் ஏற்பட்டன?........

"அத்தான்!"

"பூவிழி!"

"அத்தான், உங்களைக் காணுமல் நான் எவ்வளவு சஞ்சலப் பட்டுப் போனேன், தெரியுமா?.......நான் உங்களைக் காதலித்தேன். ஆனல், விதி நம் இரண்டு பேரையும் ஒன்று கூட வைக்கவில்லை. ஆகவே, நான் மரித்தேன். உங்களைத் தேடித்

தேடி அலைந்தேன். கடைசியில் ஒரு நாள் உங்களைச் சந்தித்தேன்......!''

''பூவிழி, களிப்பு வேளையில் கண்ணீருக்கு அலுவல் வைக்காதே. நாம் இப்போது எங்கு இருக்கிறோம்?.......''

''சொர்க்கத்தில்!''

''பூலோக சொர்க்கத்திலா?''

''இல்லை, இரண்டாவது சொர்க்கத்தில்!.......''

''அப்படியென்றால்!.......''

''நான் நிர்மாணித்திருக்கின்ற இந்த இரண்டாவது சொர்க்கத்துக்கு நான் தான் ராணி; நீங்கள் தான் ராஜா!.......''

''ஒஹோ!''

''ஆமாம்......!''

''அத்தான், என்னை மறந்து விட்டீர்களா?''

''எப்படி மறப்பேன்?''

''பின், ஏன் என்னைத் தேடி வரவில்லை?''

''நான் எங்கு வந்து உங்களைக் காண்பது?''

''நான் உங்களைக் கண்டு கொண்டேனே?''

''வாஸ்தவந்தான்!''

''ஒன்று சொல்கிறேன்......''

''சொல், பூவிழி!''

''உங்களுக்குப் பூலோகத்தின் நினைவு நெஞ்சில் எட்டிப் பார்க்கிறதா?''

''இ......இல்......இல்லை!''

''தடுமாறுகிறீர்களே!''

''நான் அல்ல; என் உதடுகள்!''

''ஏன்?''

''காற்றின் அழுத்தமும் சீதளத்தின் தண்மையும் உதடுகளை ஆட்டுவிக்கின்றன.''

அவளுடைய மென்னகைக்கு அவசரச் சிரிப்பு பின்னணி அமைத்தது.

''அத்தான், பல வருஷமாக நான் உயிரற்ற உடலாக உலவி வந்தேன்; இன்றைக்குத் தான் இந்த உடலில் உயிர் ஒட்டியிருக்கிறது. என்னுடைய முதற்காதல் பலித்த புனித நாள் இது!''

''ஒரு திருத்தம், அன்பே!''

''என்ன?''

''அச்சம் தவிர். 'என்னுடைய' என்று சொல்லி சுயநலக்காரியாக ஆகிவிடாதே. 'நம்முடைய' என்று சொல், கண்ணே!''

''ஆகட்டும், அத்தான். நம் காதலைத் தோற்கடித்த விதியின் வஞ்சகச் செயலினால் நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தோம். நம் இருவர் உடல்களும் எந்தச் சுடுகாட்டிற்குக் காணிக்கையானதோ?....இல்லை, ஓடிச்சென்ற காட்டாற்றின் இதயத்தில் தான் ஜீரணம் ஆனதோ, தெரியாது.''

''குப்பையைக் கிளறாதே!''

''வினாடிப் பேச்சுக்கு பொறுமை காட்ட வில்லை உங்கள் மனம். ஆனால் நித்தம் நித்தம் நான் இதே குப்பையைக் கிளறிக் கிளறி எத்துணை துயரம் அனுபவித்திருப்பேன் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களா?...''

''பூவிழி!''

''கொஞ்சம் உன் பேச்சை நிறுத்து. என்னைக் கொஞ்சம் பார், அத்தை மகளே!''

''ஒஹோ! புது உள்ளம் கொண்டது எனக்கு அதிசயமான செய்தி; நீங்கள் புது எழில் கொண்டு விளங்குவது உங்களுக்கு வினோத மான தகவல். சரி, புது உலகம் அழைக்கிறது, போவோம் வாருங்கள் அத்தான்!''

பொன்னன் அவளுடன் தொடர்ந்தான். புதுமையின் மணம் பரவி

யிருந்த பகுதிகளிளெல்லாம் இருவரும் ஜோடியென மிதந்தார்கள்; எழில் மண்டித் திகழ்ந்த பாதைகள் அத்தனையிலும் அவர்களது தொடராத நிழல் பதிந்து புதைந்தது.

‘‘அத்தான்!’’

அவன் அவளை நோக்கினான். இளமை கொழித்த கன்னியின் பருவம் போதைகொண்டு திகழ்ந்தது.

‘‘அத்தான்!’’

‘‘பூவிழி!’’

அவனுடைய காம நோக்கு அவளுடைய தூய அழகில் ஊர வேளை பார்த்தது.

யாரோ துஷ்யந்த மகாராஜா கந்தர்வ மணம் புரிந்த சகுந்தலையை முனி சாபத்தால் மறந்தாராமே! உண்மையா?

அப்பொழுது அவள் அவனது கரங்களைப் பற்றினாள். அவன் மேகத்தூட்டொன்றில் சாய்ந்தான். அவளும் சாய்ந்தாள். நிலவுக் குழந்தை கண்களைப் பொத்திக் கொண்ட நேரத்தில் எரிமலை வெடித்தது.

‘‘ஐயோ, அத்தான்!’’

ஹஹ்ஹஹ்ஹா!

இளந்தென்றல்

‘‘அத்தான்...அத்தான்!’’

பொன்னியின் கூப்பாடு பொன்னனுக்கு எப்படிக் கேட்கும்? — பாவம், இந்தக் கன்னிப் புறாவைத் தான் புவனநாதனின் இதயச் சிறை கம்பிகளைக் காட்டி எண்ணிக்கையைக் கணக்கெடுக்கச் சொல்கிறதே!....

பூந்தென்றல் நான்; என் நெஞ்சம் சூருவளியாகச் சுழல்கிறது. நான் துயரருகிறேன்; வேறென்ன செய்வேன்?...... கூடு விட்டுக் கூடு பாயவாவது தெரிந்திருந்தால், பொன்னிக்கு விடுதலை அளித்திருக்க மாட்டேனா?...

‘‘மாமன் மகளே!’’

‘‘யார் நீங்கள்?’’

‘‘உன் அத்தான்!’’

‘‘நான்!’’

‘‘நீ என் சொத்து!’’

‘‘உங்கள் கண்ணோட்டத்தில் புதிய சொத்துரிமைச் சாசனம்

புதிதாக எழுதப் பட்டிருக்கிறதா? நீங்கள்....வேற்று மனிதர்!...நான் வேறொருத்தரின் நிதி!''

''பைத்தியக்காரப் பெண் நீ!''

''இதே மொழிக்கு 'ஆண்பால்' தந்து நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள், ஐயா!''

''ஐயாவா?''

''ஆம்!''

''நான் உன் ஐயனல்லவா?''

''என் ஐயனை எங்கோ மறைத்து விட்டீர்!''

''குற்றம் செய்தவன் நான் அல்ல; வேறு யாரோ ஒருத்தி!''

''பார்க்கிறேன் அவளை!''

''அவளை நீ பார்க்க முடியாது!''

''ஏன் முடியாது? என் தாலி எனக்கு அவளைக் காட்டும்!''

''அப்படியா? உன் நினைவு மாறவில்லையா? பூவுலக ஞாபகம் இன்னும் உன்னைப் பிரிந்து ஓடவில்லையா?''

''ஊஹூம்!''

''அதிசயமாக இருக்கிறதே!''

''இந்த மாங்கல்யத்தின் சிறப்பும் அதுவே தான்!''

''முந்தைப் பிறவியில் நாம் இருவரும் முறைமை கொண்டு முறையாகக் காதலித்தோம்; நாம் இருவரும் கலியாணம் செய்து கொள்ள இருந்தோம்; ஆனால், காலன் வழிப்பட்டு விட்டோம்.''

''பழைய ராமாயணம் இது!''

''நம் காதல்....?''

''நம் முன் அதுவும் இறந்து பட்டது!''

''அப்படியென்றால்....!''

''உன் வாயிலிருந்து இந்த மாதிரி முடிவை எதிர்பார்க்கத்தானா இவ்வளவு காலமாக நான் ஆவியாக அலைந்து திரிந்தேன்!''

''நான் என் அத்தானுக்கு உரியவள். என்னை அவரிடம் அனுப்பி விடுங்கள்!....''

''பொன்னி!''

''ம்....நெருங்காதீர்கள்!''

''பொன்னி...!''

''என் தாலி உம்மைச் சுட்டெரித்து விடும்!''

''என்னைப் பற்றி நான் அக்கறை கொள்ள வேண்டாமா? இதோ, தமிழ்ப் பண்புக்கோட்டைக் கிழித்துக் காட்டுகிறேன். இதை தாண்டினால், உம் ஆவி நரகலோகத்திற்குச் சென்று விடும்; நினைவுறுத்துங்கள்!''

''பொன்னி!''

''ஐயா, புவனநாதரே!''

''அத்தான் என்றுவது கூப்பிடு!''

''நீர் அதற்கு உரிமையற்றவர்!''

''பொன்னி!''

''ம்...விலகுங்கள்!''

''முடியாது!''

''முடியாதா?''

''ம்!''

''இதோ, பாரும்!....''

''ஆ....ஐயோ!....தீ பரவி விட்டதே!....ஐயோ!...பொன்னி!''

''ஐயா, ஓடுங்கள்....இனி தீயைக் கட்டுப் படுத்தி விடுகிறேன்!...''

''வேண்டாம்......தீ வளரட்டும்; பரவட்டும் தீ!......என் காதலுடன் என் ஆசையும் தீக்கிரையாகட்டும்!....இனி நான் மறு பிறவி எடுக்கவே வேண்டாம்!...என்னை மன்னித்து விடு!''

கடவுளே!

ரதி—மன்மதன் காரியாலயம்

''ஹல்லோ, நான்தான்.... டெலிபோன் பேசுகிறது. உங்கள் அன்புப் பிராட்டியார் திருமதி ரதி தேவியார் அவர்கள் உங்களிடம் முக்கியமான இச் செய்தியைத் தெரிவிக்கச் சொன்னார்கள்; நீங்கள் உங்கள் நாயகியுடன் போட்டி நடத்தினீர்களாம்; பொன்னியின் கற்பின் திறன்தான் கடைசியில் வென்று விட்டதாம்... பொன்னனின் சபல சித்தம் நல்ல பாடம் கற்றுக் கொண்டதாம்... கதையின் கதை முழுவதையும் நீங்கள் அறிவீர்களானாலும், அவர்கள் வாயால் தன் வெற்றியைச் சொல்ல வேண்டுமென்று காத்திருக்கிறார்களாம்! இன்னொன்று: பொன்னனும் பொன்னியும் பூலோகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்! ... வணக்கம்....!'' ★

இலக்கியச் சுவை

இலக்கிய இன்பம் பெற வேண்டுமாயின், கலைஞன் காட்டும் காட்சியை மனத்தால் உணர வேண்டும்; அந்த உணர்ச்சி கை வரவேண்டுமாயின், காட்சிக்குரிய மனநிலையை நாம் பெறவேண்டும்; அந்த உணர்ச்சியை நாம் பற்ற வேண்டும். எப்படி அது முடியும்?

ஏற்கெனவே நாம் கண்டுள்ள சில முடிவுகளை இங்கே மீண்டும் நினைவூட்டிக் கொள்ளலாம். அந்த முடிவுகள் இலக்கியஉணர்ச்சியை—கவிதையில் உள்ள காட்சிக்குரிய உணர்ச்சியை—நாம் பற்றும் வழியினைப் புலப்படுத்தக் கூடியவை:

'என்னில் யாரும் சிறந்தவர் இல்லை; யானே உலகின் முதல் அறிஞன்' என்று மண்டை வீங்கிப் புகுவோனுக்கு இலக்கியச் சுவை என்றுமே சிக்கிவிடாது.

இலக்கியத்தைப் படைத்தவனின் கலைக்காதல் அதனைச் சுவைப்பவனுக்கும் ஏற்படவேண்டும்.

இலக்கியத்தில் ஆராய்ச்சிக்கு இடம் இல்லை என்று சொல்லமுடியாது; இடம் உண்டு. அந்த ஆராய்ச்சி மென்மையானது; சேதமும் சிதைவும் விளைக்காதது.

நெஞ்சப் பாங்குக்கு ஏற்ற வண்ணம்தான் இலக்கியத்தில் சுவை காணமுடியும். ஒருவனுடைய நெஞ்சப்பாங்கே கூடப் பல வேளைகளில் மாறும்; அம்மாறுதலுக்கு ஏற்றவாறு இலக்கிய இன்பமும் மாறும்.

மூளையின் முனைப்பை ஒடுக்கி, முன்னிற்கும் இன்பத்தைக் கருவேற்கும் அனுபவ வேட்கை கொண்ட நிலையில் இலக்கியத்தைத் தொட்டால், இலக்கிய இன்பம் தொட்ட இடமெல்லாம் காணலாம்.

கவிதை இன்பத்தை நுகர நம் மனமே பக்குவப்பட வேண்டும்.

இவை முன்னைய கட்டுரைகளில் ஆங்காங்கே விரவிவந்த வாக்கியங்கள். சுவைஞனுக்கு உரிய விதிகள் என இவற்றைச் சொல்லலாம். வேறு சில விதிகளும் உண்டு. அவற்றை இங்கே காண்போம்.

இலக்கியச் சுவை காண விரும்புவோன் தன் சொந்த விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி வைக்க வேண்டும். ஆலயம் புகுவோன் முதலில் பலிபீடத்தின் முன் நின்று வணங்குவான்; அங்கே தன் ஆணவம் முதலிய மாசுகளைப் பலியிடுவதாக அச்சடங்குக்குப் பொருள் சொல்லுவார்கள். ஆணவ முனைப்பைப் பலி கொடுத்த பிறகே மனிதன் ஆண்டவனை வழிபடும் தகுதியுடைய அடியவனாகிறான். இலக்கியச்சுவைஞனும் விருப்பு வெறுப்பு வடிவிலே தோற்றம் அளிக்கின்ற ஆணவத்தை முதலிலே பலியிடவேண்டும்; அதன் பிறகே இலக்கியச் சன்னிதியில் நுழையும் தகுதி பெறுகின்றான்.

விருப்பு வெறுப்புகளோடு இலக்கிய அரங்கில் நுழைகின்ற ஒரு

தமிழ்ப் பேராசிரியர்

ம.ரா.போ. குருசாமி

வன், தன் மனத்தின் உள்ளரங்கில் பேய்க் கூத்தாடும் வெறுப்பைக் காண்பான்; தன் மன அரங்கிலே கொலுவிருக்கும் விருப்பையும் காண்பான். ஆனால், இலக்கிய ஆசிரியனின் கருத்தை உணரமாட்டான்.

இலக்கியப் பயிற்சியின் முதன்மையான நோக்கங்களில் ஒன்று, இலக்கிய ஆசிரியனின் கருத்தை உணர்வதுதான். அந்த மையத்தை உணர்ந்துகொண்ட பிறகே அவனுடைய சிந்தனையும் கற்பனையும் சுற்றிச் சுழலும் வட்டாரம் நமக்குத் தெளிவாக விளங்கும்; இன்பத்தின் எல்லையும் விரியும்.

குத்தான்; 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்பதும் அவர் பாடிய பாடல்தான். ஆனால், அந்த முடிவுகளைச் சாதி வெறி நோக்கிலே அவர் தரவில்லை. 'ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு' எனப் பாடியவரும் அவரேதான். சாதிச் சழக்குகளை நினைந்து புலம்பிய பாவலனின் பாடலை, சாதித் தீயை வளர்க்கும் நெய்யாகப் பயன் படுத்துவது பாதகம்; பாதகம் என்ற அளவில் நின்றாலும் கவலை இல்லை; அது நெடுங்காலம் நிலவாது. ஆனால், இந்தச் சாதி வெறியர்களால் பரப்பப்படும் 'இலக்கியச் சுவை'

சுவையிலே கலப்பு

பாரதியார் பாட்டிலே சுவை காணும் சிலரை இங்கே எடுத்துக் காட்டலாம். பாரதியார் சாதி சிரணம் பண்ணிவிட்டவர். அவருடைய எழுத்தோவியங்களில் சாதி வெறிக்கு சான்று காண்பாரும் உண்டுதானே?

'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே'

'பேராசைக் காரனடா பார்ப்பான்'

என்பன போன்ற வரிகளைமட்டும் அடிக்கடி மேற்கோளாகக் காட்டிக் காட்டி மகிழ்ச்சி யடைபவர்கள் தமிழகத்தில் மிகப் பலர். அதே போல அவருடைய பள்ளுப் பாட்டை இசையமைத்துப் பாடுகிறவர்களில் சிலர் 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்ற பகுதியை மட்டும் பாடாமல் விட்டுவிடுவதையும் நாம் காணலாம்.

'பேராசைக் காரனடா பார்ப்பான்' என்பது பாரதியார் வாக்

சரியான நோக்கிலே பிறக்கவில்லை என்பதையே இங்கு நாம் காண வேண்டும்.

சாதி வெறியர்களுக்கு எக்களிப்பை ஊட்டும் வரிகளாக இவை இருக்கலாம்; ஆனால், கவிஞனின் முழு நினைப்பையும்—சிந்தனையின் மையத்தையும்—உணராத அறியாமை நிலையிலேதான் இந்த விருப்பம் பிறந்திருக்கிறது.

'பார்ப்பானை ஐயரென்றகாலமும் போச்சே' என்ற வரியை விட்டு விட்டுப் பாடுவதும் இதே சாதி வெறியின் மற்றொரு துருவம்தான். முதலவர்கள் விருப்பு நிலையிலே—பொய்க் காதலிலே—இந்த வரிகளை மட்டும் எடுத்துக் காட்டுகிறார்கள்; பின்னவர்களோ வெறுப்பு நிலையிலே—பொருந்தாக் காழ்ப்பிலே—இந்த வரியை விட்டுப் பாடுகிறார்கள். இலக்கியச் சுவை தேரும் சுவைஞனுக்கு பொய்க் காதலும் கூடாது; பொருந்தாக் காழ்ப்பும்

*

'இலக்கியச் சுவை' என்ற மகுடமிட்ட கட்டுரைத் தொடரின் சுவை இதழுக்கு இதழ் மிஞ்சுகிறது: 'மண்டையரும் மதலையரும்,' 'தேனுக்குள் இன்பம்' 'கடவுளும் கவிதையும்' 'மனம் பற்றி வாழ்மின்!' என்னும் நான்கு பகுதிகள் இதுவரை வெளியிடப் பெற்றுள்ளன.

கூடாது. தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களைப் பலி யிட்ட பிறகுதான், இலக்கிய ஆசி ரியனின் சன்னிதியிலே நுழையும் தகுதி சுவைஞனுக்கு உண்டா கிறது. அத்தகையவனே கலைஞ னின் சிந்தனை மையத்தைக் காண வல்லவன்.

முன்னைய ஆசிரியர்களின் நூல் களைப் பதிப்பிக்கின்றவர்களிடமும் இங்குக் குறித்த குறைபாடு காண லாம். ஓர் ஆசிரியருடைய பழைய நூலைப் பதிப்பிக்கும் பொழுது, அதனை அவர் எழுதிய வாறே பதிப்பிக்க வேண்டும்; அப் போதுதான் ஆசிரியரின் சிந்தனை ஓட்டமும், அவர் காலத்துச் சூழ் நிலையும் சரிவரத் தெரிய முடியும்.

நம் காலக் கண்கொண்டு, பழைய இலக்கியங்களைப் பற்றி ஆராய்வது வேறு; நம் காலத்துக் கருத்துக்கு ஏற்ற வண்ணம் பழைய நூல்களைத் 'திருத்தி' வெளியிடுவது வேறு. உண்மை யில் இத்தகைய பதிப்புகளைத் திரித்த பதிப்புகள் என்றே கூற வேண்டும்.

ஓர் ஆசிரியன் ஒன்றை எழுது கின்றானென்றால், அவனுடைய எழுத்தோவியம் உருவாகப் பல கூறுகள் துணையாக நிற்கின்றன. அவனுடைய கருத்தும் நடையும் அவனுடைய காலத்தால் ஒருவாறு உருவாக்கப்படுகின்றன. சில கலை ஞர்கள் தங்கள் காலக் கருத்தை யும் மீறிய நிலையிலே சில ஓவியங் களைத் தீட்டுவது உண்டு. ஆனால், அந்தப் புரட்சி ஓவியங்களுக்குரிய கருத்து வண்ணங்கள்கூட அவர்க ளுடைய காலத்துக் கருத்துக் களாகிய மூலப் பொருள்களைக் கொண்டுதான் குழைக்கப் பெற் றன. இதை மறக்கக் கூடாது.

கலைஞனின் காலத்தையும் கருத் தையும் மறைத்து விடுகின்ற பணி யைச் செய்தால், இலக்கிய வர லாற்றை மாசுபடுத்துகிறோம் என் பதுதான் முடிவாகும். வரலாறு மாசுபடுமாயின், சுவையிலும் கலப் புத்தான் இருக்கும். 'இன்ன சொல்லை இன்ன காலத்தவர் இவ் வாறு கையாண்டனர்' என உணர் வதும் இலக்கியச் சுவை காண்ப தற்கு ஒரு வழியாகும். நம் மனத் துக்கு ஏற்றவாறு திரித்துப் பதிப் பித்து விட்டால், நாம் காண விரும் பும் இலக்கிய ஆசிரியனைக் காண லாம்; ஆனால் நாம் காண வேண் டிய இலக்கிய ஆசிரியனைக் காண முடியாது. நம் வழிக்கு வலுக்கட் டாயமாக இழுத்து வரப்பட்ட அடி மைக் கலைஞனைக் காணலாம்; கலை வானில் தன் மனம்போல் சிறகடித் துப் பறந்து நம் கருத்தைக் கவ ரும் உரிமைக் கலைஞனைக் காண முடியாது.

சமய விருப்பு வெறுப்புகளும் இலக்கியச் சுவையிலே குறுக்கிடு தல் கூடாது. திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டு பதிகம் பாடி னார் என்பதை நம்பி விரிவுரை யாற்றுகிற சில சைவப் பெருமக் களுக்கு, நம்மாழ்வார் செய்தி வயிற்றில் புளி கரைக்கும். 'நம் ஆளுடைய பிள்ளை அருளிச் செய்தாரென்றால், புளிய மரத்தடி யில் கிடந்த ஊமைகளெல்லாம் பாடிவிட முடியுமா? அத்தனையும் பொய்' என்று அந்தப் புளிப்பு கசப்பாக மாறிக் காழ்ப்பாகப் பரவும்.

சுருங்கச் சொன்னால், இலக்கிய ஆசிரியனின் கருத்தை உணர்வதே நோக்கமாகக் கொள்ளவேண்டும்; அந்தக் கருத்துணர்ச்சியே உண் மையான இலக்கியச் சுவையைத் தரும். நம்முடைய புளிப்பையோ, கசப்பையோ, காரத்தையோ கலந்து விட்டால், கலவைச் சுவை கிடைக்குமே தவிர, கலைஞன் வழங் கிய அதே சுவை கிடைக்காது.

வீட்டிலே பிரையிட்டு வைக்கி றோம்; தயிர் அளவுக்கு மீறிப் புளித்து விடுகிறது; சற்றே உப் பைச் சேர்த்துக் கொள்கிறோம்... இதைப் போலவே, இலக்கியச் சுவை காண்போனும் தன் 'கைச் சரக்கை'ச் சேர்த்துக் கொள்ளக் கூடாதோ என்று கேட்கலாம்.

விடையைப் பொங்கலன்று பார்ப்போம்: ★

பாரதப் பண்பின் சரித்திரம் விரிவானது ; பாரதப் பண்பினைக் காக்க முயன்றவர்வளின் வரலாறு நம் நெஞ்சங்களிலே என்றென்றும் நிலவும் மதிப்புப் பெற்றவை. அனசூயா இதற்கு ஓர் உதாரணம்.

பாரதப் பண்பு

ஸ்ரீ பரணி

மா

அனசூயா காபபியும் கையுமாக வாசலில் வந்து நின்றாள். அவள் எதிர்பார்ததபடி அவள் கணவன் ரகுராமன் வாசறபடியில் ஏறிக் கொண்டிருந்தான்.

''அனு, டைமண்ட் டாக்கீஸில் இன்றைக்கு 'ஸெனோரிட்டா' படம் ஓடுகிறது. நாம் இருவரும் சேர்ந்து சென்று 'பாக்ஸி'ல் அமர்ந்து பார்ப்போம். அற்புதமாக உடை உடுத்துக் கொண்டு புறப்படு,'' என்றான் ரகுராமன், காப்பியைச் சுவைத்த வண்ணம்.

'ஸ்ரீ முருகன் படம் நடக்கிறதாம் பக்கத்துக் கொட்டகையில். புராணப் படம். அதற்குப் போகலாமே?'' என்றாள் அவள், சேலைத்

தலைப்பின் நுனியை தன் மென்விரலால் நெருடியவாறு.

மனைவியின் பேச்சு கணவனுக்கு எரிச்சலைத் தந்திருக்க வேண்டும். முகவிலாசத்தில் ஒருவகை மாற்றம் இருந்தது.

"என்ன அனு இது? சொந்தப் பட்டிக் காட்டை விட்டு இவ்வளவு பெரிய நகரத்துக்கு வந்துங்கூட இன்னும் உனக்கு இந்தக் கர்நாடகப் பழக்கம் மாறவில்லையே?... என்போல நீயும் நாகரீகத்தின் உச்சியில் நின்றால், என் கௌரவம் எவ்வளவு புகழடையும், தெரியுமா? நான் படித்துப் படித்து எத்தனை முறை சொன்னாலும்தான் உன்னுடைய களிமண் மண்டையில் ஒன்றும் ஏறமாட்டேன் என்கிறதே?" என்று இரைந்தான் ரகுராமன்.

பாவம், அனசூயாவின் கண்கள் கண்ணீரால் நனைந்தன.

2

அனசூயா சாந்த சொரூபி. அழகிலும் குணத்திலும் உயர்ந்தவள். ஒரு சிறிய பேச்சுக்குக்கூட மனந்தாள மாட்டாத இருதயம் படைத்தவள். புருஷனுக்கு பெரிய வேலையாகி ஜன்ம பூமியை விட்டு நாட்டிற்கு மறுகோடியில் வந்தும் அவளுடைய பழைய நாகரிகம் சொந்த ஊரில் உள்ளபடியே இருந்தது. காலத்திற்கும், இடத்திற்கும் தகுந்தபடி மாற்றிக் கொள்ள எவ்வளவு பாடுபட்டால்கூட அவளுடைய மனம் மாற மறுத்தது.

அவள் தன் இரு கண்களைத் திறந்து இவ்விடத்து நாகரிகத்தை பார்த்தாள். அதே கண்களை மூடியபடி தன் தேசத்துப் பண்புகளை எண்ணலானாள். அங்கே நடக்கும் குடும்பக் கட்டுப்பாடு, நாணம், அச்சம், பெரியோர்களிடம்மரியாதை, பதிபக்தி எல்லாம் இங்கு தலைகீழாக இருந்தன. ஆணும், பெண்ணும் சுதந்திர வாழ்க்கையை நாடுவது, முன்பின் அறியாத ஆடவனுடன் ஒரு பெண் தனித்து போவதும், சரிநிகர் சமானமாக சைக்கிள் சவாரி செய்தல், பொதுக் கூட்டங்களில் பெண்கள் விவாகரத்துச் சட்டத்தைப் பிரசங்கம் செய்தல் இவைகளைப் பார்க்கும் போது மூளை கலங்கிவிடும் போலிருந்தது. இவைகளைப் புரிந்துக் கொண்டு அதன்படி நடக்க மனமும் வரவில்லை.

3

"அனு, இன்னும் அரைமணி நேரத்தில் என் ஆபீஸர் தன் மனைவியுடன் வருகிறார். நீ உயர்வாக டிரஸ் பண்ணிக் கொண்டு இருக்கவேண்டும். அப்போதுதான் என்னைப் பற்றி மதிப்பாக நினைப்பார் அவர்," என்றான் ரகு.

"எதற்கு? என்று கேட்டாள் துடுக்காக—அனசூயா.

"உன் முகத்தைப் பார்க்க வரவில்லை. ஒருவர் வீட்டிற்கு மற்றொருவர் சென்று வருவது, ஒரு வகை நாகரிகம்! நாம் எப்படி வாழ்க்கை நடத்துகிறோம், நாம் நாகரிகமாக இருக்கிறோமா என்று பார்த்துப் போக வருகிறார்கள். ஆகையால் நீ உன் கர்நாடக பாணியை விட்டு விட்டு, கொஞ்சம் அதிகமாகவே மேல்நாட்டு முறைப்படி தயாரித்துக் கொள். அன்று வாங்கின நைலான் ஸாரியை கட்டிக்கொண்டு அந்த ஹை—ஹீல்ஸ் ஜோடுகளை அணிந்துக் கொள். உம், மறந்து விட்டேன்; உன்னுடைய நீண்ட ஜடையை இரண்டாகப் போட்டு மடித்து கட்டி விடத் தவறாதே."

அனசூயா அப்படியே கல்போல் சமைந்து விட்டாள். கைதிக் கூண்டில் நிற்கும் ஒருவன் தனக்கு எந்த விதமான தண்டனை வருமோ என்று அஞ்சுவது போலிருந்தது அவளுடைய பார்வை.

அரைமணி சென்று விட்டது.

"ஹலோ, ஹாப்பி டே!" என்று கூறிக் கொண்டே தம்பதி சமேதராய் உள்ளே வந்தார்கள். அந்த நாரீமணி கற்பனைக் கெட்டாத அளவிலே அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

நகங்களில் 'க்யூடெக்ஸ்'; உதட்டில் சிவப்பு சாயம்; 'பாப்' செய்யப்பட்ட தலைமுடி தோளின் இருபுறமும் தொட்டு முத்தமிடுவதுபோல் காற்றில் அசைந்தது.

அனு மெதுவாக நடந்து வந்தாள்.

"குட்மார்னிங்!" என்று சொல்லிக்கொண்டே ஆபீஸர் முன்னே நடந்தார். ரகு பின்னாலிருந்து தன் மனைவிக்கு 'பரவாயில்லை' என்று சைகை காட்டினான். முன்னால் நகர்ந்த ஆபீஸர் அப்படியே நில்லாமல் தன்னருகில் வந்து கைகுலுக்குவதற்காகக் கையை நீட்டினார். அவளுக்கு வானம் இடிந்து தன் தலைமேல் படும்படியாக இருந்தது. ராட்சசனின் இரும்பு கையில் தன்னுடைய மென்மையான கை நசுங்கி விட்டதுபோல் எண்ணி, நடுங்கிக் கொண்டே தன் கைகளை உடனே இழுத்துக் கொண்டு பின்னுக்கு நகர்ந்து நின்று கொண்டாள்.

"அவளுக்கு ஏதாவது மூளைக் கோளாறு?" என்று ஆபீஸர் மனைவி கேட்டாள்.

"அதுவெல்லாம் இல்லை....!ம்!.... அவள் சிறுவயதில் நடனமாடுவாள். நாடகத்தில் நடிப்பது கூட உண்டு. அதை உங்களுக்கு காட்டுகிறாள். ஏனென்றால் நாளை நம் பால்ரூம் டான்ஸில் கலந்துக் கொள்ள வேண்டாமா? அதற்காக!" என்று சமாதானம் அளித்தான்.

ஆனால் அனுவுக்கு சப்த நாடியும் அடங்கி விட்டது. தன் புருஷன் தான் நாடகத்தில் நடித்ததாகவும். நடனமாடினேன் என்றும் ஒரு பெரிய அபாண்டத்தைச் சுமத்துகிறாரே என்று மனம் நொந்தாள்.

அவர்கள் விடை பெற்று சென்றதும் அனசூயா துக்கம் தாள முடியாமல் தொப்பென்று அருகில் இருந்த நாற்காலியில் விழுந்தாள். ரகுவிற்கு ஒருபுறம் அவமானம். தன் மனைவி வந்தவர்களிடம் சரியாக நடக்கவில்லை. மற்றொரு

புறம் தான் சொன்னபடி உடை உடுத்தவில்லை. ஆத்திரத்தால் கத்த ஆரம்பித்தான்.

"அப்படியெல்லாம் ஒரேயடியாக கோபிக்க வேண்டாம். உங்களுக்குச் சேவை செய்யவே நான் உங்களை மணந்தது. தங்களுடைய சொற்படி நடக்கிறேன். ஆனால் பிற ஆடவருடன் உடல் உராய்வது கை குலுக்குவது நம்முடைய ஹிந்து தர்ம விதியில்லை. இனி என்ன சொன்னாலும் கேட்கிறேன். "இதோ பார் அனு. ஒன்று மட்டும் கேட்கிறேன். அதற்கு மட்டும் ஒப்புக்கொள். இனி உன்னை எதற்கும் கேட்கமாட்டேன். இதை மட்டும் நிறைவேற்றி விடு. எனக்குக் கௌரவம் கிடைக்கும். வேலைக்கும் உயர்வு கிடைக்கும். உனக்கும் புண்ணியம். தகராறு செய்யாதே."

"சரி. செய்கிறேன் விஷயத்தைச் சொல்லுங்கள்."

"நாளைக்கு என்னுடைய ஆபீஸ் ஜெனரல் மானேஜர் ரிடயர்ட் ஆகிறார். அவருக்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்து பார்ட்டி ஒன்று தயார் செய்கிறோம். அதில் இந்த தேசத்து ஆசாரப்படி ஆண்களும் பெண்களும் நடனமாடுவார்கள். என்னுடன் வேலை செய்கிறவர்கள் எல்லாம் தம் மனைவிகளுடன் ஆடுவார்கள். அதில் என் பங்கில் நாம் இருவரும் ஆடவேண்டும்!"

"நானா! பத்து பேர் நடுவில் உங்களுடன் ஆட வேண்டுமா? என் உயிரே போனாலும், என் மானத்தைவிடமாட்டேன்! இதற்கு ஒரு காலும் சம்மதியேன்!"

4

"அனு, எங்கே இவ்வளவு நேரம் போயிருந்தாய்?" என்று சத்தம் போட்டான் ரகுராமன்.

"கிஷோருடன் பாட்மின்டன் ஆடச் சென்றேன்."

"ஆமாம்—இன்று கிஷோருடன் போனாய், நாளை ரஞ்சித்சிங்குடன் பிக்னிக் போவாய். இப்படியே சுற்றினால் எப்படித்தான் முடியும்? உனக்கு வீட்டின் நினைவே இல்லையா? எல்லா மனைவிகளும் இப்படித் தான் களைத்து வரும் கணவனைக் கவனிக்காமல் கேளிக்கைகளில் இருக்கிறார்களா?

"அனசூயா! இந்தப் பச்சைப் பாலகனுக்காகவாவது இரக்கம் காட்டு. பெற்ற தாய்க்கு குழந்தை மேல் ஆசையிராதா?"

"அப்பப்பா, முடிந்து விட்டதா உங்கள் பிரசங்கம்? எப்போது பார்த்தாலும் புருஷன், பிள்ளை, வீடு என்று ஒரே புகார். வேணுமென்றால் ஹோட்டலிலிருந்து எடுப்புச் சாப்பாடு வரவழைத்தால் போச்சு. இந்தத் தடிப்பயலை நர்ஸெரியில் சேர்த்து விடுகிறேன். சகிக்க முடியவில்லை உங்கள் தொல்லை!"

ரகுவிற்கு அவள் வார்த்தைகள் மண்டையில் அடித்தது போல் இருந்தன.

அனசூயா சிரித்துக் கொண்டே கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டாள். "ஹல்லோ அன்ஸு! கமான் கமான்!" என்ற குரல் கேட்டதும் தன்னை மற்றொரு முறை நிலைக் கண்ணாடி முன் சென்று பார்த்து விட்டு நழுவின மேலாடையைச் சரிசெய்து கொண்டு கிளம்பினாள். "ராணி யார் எங்கே புறப்பாடு?"

"இன்று ஷா ஹாலில் பால்ரூம் டான்ஸ்!" என்று சொல்லிக் கொண்டே டாக்ஸியில் ஏறி விநோத் பாபுவின் பக்கத்தில் அமர்ந்தாள். மறுகணம் விர் என்று டாக்ஸி பறந்தது. இவைகளைக் கண்ட ரகுராமனின் மனம் அடிபட்ட பறவைப் போல் ஆயிற்று. 'தன்னை ஒரு பெண் எவ்வளவு அலட்சியமாக நடத்துகிறாள், எல்லாவற்றிற்கும் காரணம் தானே தான்'—ஞானம் பிறந்து அகந்தை ஒழிந்தது. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்தது. இன்னும் மீறி போகவில்லை. அதற்குள் ஒரு வழி செய்ய வேண்டும் என்று

நிச்சயித்து, அவள் பின்னால் போக வேண்டும் என்று ஒரு பேபி டாக்ஸியில் ஏறினான். டாக்ஸி ஷா ஹாலின் முன் நின்றது. அவனுக்கு சில்லறை கொடுத்துவிட்டு உள்ளே சென்றான். அங்கே நடக்கும் கோலாகலத்தில் தான் வந்ததை யாரும் கவனிக்கவில்லை என்றறிந்தும் திருப்தியடைந்தான். அனசூயா இல்லை, அன்சூ—ஓர் தனியறையில் சென்று மேல் நாட்டுப் பாணியில் உடையணிந்து மெள்ள மெள்ள துவண்டு வந்து கொண்டிருந்தாள். அவள் பார்வை குடி போதையில் உள்ளவள் போலவும், அவள் ஆடை அலங்காரம் அலங்கோலமாகவும் இருந்தன. அவள் மேல் ஒருவித துர்நாற்றம் வீசத் தொடங்கியது. மெதுவாக நழுவிக் கொண்டே விநோத் பாபுவின் கரங்களைப் பற்றினாள். விநோத் அவளை தன்பால் இழுத்து அணைத்துக் கொண்டான்.

இக் காட்சியைக் கண்ட ரகுராமன் '' அனசூயா! அனசூயா! நில்! நில்!'' என்று கத்தினான்.

5

படுக்கை எல்லாம் தெப்பமாக நனைந்து விட்டது. விவரம் தெரியாத அனசூயா அவனைத் தட்டி எழுப்பினாள்.

ரகுராமன் அவளைப் பார்த்து மிரள மிரள விழித்தான்.

'' உங்களுக்கு என்ன உடம்பு? ஏன் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டீர்கள்? இப்படிப் பேசாமல் மௌனமாயிருந்தால் என்ன அர்த்தம்?'' என்று திகிலுடன் கேட்டாள் அன்புடைய மனைவி.

'' அனு, என்னை மன்னித்து விடு. என் கண்கள் திறந்து விட்டன. நீ சொன்னவை எல்லாம் உண்மை தான்! நம் தமிழ்ப் பண்பாடு—பாரதப் பண்பு தான் இனி என் லட்சியம்!...'' என்றான் ரகுராமன்.

அனுசூயாவின் முகத்தில் புதிய களை தோன்றியது. ★

உங்கள் அதிருஷ்டம் 1958க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1.25-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்காலபலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.



Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM
(U. M.) HOSHIARPUR (Pb.)

ரூ. 6-00 ஒரு கை கடிகாரம்

ரூ. 6-00-க்கு 5 வருடம் உத்திரவாதமுள்ள 15 ஜுவல் கை கடிகாரத்தை சங்கிலித் தொடர் திட்டத்தில் பெறுங்கள். தபால் செலவு ரூ. 1-25 நயா பைசா தனி. இத்திட்டம் பாரடைஸ் வாசனை திரவியங்களை அறிமுகப் படுத்த விளம்பரம் செய்யப் படுகிறது. திருப்தி இல்லையெனில் பணம் வாபஸ் செய்யப்படும்.

AMERICAN TRADING COMPANY,
(WATCH SUPPLIERS-UM) JULLUNDUR

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

'உமா' வில் நீங்கள் செய்து வருகிற பரிசோதனைகளையும் புது முயற்சிகளையும் கவனித்து வருகிறேன். என் பாராட்டுதல்கள். 'சந்தித்தோம்; சிந்தித்தோம்' பயனுள்ள பகுதி. எழுத்தாளர்களின் அபிப்பிராயங்களை ஒலி பரப்புவதற்கு ஏற்ற அரங்கமாக அது விளங்குகிறது. இந்த இதழில் திரு. ஆர்வி தம் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லியிருப்பது போற்றத் தகுந்தது.... ம. ரா. போ. குருசாமியின் 'இலக்கியச் சுவை' கட்டுரைகள் நன்ருக இருக்கின்றன.... 'மாயாவி' யின் தொடர் கதை 'வாடா விளக்கு' சுவாரஸ்யமாக இருக்கிறது. கதை வளரும் முறை நன்று.

வல்லிக்கண்ணன், சென்னை-5.

....ஆசிரியரின் தலையங்கம் உணர்ச்சிச் சுழிப்போடு விளங்கிற்று. மாநாட்டுக்குப்போய் வந்த பெருமையும் அடியேனுக்கு உண்டு. தங்களது 'தம்பிக்கு' கடிதம் இம்மாதம் இல்லாதது கண்டு ரொம்பவும் துயரப்பட்டேன்.

மு. கந்தசாமி, தஞ்சாவூர்.

....தாங்கள் பொங்கல் மலர் வெளியிடும் செய்தி என்னைப் பெரிதும் கவர்ந்தது. அது பற்றிய குறிப்பில் என்னுள்ளத்தையே தத்தம் செய்து விட்டேன்.

தென்னவன், செம்பொன்னர் கோவில்.

பேட்டிக் கட்டுரை தனி ரகம். 'ஆர்வி' யும் அழ. வள்ளியப்பாவும் துணிந்து சொல்லியிருக்கிருர்கள். 'பூவை' துணிந்து எழுதியிருக்கிருர். இந்தத் துணிவு வேண்டும்.

''ஜாதி ரோஜா'' வின் ஓர் இதழின் மணத்தை நுகர்ந்தேன். நல்ல திறமையுடன் வசனம் எழுதப்பட்டுள்ளது. நாடகமேடை ஏறப் போவதையறிய மிக்க மகிழ்ச்சி. தேன்மொழி நல்ல படைப்பு.

'ஆலமரத்துப் பைங்கிளி' ஆவலைத் தூண்டும் வகையில் முடிக்கப்பட்டுள்ளது. முழுவதும் படிக்க வேண்டும்.

'சிலம்புச் செல்வரின்' கட்டுரை சரியான சமயத்தில் வந்துள்ளது.

எஸ். என். பி.

லயோலா கல்லூரி, சென்னை-31.

....'இந்தி மொழிச் சிக்கலிலே ராஜாஜியும் ம. பொ. சி.யும்' என்ற உபதலையங்கத்தைக் கண்டு வியப்புற்றேன். தமிழ் நாட்டின் அரசியல் எப்படி எப்படி மாறுகிறது என்பதைத்தான் நாம் இதன் மூலம் அறியமுடிகிறது.

கு. நல்லேந்திரன், திருச்சி.

....'பூவை' படைத்த 'ஆலமரத்துப் பைங்கிளி' கதை அழகாக அருவி நடையாக ஆழமான கருத்துக்களைத் தாங்கி வந்திருக்கிறது. இதைச் சொல்லும் பாணியே அலாதி; அற்புதம். 'அழகேசன் தேன்மொழி!' — வாடாத மலர்; வற்ருத கலையுள்ளத்திற்கு அதிபர் 'பூவை' என்பதற்கோர் எடுத்துக்காட்டு. 'தமிழ் ஒளி' யின் கவிதை கன்னித் தமிழ் பேசுகிறது! 'அஞ்சலி' அற்புதமான படைப்பு.

வனமாலிகை குலசேகரம்.

உங்களுக்கு எங்கள் நன்றி!

விமரிசனம் :

மகாதேவி

'வருகிறது – போன் : 4039' என்ற புதுமுறை விளம்பரம் ஒன்று; திரு எம். ஜி. ஆர்.— சாவித்திரி இருவரும் முதல் தடவையாகத் திரையில் சந்திப்பது இன்னொன்று—ஆக இவ்விரண்டு அதிசயங்கள் 'மகாதேவி' யின் வருகைக்கு முன்னும் பின்னும் நிகழ்ந்தன.

'சரித்திரம் திரும்புகிறது' என்பதாக ஒரு வாசகம் வழக்கில் இருந்துவருகிறது. சமூகக்கதாநாயக—நாயகிகளுக்கு சரித்திரப் போர்வையிட்டுச் சரித்திரக் கதைகள் ஜோடிப்பார்கள்: பண்டைய ராஜ்யங்களின் பெயர்கள்கூடத்திரித்துக் கூறப்பெறும்; சரித்திர புருஷர்களின் நினைவுகளுக்கு கதாசிரியர்கள் திரையிட்டு விடுவார்கள். சரித்திர ஆராய்ச்சி செய்வதற்குஇவர்கட்கு ஏதுநேரம்? —தமிழில் ஆராய்ச்சிக்கண் கொண்டு சரித்திரத்தைத் தொடும் திறமை பூண்ட அறிமுகமான ஆசிரியர்களைத்தவிர, மற்றவர்களுக்காகவே மேற்படி வரிகள் எழுதப் படுகின்றன. முகமதியக் கதைகள் என்றால் 'ஆலம்பானு' 'ஜி' போன்றவற்றைப் போட்டு விட்டுத் தப்பி விடுவார்கள். இலக்கிய உலகத்திலேயே சரித்திரம் இப்படி தரித்திர நிலையில் அவதிப்படுகிறதென்றால், திரையுலகைப் பற்றிய அறிமுகம் தேவைதானா?

நூற்றில் ஒரு பங்கு சரித்திர உண்மை கொண்டதாகக் கூடச் சரித்திரப் பின்னணிப் படம் இதுவரை வரவில்லை. இந் நிலையிலே மகாதேவியை மாத்திரம் எவ்வாறு விலக்கு விதியாக்க முடியும்?

சோழ, சாளுக்கிய நாட்டுப் பகைப் புலனில் பகைமைக்கும் நட்புக்குமிடை காதல் தோன்றி, தோன்றிய காதல் ஊர்ந்து, தாம் பத்தியம் உருவான பின்னர், போட்டியும் மாற்றான் மனைவியைச் சூறையாடும் பண்பும் தலைவிரி

'சாரங்கதாரா'

சம்பூர்ண ராமாயணம்

கோலமாகக் காட்சி தரும் கதை.

தளபதி வல்லபனாக எம். ஜி. ஆர் நடிக்கிறார். சாவித்திரி தான் மகா தேவி. காதல் கட்டங்களில் நடிப்பதற்கு நம் நட்சத்திரங்கள் வெகுவாகப் பழக வேண்டும். புது ஜோடியின் காதல் காட்சிகளை ரசிக்க முடியவில்லை. பள்ளியறையில் நடனமாடுவார்களா, என்ன? புரட்சி நடிகரின் கத்திச் சண்டைகளுக்காக படம் 'ஓடிய' காலம் மலையேறி நாட்கள் பல ஆகி விட்டன. வீரப்பா தான் வில்லன். மகாதேவியில் அவர் படம் தயாரிப்பாளருக்கு நிறைவு தந்திருக்கலாம்.

திருமதி சாவித்திரியை விட எம். என். ராஜம் இப்படத்தில் உணர்ந்து நடிக்கிறார்.

முத்துலட்சுமிக்கு 'முக்காடு' போட்டு 'விளையாடும்' கட்டங்களும், பொய்க் காதல் செய்யும் சந்திரபாபுவின் நகைச்சுவையும் தேவையில்லை. கதையின் இறுதிப் பாகத்துக்கு எம். என். ராஜத்துக்கு முகத்தை மூட வேறு உபாயம் தேடியிருக்கலாமே! ஏ. கருணாநிதி குதிப்பதை நிறுத்தவும் வார்த்தைகளை சுத்தமாக-அமைதியாகப் பேசவும் சொல்லிக் கொடுக்க வேண்டும். சந்திரபாபு பெரும்பாலான இடங்களில் நேர்த்தி. தேவருக்கு பாகம் குறைவு. மாஸ்டர் முரளிக்கும் அந்தப் பாம்புக்கும் நிறைய மதிப்பு கொடுக்க வேண்டும்.

இந்தச் சாதாரணக் கதைக்கு வேறு 'மூலம்' ஏனோ? கவிஞர் கண்ணதாசனின் கவிதை நடை உரையாடலைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

வில்லோடு கணையும் ஏந்தி நடந்தான்
விஜயகுமாரன் அபிமன்பு;
வீரனின் பிரிவில் சுபத்திரை கொண்ட
வேதனை சொல்லும் தரமன்று;

ஆராரோ அன்பே ஆராரோ
ஆராரோ அன்பே ஆராரோ!

தி. மு. க. கவிஞரின் இப் 'புரட்சி'யை வரவேற்கிறோம். கண்ணதாசன் அல்லவா?

'மகா'—'தேவி', தேவியாக மாத்திரமே அமைந்து விட்டாள்!

—பைரவி ★

திருக்குறள்

டாக்டர் மு. வ. தயாரித்த திருக்குறளின் சிறு வடிவப் புத்தகம்தான் முதன் முதலில் வெளியானது. அதற்கப்புறம் பலர் 'திருக்குறள் சேவை' புரிந்துள்ளனர். நாமக்கல் கவிஞரின் விரிவான புது உரை பிரசித்தமானது. இப்போது புது உரைச் சுருக்கம் வெளியாகியிருக்கின்றது. பதிப்பகத்தினர் கூறியுள்ள மாதிரி, இந்நூல் மாணவர்களுக்கும் குறள் கற்றுக்கொள்பவர்களுக்கும் பயன்படும். ஒரு பக்கத்தில் சுருக்கத்தையும் எதிர்ப் பக்கத்தில் கவிதைகளையும் அமைத்திருப்பது நல்ல முறை.

ஆசிரியர்: நாமக்கல் கவிஞர், வெளியீடு: கவிஞர் பதிப்பகம், கோவை; விலை: ரூ 2.

காதலும் கலியாணமும்

காதல்—கலியாணம் என்ற இவ்விரண்டு பதங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பு பூண்டவை—பெரும்பாலான வகையில். சிலருக்கு இவை இரண்டும் ஒரே இனத் துருவங்களாக அமைவதும் உண்டு. காதலைப் பற்றியும் கலியாணத்தைப் பற்றியும் புகழ் பெற்ற பேனாக்கள் கருத்துரை தந்துள்ளன. திருமணப் பரிசுக்கென சேகரம் செய்து புத்தகத்தை வெளியிட்ட பெருமை திரு. முல்லை முத்தையா அவர்களைச் சாரும்.

வெளியீடு: தமிழகம், சென்னை-1 விலை ரூ. 1.

வள்ளுவர் நிழல்

வள்ளுவர் நிழலில் ஒண்டிய தமிழ்ப் பேரறிஞர்கள் சிலரின் இலக்கியப் பணிக்கு ஏற்றம் கொடுக்கும் வகையில் அமர்ந்திருக்கிறார் பன்மொழிப் புலவர். வள்ளுவப்பெருந்தகையின்காலம், சமய ஒளி, அரசியற் கருத்துக்கள் ஆகிய மூன்று அத்தியாயங்கள் விரிவுடனும் ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனுடனும் எழுதப் பெற்றிருக்கின்றன. தமிழறிஞர்களையும் மேலைநாட்டு இலக்கிய வல்லுனர்களையும் அங்கங்கே தொட்டுக் காட்டிக் குறித்திருக்கிறார் ஆசிரியர். பன்மொழிப் புலவரின் இலக்கிய மனம் ஒரு பல்கலைக் கழகம் என்று முன்னம் குறிப்பிட்டோம். இதே புத்தகத்தின் அடுத்த தொடராக, வள்ளுவர் நிழலில் விட்டுப் போன பகுதிகளைப் பற்றியும் ஆராய்ந்து எழுத வேண்டும்.

ஆசிரியர்: கா. அப்பாத்துரை, வெளியீடு: ஔவை நூலகம், சென்னை-1; விலை: ரூ. 2.

—பிறைசூடி.

கோஹினூர்

சாதாரணக் கிட்டிப் புள்ளாக இருந்த ஒரு கிராம விளையாட்டு, கொஞ்சம் இலக்கணம் அமைத்துக் கொண்ட பின்பு அதுவே உலகத்து நாகரிக விளையாட்டான 'கிரிக்கெட்'டாக மாறிற்று. இந்தக் கிட்டிப் புள்ளுக்குக் கிடைத்த இலக்கணம் கூட இல்லாமல் இருக்கும் தொழில் ஒன்று இருக்கிறது. அது எழுத்துத் தொழில். இலக்கணம் இல்லையென்றாலும், பண்பைப் பகைப் புலனாக வைத்து, எழுத்தை இலக்கியமாக மாற்றும் வேலையை கையாளுகின்ற காலத்திற்குத் தகுந்தபடி மேற்கொண்டிருக்கிறார்கள் எழுத்தாளர்கள்.

பெரியவர்களுக்காக எழுதும் எழுத்தில் பண்பு ஒன்றை மட்டும் மையமாக வைத்து, சுற்றுக் கோடுகளில் எந்த விதமாகவும் சுற்றி வரும் சுதந்திர எழுத்தாளரும் உண்டு. குழந்தைகளுக்கு எழுதும் போது மையம் என்றும், சுற்றுக் கோடு என்றும் பல பகுதிகளை வைத்துக் கொள்ள முடியாது. ஒரே ஒரு கோடுதான் உண்டு. தீமைவிளைவிக்காத கட்டுப்பாட்டில் நீளும் ஒரே கோடு தான் குழந்தை இலக்கியத்தின் வெற்றிக் கோடு.

பூவை எஸ். ஆறுமுகம் ஒரே கோட்டில் நின்று 'கோஹினூர்'

என்ற நெடுங் கதையை குழந்தை இலக்கியத்தின் பெருமையைச் சொல்லும் செஞ் சொற் சித்திரமாக ஆக்கியிருக்கிருர்.

பூவையின் நடையில் எப்பொழுதுமே மனோரம்மியமான மணம் உண்டு. அதிகமான நெடியில்லாமல் உணர்ச்சியால் ஊடாடி, உளம் கலந்து விடுகிற பக்குவம் அதற்கு உண்டு. இந்தக் கதையில் அவர் நடை, கண்ணீரைத் துடைத்து, நன்றி மறவாமல் வாலைக் குழைக்கும் தோழன் கோஹினூரின் உடம்பைத் தடவித் தந்து, பூபாலன் என்ற பையனின் வீர தீரச் செய்கைகளில் நடமிட்டு, அன்புத் தோழி பூங்கோதையின் பண்பிலே நனைந்து, குழந்தைகளின் உள்ளத்தையே ஓர் ஆடலரங்காகச் சமைக்கும் மயன் வேலையைச் செய்திருக்கிறது.

தம் குழந்தைகளைச் சான்றோர் எனக் கேட்க விரும்பும் தந்தைமார்கள், அவர்களுக்கு 'கோஹினூர்' வாங்கிக் கொடுத்துப் பார்க்கட்டும். நல்ல 'கோஹினூர் வைரமாக' ஜ்வலிப்பதைக் கண்டு மகிழலாம்.

வெளியிட்டோர்
கம், 4/41, பிர
விலை : 75

"க
பூங்
அத
லு
ப
பூ

'ஒற்றை ரோஜாப்பூ'வை நம்மிடம் படைத்து உலாவ விட்டிருக்கிருர்.

காதலை அடிவானம் என்பவரும் அதை வாழ்க்கையின் அடித்தளம் என்பவரும், இரண்டு துருவ நிலைகளில் இருந்து தான் சொல்கிருர்கள் என்ருலும், அந்த இருவருடைய வாழ்க்கையிலும் காதல் எப்படியோ, ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டுத் தான் இருக்கிறது. அதைத்தான் பூவையின் மல்லிகா விளக்குகிருள்.

ஆசிரியர் குறிப்பிடத் தக்க சி
நல்ல கருத்துரைகளைச் சொ
கதையின் ஒவ்வொரு பா
தையும் சிறந்த முறையி
படுத்தி யிருக்கின்ற
உயர்வு. ஆனல் ஒரே
வர்ணனை இரண்
களில் திரும்ப
தவிர்த்திருக்கல

இந் நூலுக்கு
னுரை அளித்
வெளியிட்
மது

பொறுப்பற்ற உலகம்

சுப்பு ஆறுமுகம்

ும், ஆதரவாயிருந்த அன்னையும் பிரிந்
ாட் தாள். தனி வாழ்க்கை. இப்போது
ப் னும் தனது அத்தா
இனிய நினைவு

ண்ணையும்
கவன்;
கம்பெ
பணி
டம்
பணி
ங்கு
து
ா

களது திருமணத்தை மானசீகமாக எண்ணி சுவரில் சாய்ந்தவாறே ரசித்துக் கொண்டிருப்பாள். "அந்தக் காட்சியை சீக்கிரம் பாக்கணுமே!" இதுதான். அந்தக்கிழட்டுக் குழந்தை சதா பயின்று கொண்டிருக்கும் மழலைப்பேச்சு?

அவர்களது சந்திப்பிலே—

"அத்தான் ஒரு சேதி....!"

"என்னது? கல்யாண சேதி தானே! அடுத்தது நல்ல மாதம் தான்....!"

"அதை இப்பொழுது யாரு கேட்டது? நீங்க ரொம்ப பொல்லாத ஆளா இருக்கிறீங்களே. குழந்தையாக்குறீங்க. குழந்தையாகுறீங்க. என்ன இருந்தாலும் கட்டுப் பாட்டுடன் பழகுவது தான் நல்லது; அத்தான், உலகம் உங்கள் வீட்டு முற்றமல்ல."

"அப்படியானுல் முற்றத்தையே உலகம் ஆக்கிக் கொண்டால் போகிறது!"

"குறும்புத்தனம். நீங்க எப்படித்தான் எட்டு மணி நேரமும் இந்தக் குறும்புகளை அடக்கிக் கொண்டு கம்பெனியில் வேலை செய்கிறீங்களோ! சரி....போங்கள். பாட்டி தேடுவார்கள், இருட்டி விட்டது."

"காதலர்களும் கள்ளர்களும் பூனை மாதிரி. இரவில் தான் நன்ருகக் கண் தெரியும். கோகிலா! நாள், கிழமை, நட்சத்திரம் யாவும் காலண்டரிலேயே இருக்கட்டும். இன்றே....இப்பொழுதே....!"

"என்ன?"

"ஆம், நாம் இருவரும் புருஷன்-மனைவியாக!..."

"போங்க அத்தான்!" என்று வெட்கத்துடனும், உண்மை உறவுடனும் தூரப்பிடித்துத் தள்ளினுள்.

"இரு....இரு" என்று அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டி விட்டு, தன் வீட்டுக்குப் புறப்பட்டான்.

நடந்து கொண்டிருக்கும் போதே சிந்தனை!

இவ்வளவு தூய்மையாகப் பழகும் கோகிலாவை இந்த உலகம் குறை கூறுகிறதே!

ஒருவேளை அதுவும் உண்மையாக இருக்குமோ?

அவன் மனம், அவனை எங்கோ இழுத்துச் சென்றது.

*   *   *

அன்று நள்ளிரவு.

பயங்கரமான அமைதி. இதயத்தையும் இருட்டாக்கத் தக்க இருள். வாசலில் பூத்திருக்கும் மல்லிகை மலரின் இதழ்களும், மணம் வீசிய அயர்வினுல், ஓய்ந்து சாய்ந்து உலர்ந்து கொண்டிருந்தன. பிரளயத்தின் பிறகு நிலவ வேண்டிய மோனம். இத்தனைக்கும் இடையே புரண்டால் 'நற நற' எனப் பல்லைக் கடிக்கும் நார்க் கட்டிலில், கோகிலா குழம்பிய மனத்தினளாய் குப்புறவும் நிமிர்ந்தும் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள். சன்னலிலிருக்கும் சின்னக் கடிகாரம் 'டக்-டக்' என அவள் மனத்தை எதிரொலித்துக் கொண்டிருந்தது. கொசுக்களுடைய தொல்லைக்குப் பயந்து சின்ன விளக்கையும் பத்து மணிக்கே அணைத்து விட்டாள்.

லேசாக கதவு திறக்கும் சத்தம் கேட்டது. எழுந்தாள். விளக்கேற்ற நெருப்புப் பெட்டியைத் தேடினுள். அகப்படவில்லை. ஒரு துணிகரமான கை அவளைப் பிடித்து இழுத்தது. திமிறிப்போய் விளக்கேற்ற முயன்ருள். தீப்பெட்டி கிடைக்கவில்லை.

திறந்து கிடக்கும் வாசல் வழியாக, வெளியே ஓட எத்தனித்தாள். முதலடி எடுத்து வைப்பதற்குள்ளேயே முந்தானை பறிக்கப்பட்டது. பிறகென்ன? குஞ்சுக் கோழியின் இறகுகளை கசாப்புக் கடைக்காரன் பிய்த்திழுக்கும் போது சிறிக்குரல் கொடுக்குமே, அதுபோன்ற அவலக்குரல்.

தப்ப முடியவில்லை.

தொட்டான்.

பலவந்தமாக அவனைப் பிடித்து வெளியே தள்ளினாள். கதவைப் 'படார்' என்று வேகமாகச் சாத்தி தாழிட்டாள்.

பெருமூச்சு.

அவளால் நிற்க முடியவில்லை. மயக்கம். கீழே சாய்ந்தாள்.

சில நிமிஷங்களில்......

எங்கிருந்தோ நரியின் ஊளை! பேயின் கூக்குரல்!

மயக்கம் இலேசாகத் தெளிந்தது.

எழுந்தாள்.

புழுவானாள்—துடித்தாள்.

''ஐயோ!'' என்று தன் தலையில் அறைந்து கொண்டாள்.

* * *

மறுநாள் அதிகாலை.

எப்பொழுதும் போல குமரன் கோகிலாவின் வீட்டுக்கு வந்தான்.

கதவைத் திறந்தான்.

அவளைக் காணோம்.

சுற்று முற்றும் பார்த்து மெதுவாக அடிமேல் அடி எடுத்து வைத்தான். உள்ளே எங்கும் காணோம். அடுக்களையில் போய்ப் பார்த்தான். அவனது களஞ்சியத்தை அங்கேயும் காணோம்.

மேஜைப் பக்கம் வந்தான்.

அதில் ஒரு கடிதம்—எடுத்துப் பிரித்தான்.

''அத்தான்!

நான் நுகரப்பட்ட மலர் ஆகிவிட்டேன். புனிதமான உங்களுக்கு இனி நான் தகுதியற்றவள். எங்கேனும் போய் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். என்னை மன்னிப்பீர்களா?

இப்படிக்கு

[illegible] களது நடைப்பிணம்

கோகிலா!''

''கோகிலா'' என்று தலை தெறிக்க பைத்தியம் போல ஓடினான் குமரன்.

197227

காட்டுப் பக்கம். ஜன சந்தடியே இல்லாத இடம்.

அதோ, ஒரு பாழுங் கிணறு; அதை நோக்கி ஓர் அபலை ஓடிக் கொண்டிருந்தாள். ஓடித்தொடர்ந்தான். ஆம்; அவள் கோகிலா தான்! அவளைத் திமிர விடாமல், பதறும் தன் கைகளால் பிடித்துக் கொண்டான்.

''இதென்ன கோகிலா?''

''நான் மகாப் பாபியாக்கப்பட்டு விட்டேன். புனிதம் இழந்த என்னை மறந்து விடுங்கள்''—அவனது பிடிகளை விலக்க முயன்றாள்.

''கோகிலா, நான் சொல்வதைக் கேள். பள்ளியில் உன்னுடன் வேலை பார்க்கும் சக ஊழியருக்கும் உனக்கும் தொடர்பிருப்பதாக உலகம் கதை கட்டியது. அதை நம்பினேன். அந்த ஊழியர் ஒவ்வொரு நாள் நள்ளிரவும் உன்னை வந்து சந்திப்பதாகவும் உலகத்தார் கற்பனை பேசினார்கள். அதையும் நம்பினேன். நேற்று அந்த நேரத்தில் வந்தது நான் தான்; உன்னைச் சோதிப்பதற்காகத் தான் வந்தேன். கோகிலா! உன் மாசில்லாத தன்மையை இப்போது தான் புரிய முடிந்தது. பொறுப்பற்ற உலகம் என் புத்தியைக் கெடுத்து விட்டது. இனி நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன். என் மனம் என்னைச் சித்திரவதை செய்கிறது, வா. இன்றே மணமக்கள் ஆவோம். முதலில் என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தை சொல்''

சில விநாடிகள் மௌனம்.

மன்னித்தேன் என்ற வார்த்தை அவளிடமிருந்து வரவே இல்லை. சலன மற்ற முகத்துடன் அவனை ஒரு பார்வை பார்த்தாள்—திரும்பினாள்.

அவளது கால்கள் எங்கோ நடந்து கொண்டிருந்தன.

தொடர்ந்தான்—மேலும் தொடர முடியவில்லை.

அவள் ஒரு கன்னியர் சேவா சங்கத்தினுள் போய்விட்டாள். ★


நான்கு நன்மணிகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
Z·AMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 --- சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 3200.

கலை அழகு மிகுந்து கவர்ச்சிகரமாகத் திகழ "பாக்கேஜிங்"

நீங்கள் தயாரிக்கும் சரக்குகளை விற்பனைக்கு அனுப்புவதற்கு முன்பாக, அழகுறச்செய்ய ஏன் ''பாக்கேஜிங்'' நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்கக்கூடாது?

உமா பிரிண்டர்ஸ் எந்தச் சரக்கிற்கும் ஏற்ற எழிலான தோற்றமும், பாதுகாப்புடன் கூடியதுமான, எல்லாவித அட்டைப் பெட்டிகள் தயார் செய்யத் தேவையான இயந்திர வசதி படைத்தவர்கள். நெடு நாளைய அனுபவம் உடையவர்கள். அவர்களைக் கலந்து ஆலோசியுங்கள். உங்கள் பணிபுரிய என்றும் உற்சாகத்துடன் இருப்பவர்கள்

உமா பிரிண்டர்ஸ்

ஸ்தாபிதம்: 1945

உமா இல்லம், சென்னை-1, (தமிழ்நாடு).

தென்னிந்தியாவில், அச்சிட்ட கலர் 'கார்ட்டன்'கள், அட்டைப் பெட்டிகள் யாரிப்பதில் முதன்மையானவர்கள்.

எங்களிடத்தில் ஓவியம், பிளாக்குகள் மற்றும் அச்சுவேலைகளுடன், ஆப்ஸெட் பகுதியும் உள்ளது.



Regd. No. M 6309 UMA December 1957
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் கிடை